உ

9-5-69

ஓம் குமாராய நம. ஓம்

உ

குகமயம்

ஸ்ரீகுமரகுருபரசுவாமிகள்

அருளிச்செய்த

கந்தர் கலிவெண்பா

சென்னைக் கிறிஸ்டியன்காலேஜ் மாஜி தமிழ்ப்பண்டிதரும்

உரையாசிரியரும்-சைவப்பிரசாரகருமாகிய

மகாவித்துவான்

ஈக்காடு-இரத்தினவேலு முதலியார் குமாரர்

பிரசங்க சண்டமாருதம்-புராணிகர்

வித்துவான்

ஈக்காடு-சபாபதி முதலியார் எழுதிய

விருத்தியுரையுடன்

அ. முத்துவடிவேல் முதலியாரால்

பூமகள்விலாச அச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை:

Copy Right.]

1937

ரிஜிஸ்டர் காபிரைட் அறிவிப்பு

இதனால் சகலமான அச்சுக்கூடத்தலைவர்களுக்கும் மற்ற வர்களுக்கும் தெரிவித்துக்கொள்ளுவது யாதெனில்:—"கந்தர் கலிவெண்பா" என்னும் இந்நூலுக்கு, வித்துவான்-ஈக்காடு. சபாபதி முதலியார் அவர்களைக்கொண்டு உரை எழுதுவித்து ஷையாரிடம் சர்வ சுதந்திரமும் பெற்று யான் அச்சிட்டு மகாகனம் பொருந்திய கவர்ண்மென்டார் அவர்கள் சட்டப் படிக்குக் காபிரைட் செய்து வெளிப்படுத்தி யுள்ளேன். ஆகையால் இதனை என் உத்தரவின்றி வேறு யாரும் அச்சிடக் கூடாது என்பதை தெரியப்படுத்தி யிருக்கின்றேன்.

இப்படிக்கு

அ. முத்துவடிவேல் முதலியார்

24, தாண்டவராயப்பிள்ளை வீதி,

சென்னை.

முகவுரை

வடவேங்கடந் தென்குமரி யாயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து உத்தமக் கவிகளிற்றலைமை பெற்றுக் கவிச்சக்கரவர்த்திகளில் ஒருவராக எண்ணப்பட்டவரும் சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானச் செல்வருமாய் விளங்கிய காசிமடாலயத்து மூலபுருஷருமான குமர குருபர சுவாமிகள் தாம் பிறந்து ஐந்தாண்டளவும் ஊமையாயிருந்து பின்பு செந்திலாண்டவன் பிராமணவடிவங்கொண்டு தம் சொப்பனத்தில் எழுந்தருளி குமர குருபரா என்று விளித்து நாவில் சடாட்சர மந்திரத்தை எழுதி மறைய, ஊமைத்தன்மை நீங்கப்பெற்றுத் தாய்தந்தையரை அம்மா! அப்பா! என்று அழைத்துத் தாம் கண்ட சொப்பனத்தை அறிவிக்க, அவர்கள் அகமிகமகிழ்ந்து சுவாமிகளைத் திருச்செந்தூருக்கு இட்டுக்கொண்டுபோய் அங்குச் செந்திலாண்டவன் ஆலயத்தில் விட, ஆண்டவனைக் கண்டவளவில் உவகை பொங்கித் ததும்பியதுமன்றிக் கந்தப்பெருமான் திருவருள் வாய்க்கப்பெற்றுச் சுயமே பாடல் பாடும் சக்தியுண்டாகிச் செந்திற் பரமனைப் புந்தியிலிருத்திப் பலவகையானும் புகழ்ந்து ஸ்துதிசெய்து அவன் புகழ் கொண்டாடிச் சைவசித்தாந்தத் திட்ப நுட்பங்களையும் சாராம்சங்களையும் செறித்துக் கந்தபுராணத்தையும் சமத்காரமாகச் சுருக்கிச் சொன்னயமும் பொருணயமும் மற்றென்னயமும் ஒருங்கேயமைய நண்ணிய தீஞ்சுவை யமுதமேயென்னப் பத்திச்சுவை சொட்டச் சொட்ட அதியற்புதமாகத் திருவாய் மலர்ந்தருளினர்.

இந்நூலாசிரியர் செந்திலாண்டவன் திருவருள்வாய்க்கப் பெற்றவ ரென்பதும், அத் தெய்வத்திருவருளானே தமிழ் மொழியில் மிக்க தேர்ச்சியும் பழந்தமிழ்நூல்களில் நல்ல பயிற்சியும் அந்நூல்களில் கண்டவற்றையும் தமது அனுபவத் தால் அறிந்த விஷயங்களையும் இனிது எடுத்துரைக்குந் திறமையும், வரகவித்தன்மையும், நாவன்மையும், பாவன்மை யும் ஒருங்கே வாய்க்கப் பெற்றமையும், சர்க்கரைப் பந்தலில் தேன்மாரி சொரிந்ததுபோல நவரசமும் பொருந்தச் சபா பிரசங்கஞ் செய்யும் வன்மையும் அதிவிசித்திர கற்பனலங் கிருதமமைந்த கவிமழை பொழியும் பேராற்றலும், சொற் சோர்வுபடாமை, அவையஞ்சாமை முதலியன பெற்று விளங்கினாரென்பதும், பல அற்புதங்களியற்றினா ரென்பதும் வடமொழியிலும் இந்துஸ்தானி முதலிய வேறுபாஷைகளி லும் அவருக்குப் பயிற்சியுண்டென்பதும் முருகக்கடவுள் திருவருளுக்குப் பாத்திரமானதோ டமையாமல் உலோக மாதாவாகிய மீனாட்சியம்மையார், காசிவிஸ்வநாதர், திருக் கேதாரேஸ்வரர், சரஸ்வதியம்மையார், காளி இவர்கள் அனுக் கிரகம் பெற்றமையும் அவரருளிச்செய்த பிரபந்தங்களினாலும் அவர் திவ்ய சரித்திரத்தாலும் நன்கு புலப்படும்.

சுவாமிகளியற்றிய பிரபந்தத்திரட்டில் முதன்மையா யுள்ள கந்தர் கலிவெண்பாவானது பால்ய பிராயத்தில் பாடப் பட்டமையானும் அதிலும் செந்திலாண்டவர் திருவருள் வாய்க்கப்பெற்றுத் திருவாய்மலர்ந்தருளியதாதலானும் இவ் வொப்புயர்வற்ற திவ்ய நூலுக்கு அதிக மகத்துவம் வாய்க்கப்

பெற்றுள்ளது. இந்நூலை நாடோறும் பத்தியோடு பாரா யணஞ் செய்பவர்களுக்கு எக்காலத்திலும் அகால மரணமும், இடையூறுகளும், நோய்களும், உண்டாகமாட்டா. பில்லி சூனியம் ஏவல்களாலும் விஷ ஜந்துக்களாலும் பூதபைசாசங்க ளாலும் பஞ்சபூதங்களாலும் துஷ்ட மிருகங்களாலும் துன்பங் கள் உண்டாகமாட்டா. ஒருகால் ஊழ்வினைவலியால் மேற்கூறிய வற்றுள் ஏதாயினுமொன்று எவ்விடத்திலேனும் எக்காலத்தி லேனும் வந்து எதிர்க்குமாயின் அவ்விடத்திலேயேஅக்காலத்தி லேயே முருகப்பெருமான் அவர்கள் விஷயமாக அவர்கட்குண் டான அல்லலையகற்ற ஆறுமுகங்களோடும் பன்னிரண்டு திருக் கரங்களோடும் மயில்வாகனருடராய் எழுந்தருளி வந்து அவர்களுடைய துன்பங்களையெல்லாம் நிர்மூலமாக்கி அவர் கோரும் சகல வரங்களையும் அவர்களுக்குப் பாலித்து உல்லாச மாக அவர்கள் மனத்தின்கண் எழுந்தருளி ஆசு, மதுரம், சித்திரம், வித்தாரம் ஆகிய நாற்கவிகளியற்றும் வல்லமையும் அவதானமியற்றும் ஆற்றலும் பஞ்ச இலக்கணத்தோடு கூடிய முதிர்ந்த தமிழ்ப்புலமையையும் பாலித்து இருவாதனைகளை யும் மும்மலங்களையும் நாசஞ்செய்து தொன்றுதொட்டு அடிமைத்திறம் பூண்டோர்களான பழைய அடியார்களுடன் சேர்த்துப் பரபோகத்தை அனுபவிக்கச் செய்து திருவடி தரிசனங்காட்டி அடிமைகொண்டு திருவருள் செய்வானென் பது ஆன்றோர் கொள்கை. ஏனெனின்,

"செந்திற் பதிபுரக்குஞ் செவ்வேளே-சந்ததமும்
பல்கோடி சன்மப் பகையு மவமி ருத்தும்

பல்கோடி விக்கினமும் பல்பிணியும்-பல்கோடி
பாதகமுஞ் செய்வினையும் பாம்பும் பிசாசுமடற்
பூதமுந்தீ நீரும் பொருபடையுந்-தீதகலா
வெவ்விடமுந் துட்ட மிருகமுத லாமெவையும்
எவ்விடம்வந் தெம்மை யெதிர்ந்தாலு-மவ்விடத்திற்
பச்சைமயில் வாகனமும் பன்னிரண்டு திண்டோளும்
அச்ச மகற்று மயில்வேலும்-கச்சைத்
திருவரையுஞ் சீறடியுஞ் செங்கையு மீராறும்
அருள்விழியு மாமுகங்க ளாறும்-விரிகிரணஞ்
சிந்தப் புனைந்த திருமுடிக ளோராறும்
எந்தத் திசையு மெதிர்தோன்ற-வந்திடுக்கண்
எல்லாம் பொடிபடுத்தி எவ்வரமுந் தந்துபுகுந்
துல்லாச மாக வுளத்திருந்து-பல்விதமாம்
ஆசுமுத லாற்கவியு மட்டாவ தானமுஞ்சீர்ப்
பேசுமியல் பல்காப் பியத்தொகையும்-ஓசை
எழுத்துமுத லாமைந் திலக்கணமுந் தோய்ந்து
பழுத்த தமிழ்ப்புலமை பாலித்-தொழுக்கமுடன்
இம்மைப் பிறப்பி லிருவா தனையகற்றி
மும்மைப் பெருமலங்கள் மோசித்துத்-தம்மைவிடுத்
தாயும் பழையவடியா ருடன் கூட்டித்
தோயும் பரபோகந் துய்ப்பித்துச்-சேய
கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி யாட்கொண்
டடியேற்கு முன்னின் றருள்"

என்று இந்நூலாசிரியர் முதலில் முருகப்பெருமானைப் பல வகையினும் புகழ்ந்து வழிபட்டு இறுதியில் அவரைவேண்டிக் கோடலினால் அவருக்கு அவரபீஷ்டப்படியே அருள்பாலித்த

பெருமான் தமக்கும் அவ்வாறே அருள்பாலிப்பாரென்னும் முழுநம்பிக்கை கொண்டுள்ளார்க ளாகலினென்க. எனவே, பாராயணஞ் செய்பவர்கள் முருகக்கடவுள் திருவருளுக்கு இலக்காவரென்பதும் சௌபாக்கிய பாக்கியங்களையும் இகபர போகங்களையும் அனுபவிப்பாரென்பதும், சகல சத்திகளும் சித்திகளும் அடைவாரென்பதும் இறுதியில் மோக்ஷசாம்ராஜ்ஜியத்தை யெய்துவார்களென்பதும் பெறப்பட்டது.

கலியுகத்தில் சகல தெய்வங்களுந் தத்தமக்குரிய வலிமை குன்றி யிருக்குமென்றும் ஆனால் முருகக்கடவுள் மாத்திரம் ஏனைய தெய்வங்களைப்போல வலிமை குன்றாதிருப்பரென்றும் ஏனைய யுகங்களில் அவருக்கு இருந்த வலிமை பேராற்றல் தெய்வத்தன்மை அடியவர்கட் கருள்பாலித்தல் ஆகியவை களைக்காட்டிலும் இக்கலியுகத்தில் சிறந்து விளங்குவாரொன்றும் சமய நூல்களை ஐயந்திரிபறக் கற்றுக் கல்வி கேள்விகளிற் சிறந்தோர் கழறுவர். இன்னோரன்ன பல காரணங்களால் முருகக்கடவுளைக் கலியுகவரதர் எனக் கற்றோர் கூறுவர்.

மேலும், "சுக்குக்கு மிஞ்சின மருந்தில்லை சுப்பிரமணியனுக்கு மிஞ்சின தெய்வமில்லை" எனச் சாமானியரும் சாற்ற நாம் கேட்டதில்லையா? அன்றியும் முருகக்கடவுள் "நோக வுரையான் நோகக்கண் பார்த்திடான்" எனத் திருப்போரூர்ச் சந்நிதிமுறையில் சிதம்பர சுவாமிகள் கூறியபடி முருகக் கடவுளை வழிபடுவோர்க்கும் அவனுக்குரிய வழிபாட்டு நூல்களைப் பாராயணஞ் செய்பவர்களுக்கும் ஒருகாலும் துன்பமே வாராது. ஒருகால் ஆகூழ் போகூழ் ஆகியவற்றா . னேற்படி

னும் அதுவும் மலைபோன்றதாயிருந்தாலும் காணப்பட்டாலும் பனிபோல இருந்த இடம் தெரியாமல் ஓடி ஒளிந்துவிடும். அன்றியும், ஆபத்துக்கள் தலைமட்டாக வந்தாலுஞ் சரி அவை முடிமட்டாக நீங்கும். இதனாலன்றோ தலை தப்பியது தம்பிரான் பாக்கியம் எனக் கூறுகின்றனர். அதையும் நாம் கேட்டதில்லையா?

கந்தர் கலிவெண்பாப் பிரதிகளில் "கல்வியில் விருப்பமுடையவர்கள் இதை நாடோறும் பாராயணஞ் செய்வார்களாக" என நூல் ஆரம்பத்திலேயே அச்சிட்டிருப்பதைச் சகலரும் பார்த்திருக்கலாம். இதனாலே இந்நூல் எத்துணைச் சிறப்புடைத்தென யாவரும் அறிந்துகொள்ளலாம்.

கல்வியில் அபீஷ்டமுடையவர்களும் தங்கள் குறைகளை நீக்கிக்கொள்ளப் பிரியப்படுபவர்களும் கந்தர் கலிவெண்பாவை நாடோறும் நியமமாகப் பக்தி பூர்வமாய்ப் பாராயணம்பண்ணி வருவது இக்காலத்திலுங்கூட வழக்கமாக இருக்கின்றது. இதனாலே ஆசிரியர் சிறப்பும் நூற்சிறப்பும் வெள்ளிடை மலைபோற் றெள்ளிதின் விளங்குகின்றனவன்றோ?

கந்தர் கலிவெண்பாவின் பெருமையை யெடுத்துச் சொல்ல ஆயிரம் நாக்களைப் படைத்த ஆதிசேடனாலும் முடியாதென்றால் ஒன்றுக்கும் உதவாத புழுத்த நாயினுங் கடையேன் குகப்பெருமான் புகழ் மலிந்த இந்நூலின் மகிமையை என் ஒரு நாவினால் விஸ்தரித்துரைத்தல் சாத்தியமாமோ? சுவானுபூதிச் செல்வர்களுக்கே இந்நூலின் பயனை அறிதல் கூடும்.

இத்தகைய சிறந்த நூலுக்குச் சகலருக்கும் விளங்கும்படியான முறையில் ஒரு விருத்தியுரை எழுதித் தருமாறு ஏறகெனவே கந்தரநுபூதி, கந்தர் சஷ்டிகவசம், கந்தரலங்காரம், கந்தர் அந்தாதி, திருமுருகாற்றுப்படை முதலிய கந்தப்பெருமான் புகழ் நூல்களுக்கு வித்வான்களைக்கொண்டு உரை யெழுதி வெளிப்படுத்திய அ. முத்துவடிவேல் முதலியாரவர்கள் கேட்டுக்கொண்டபடி அடியேன், திருவருளை முன்னிட்டு கல்வி கேள்விகளிற் சிறியேன் பண்டிதர்களின் பாததூளியாகிய அடியேன் மறப்பெனுங் கள்வன் வாரிக் கொண்டதுபோக எஞ்சிய சிற்றறிவிற் கியன்ற அளவில் உரை கண்டேன். இந்நூற்கு உரைகாணுங் காலத்து 'நான் இது செய்வேன்' என்னுந் தற்போதம் என்னிடத்து எப்போதும் நிகழாமையை யான் அறிவேன்; என்னெஞ்சறியும்; என்னுள்ளங்கவர் கள்வனுமறிவன்.

இதில் பதவுரை, பதசாரம், சொன்னயம், பொருணயம், விசேடவுரை, இலக்கணக்குறிப்பு, இலக்கணவிளக்கம், முதலியவற்றையும் அமைத்துள்ளேன். பல ஸ்தலபுராணங்கள், பல இலக்கியங்கள், பல இலக்கணநூல்கள், பல சங்கநூல்கள், திருக்குறள், தேவாரம், திருவாசகம், சித்தாந்த சாஸ்திரம் என்னும் மெய்கண்ட சாஸ்திரம் இவற்றினின்றும் பல மேற்கோள்களை எடுத்துக் காட்டியுள்ளேன்.

அமிழ்தினு மினிக்கும் அருந்தமிழ் நாட்டில் வதியும் அனைவர்க்கும் கீழவனாக எண்ண ஒருவன் உண்டெனின், அவன் யானே. அன்றியும் "செம்மை நலம் அறியாத

சிதடன்" "கல்லாத அறிவிற் கடைப்பட்ட நாயேன்" "நுண் மாண் நுழைபுலம் இல்லான்" என்பனவாதியாய உயர்வுடையோர் பணித்தமை யாவும் எனக்கே உரியன. இத்தகைய யான் இயற்றிய உரையில் அறியாமை காரணமாகக் குற்றங் குறைக ளிருத்தலுங் கூடும். அது விஷயமாக முற்று முணர்ந்த மூதறிவாளர்கள் என்பொருட் டல்லாமல் சைவ சமயத்திற்குப் பெரும்பாடு பட்டவரான என் தந்தையாரும் சிவபாராக்கிரமம் முதலிய நூல்களுக்கு ஆசிரியருமான சென்னைக் கிறிஸ்டியன் காலேஜ் மாஜி தமிழ்ப்பண்டிதரும் உரையாசிரியரும், சைவப்பிரசாரகருமாகிய மகாவித்துவான் ஈக்காடு-இரத்தினவேலு முதலியாரவர்கள் பொருட்டாகிலும் அடியேனை மன்னித்து ஆசிகூறி அன்புடனே யாட்கொள்வார்களாக. பக்தர்கள் பல்லாண்டிசைக்க. பொங்கும் மங்களம் எங்குந் தங்குக.

சுபம்! சுபம்!! சுபம்!!!

ஈக்காடு-சபாபதி முதலியார்.

திருச்செந்தூர்க்

கந்தர் கலிவெண்பா

திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா என்பது மூன்று சொல் இரண்டு சந்தியாய்த் தொக்க அன்மொழித்தொகையாய் நூற்குக் காரணக்குறியாய் வந்தது.

திருச்செந்தூர்க் கந்தர் என்பது திருச்செந்தூரி லெழுந் தருளிய கந்தரென்றேனும், திருச்செந்தூரை யிடமாகவுடைய கந்தரென்றேனும் விரிக்கப்படும்; திருச்செந்தூரி லெழுந் தருளிய கந்தர் என விரித்தால், ஏழாம் வேற்றுமைத்தொகை யாகவும், திருச்செந்தூரை யிடமாகவுடைய கந்தரென விரித் தால் இரண்டாம் வேற்றுமை உருபும் பயனு முடன்றொக்கத் தொகையாகவும் கொள்ளப்படும். இன்னும் இதனைத் திருச் செந்தூர்க்குரிய கந்தர் என விரித்து நான்காம் வேற்றுமைத் தொகையாகக் கொளினு மமையும்.

ஸ்கந்தர் என்னும் ஆரியமொழி தமிழில் கந்தர் என வந்தது. கந்தர் என்ற பெயர்க்குக் காரணமும் அப்பெயர்க் குரிய விசேடமும் இந்நூலுரையிற் காட்டியுள்ளோம். ஆதலின் இத்திருநாமத்தின் விசேடத்தை இந்நூலுரையிற் காண்க.

கந்தர் கலிவெண்பா வென்பது கந்தரது கலிவெண்பா வென்றேனும், கந்தரைக் குறித்துப் பாடிய கலிவெண்பா வென்றேனும் விரிக்கப்படும்; கந்தரது கலிவெண்பாவென விரித்தால் பொருட் பிறிதின் கிழமைப்பொருளதாகிய ஆறும் வேற்றுமைத் தொகையாகவும், கந்தரைக் குறித்துப் பாடிய

கலிவெண்பாவென விரித்தால் இரண்டாம் வேற்றுமை உருபும் பயனு முடன்றொக்கத் தொகையாகவும் கொள்ளப்படும். இன்னும் இதனைக் கந்தருக்குரிய கலிவெண்பா என விரித்து நான்காம் வேற்றுமைத் தொகையாகக் கொளினுமமையும்.

வெண்பாவில் ஒரு பிரிவாகிய கலிவெண்பாவால் இந்நூல் அமைந்து 244-அடிகளில் முடிந்துள்ளது. வெண்பாவானது பாவகை நான்கனுளொன்று; அவை: வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, வஞ்சிப்பா வென்பன. வெண்பாவை முதற்பா வென்றும் பிராமண சாதிப்பாவென்றும் வழங்குப.

கலிவெண்பா வென்ற பெயரானே மீனாக்ஷியம்மைக் கலி வெண்பா, திருவருணைக் கலிவெண்பா முதலியனவுள்ளன. இவையன்றியும் பல போற்றிக் கலிவெண்பாக்களு முள்ளன.

திருச்செந்தூர் என்பது, திருப்பரங்குன்றம், திருச் செந்தூர், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை என்னும் ஆறு படைவீடுகளில் இரண்டாவது படைவீடாக வுள்ளது. இத் திவ்ய க்ஷேத்திரத்தைத் திருச் செந்தில் எனவும் திருச்சீரலைவாய் எனவுங் கூறுவர்.

திரு என்னும் பலபொருளொருசொல் வடமொழியிலே ஸ்ரீ என்பது போலத் தமிழிலே தேவர்கள் அடியார்கள் ஞானநூல்கள் புண்ணிய ஸ்தலங்கள் முதலிய மேன்மையை யுடைய எப்பொருட்கும் விசேடண மொழியாகி அவற்றிற்கு முன்னர் மகிமைப்பொருளை யுணர்த்திவருமாகலின் செந்தூர் என வாளா கூறாது திருச்செந்தூர் எனப்பட்டது. இத் திவ்ய

க்ஷேத்திரத்தின் புகழ்ச்சியையும் இங்குத் திருக்கோயில் கொண் டெழுந்தருளியிருக்கும் செந்திலாண்டவன் புகழ்ச்சியையும் இந்நூலிற் பல இடங்களிலும் பரக்கக் காணலாம். அன்றியும்,

திருமுருகாற்றுப்படை

"வைந்துதி பொருத வடுவாழ் வரிநுதல்
வாடா மாலை யோடையொடு துயல்வரப்
... ...
... ...
உலகம் புகழ்ந்த வோங்குயர் விழுச்சீ
ரலைவாய்ச் சேறலு நிலைஇய பண்பே."

என்னும் 48 - வரிகள் ஈண்டு நோக்கத்தக்கன. இத்தல வைபவத்தையும் இங்கெழுந்தருளியிருக்கும் செந்திற் பரமன் வைபவத்தையும் கந்தப் புராணத்திலும் திருச்செந்தூர்ப் புராணத்திலும் காதலா மலகமாகக் காணலாம்.

இனிக் கந்தர் கலிவெண்பா என்பது தன்னலாகிய நூற்கு ஆகுதலால் கருவியாகு பெயராமெனவுங் கொள்ளப்படும்.

குமர குருபர சுவாமிகள் சரித்திரம்

பாண்டிய நாட்டிலே ஸ்ரீவைகுண்டத்திலே சைவ வேள்ளாளர் குலத்திலே சண்முகசிகாமணிக் கவிராயருக்குத் திருச்செந்தூர் முருகக்கடவுள் திருவருளால் அவர் கற்பிற் சிறந்த மனைவியாராகிய சிவகாமசுந்தரியாரிடம் ஓர் அரும் புதல்வர் அவதரித்தனர். அப்புதல்வரைப் பெற்றோர்கள் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாய்ப் பாராட்டிச் சீராட்டி வந்தார்கள். அப்புதல்வர் ஐந்துவயதளவும் அழுவதும் பேசுவதும் ஒன்றும் இல்லாதிருந்தமையால் ஊமையெனத் தெளிந்த பெற்றோர் தமது புதல்வரைத் தம்முடன் இட்டுக்கொண்டு திருச்செந்தூரை யடைந்து முருகக் கடவுளைக் கண்களாரத் தரிசித்து மனமாரச் சிந்தித்து வாயாரத் துதித்து, "தடங்கருணைப் பெருங்கடலே! ஆறுமுகம் படைத்த கோவே! இப்புதல்வனுக்கு ஊமைத்தன்மை நீக்கியருளவேண்டும்; அப்படி நீக்கா திருப்பீராயின், நானும் என் மனைவியும் உமது சந்நிதானத்திலேயே உயிரை மாய்த்துக் கொள்வோம்" என்று கூறினர். அவர்கள் கடவுளின்மேல் பாரத்தைப் போட்டதோடு நில்லாமல், நாடோறும் செந்திலாண்டவனைத் திரிகாலங்களிலும் தரிசித்து வழிபட்டு வந்தனர். அவர்கள் வந்தனை வழிபாட்டிற்கிரங்கி ஒருநாள் செந்திலாண்டவன் சூரியனுதிக்க ஒரு யாமம் இருக்கும்போது குழந்தை சொப்பனத்தில் ஒரு பிராமணராய் வடிவங்கொண்டு எழுந்தருளிவந்து "குமர குருபரா" என்று கூப்பிட்டு அக்குழந்தையின் நாவிலே சடாக்ஷரத்தை யெழுதிவிட்டு மறைந்தருளினர். உடனே அக்குழந்தை நித்திரைவிட் டெழுந்திருந்து பெற்றோர்களைத் தட்டி எழுப்பி அவர்களிடம் தான்

கண்ட சொப்பனத்தை சொல்லியருளியது. குமர குருபரன் என முருகப்பெருமானால் அழைக்கப்பட்டமையை யறிந்த பெற்றோர் அவரை யன்றுமுதலாகக் குமர குருபரர் என்றழைக்கவும் பிறகு அவ்வாறே யனைவராலும் குமர குருபர னென அழைக்கப்பட்டார்.

குழந்தைக்கு ஊமைத்தன்மை நீங்கினமையும் அது பேசத்தொடங்கினமையும் கண்ட தாய் தந்தையர் எல்லை யில்லா ஆனந்தங்கொண்டு அறுமுகச்சிவனார் திருமுகக் கருணையை அகமிக மகிழ்ந்து வியந்து புகழ்ந்து உடனே ஆசாரநியம நிஷ்டைகளை யெல்லாம் முடித்துக்கொண்டு புதல் வரையும் உடன் அழைத்துக்கொண்டு திருச்செந்தூர் முருகக் கடவுள் திருச்சந்நிதியை யடைந்து தரிசனஞ் செய்துகொண்டு நின்றார்கள். அப்போது குமர குருபரருக்குத் தமிழ்ச்செய்யு ளியற்றும் ஆற்றல் அமையப்பெற்று, சைவ சித்தாந்த சார மாய் விளங்கும் 'கந்தர் கலிவெண்பா' என்னும் திவ்ய பிரபந் தத்தை அப்பெருமான்மீது புகழ்ப்பா மாலையாகத் திருவாய் மலர்ந்தருளினர்.

குமர குருபரர் தமது பெற்றோருடன் திருச்செந்தூரில் வசித்துக்கொண் டிருந்ததுடன் சுவாமி தரிசனமும் திரிகால மும் தவறாமல் செய்துகொண்டு வந்தார். அக்காலத்தில் அவர் மிக இளைஞராயிருந்தும் அவ்விளமைப் பிராயத்திலேயே அவர் இல்லறத்தில் வெறுப்பும் துறவறத்தில் விருப்பும் உடையவராய் விளங்கியதுட னல்லாமல் தமக்கு ஞானாசாரியர் கிடைக்கத் திருவருள் புரியுமாறு முருகக்கடவுளைப் பிரார்த் திக்க, அக்கடவுள், "அன்பனே, நீ வடதேசயாத்திரை செய்யுங்கால், எவரிடம் உன் வாக்குத் தடைபடுகின்றதோ, அவரையே ஞானசிரியராகக் கொள்க" என்று அசரீரிவாக்கால்

அறிவித்தனர். இதனைக்கேட்ட சுவாமிகள் மனமகிழ்ந்து தம்முடைய பெற்றோர்களுடன் தங்கள் வாசஸ்தலமாகிய ஸ்ரீவைகுண்டத்திற்குத் திரும்பிவிட்டு அங்கேயே சிலகாலம் வசித்திருந்தனர்.

சுவாமிகள் ஒரு சமயம் மதுரைக்குப்போக விரும்பிப் பெற்றோர்களிடம் விடைபெற்றுக்கொண்டு தம் தம்பியாகிய குமாரகவிகளையும் உடன் அழைத்துக்கொண்டு போம்பொழுது மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் திருவாய் மலர்ந்தருளித் திருப்பரங்குன்றத்தில் வந்து தங்கினர். அக்காலத்தில் மதுரையை அரசாண்டு கொண்டிருந்த திருமலைநாயகர் சொப்பனத்தில் மதுரை மீனாட்சியம்மையார் எழுந்தருளி, குமர குருபரன் என்னும் குகனடியாரொருவன் தம் விஷயமாகப் பிள்ளைத்தமிழ் பாடிமுடித்துத் திருப்பரங்குன்றத்தில் வந்திருப்பதாகவும் அவனை மதுரைக்கு அழைத்து வந்து அப்பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தத்தைத் தமது சந்நிதியில் அரங்கேற்றுவிக்க வேண்டுமெனவும் கட்டளையிட்டருள, உடனே அவர் விழித்தெழுந்து ஆனந்தித்துத் தமது பரிவாரங்களுடன் திருப்பரங்குன்றத்துக்குச் சென்று சுவாமிகளைக் கண்டு வணங்கி சொப்பனத்தில் மீனாட்சியம்மையார் திருவாய்மலர்ந்தருளிய ஆக்ஞையை அவருக்கு அறிவித்து அவரையும் அவரியற்றிய மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழையும் யானையின் மேலேற்றிக்கொண்டு மதுரைக்கு இட்டுக்கொண்டு வந்து, மீனாட்சியம்மையார் சந்நிதியில் பிள்ளைத்தமிழை அரங்கேற்றுவித்தனர். அப்பிள்ளைத்தமிழின் வருகைப்பருவத்து ஒன்பதாவது செய்யுளாகிய,

"தொடுக்குங் கடவுட் பழம்பாடற்
றொடையின் பயனே நறைபழுத்த

துறைத்தீந் தமிழி னொழுகுநறுஞ்
சுவையே யகந்தைக் கிழங்கையகழ்ந்
தெடுக்குந் தொழும்ப ருளக்கோயிற்
கேற்றும் விளக்கே வளர்சிமைய
விமயப் பொருப்பில் விளையாடு
மிளமென் பிடியே யெறிதரங்க
முடிக்கும் புவனங் கடந்துநின்ற
வொருவன் றிருவுள் ளத்திலழ
கொழுக வெழுதிப் பார்த்திருக்கு
முயிரோ வியமே மதுகரம்வாய்
மடுக்குங் குழற்கா டேந்துமிள
வஞ்சிக் கொடியே வருகவே
மலயத் துவசன் பெற்றபெரு
வாழ்வே வருக வருகவே."

என்னுஞ் செய்யுளுக்குப் பொருளுரைக்கும்போது மீனாட்சி யம்மையார் அருச்சகரது பெண்போன்று திருக்கோலங் கொண்டு அரசர் கழுத்திலணிந்திருந்த மணிவடத்தைக் கழற்றிக் குமரகுருபரர் கழுத்திலிட்டு மறைந்தருளினார்.

திருமலைநாயகர் சுவாமிகளுக்குச் சுவர்ணபிஷேகம் செய்து யானை, குதிரை, சிவிகை, குடை, கொடி முதலிய பல விருதுகளையும் கொடுத்தனர். பிறகு நாயகர் வேண்டுகோளுக் கிணங்கி மீனாட்சியம்மையார் விஷயமாக மீனாட்சியம்மை குறம், மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை என்னும் இரண்டு பிரபந்தங்களையும் சோமசுந்தரக்கடவுளைத் துதித்து மதுரைக் கலம்பகம் என்னும் பிரபந்தத்தையும் திருவாய் மலர்ந்தருளினர்.

ஒருநாளையதினம் திருமலைநாயகர் வெகுநேர பரியந்தம் ஆகாரம் செய்யாமலிருப்பதைக்கண்ட சுவாமிகள் "வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி, தொகுத்தார்க்கும் துய்த்த

லரிது" என்னும் திருக்குறளை யெடுத்துச் சொல்ல, திருமலை நாயகர் கேட்டு அகமகிழ்ந்து தமக்குத் திருக்குறளை முற்றும் வாசித்துணருவதற்கு நேரமில்லை யென்றும் ஆகையால் திருக் குறளைச் சுருக்கி ஒரு நீதி நூல் இயற்றி யருளவேண்டுமென் றும சுவாமிகளை வேண்டிக்கொள்ள அதற்கிணங்கி நீதிநெறி விளக்கம் என்னும் நூலைத் திருவாய்மலர்ந்தருளி அவர் கரத்திலளித்து அவர்க்கு உவகை யூட்டினர்.

பிறகு சுவாமிகள் தம் சகோதரராகிய குமார கவிகளைத் தமது ஜனன க்ஷேத்திரமாகிய ஸ்ரீவைகுண்டம் என்னும் திருக்கைலாச புரத்திற்குப் போகும்படியும் அங்கு இல்லற மார்க்கத்தில் ஒழுகும்படியும் கட்டளையிட்டு விடைகொடுத் தனுப்பிவிட்டு திருவாரூர் சென்று தியாகேசப் பெருமானை வணங்கித் திருவாரூர் நான்மணிமாலை என்னும் பிரபந்தத் தைப் பாடி முடித்து, தருமபுர மடாலயத்திற்குச் சென்று அங்கே அக்காலத்தில் பண்டார சந்நிதிகளா யெழுந்தருளி யிருந்து ஸ்ரீ மாசிலாமணி தேசிகரது திருமுன்பே சென்று அவர் கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் தக்க பதில் சொல்லிக் கொண்டு வந்து இறுதியில்,

பெரிய புராணம்

"ஐந்துபே ரறிவுங் கண்களே கொள்ள
வளப்பருங் கரணங்க ணன்குஞ்
சிந்தையே யாகக் குணமொரு மூன்றுந்
திருந்துசாத் துவிகமே யாக
விந்துவாழ் சடையா னாடுமா நந்த
வெல்லையி றனிப்பெருங் கூத்தின்
வந்தபே ரின்ப வெள்ளத்துட் டிளைத்து
மாறிலா மகிழ்ச்சியின் மலர்ந்தார்."

என்னும் அருமைத் திருவிருத்தச் செய்யுளை எடுத்துக் கொடுத்துப் பொருள் வினவ, அதற்குப் பொருள்கூற

அறியாது குமாருருபரர் வாக்குத் தடைபட்டது. உடனே முருகக்கடவுள் அனுக்கிரகித்தபடி வாய்த்தது என்றெண்ணி, தேசிக மூர்த்திகளே தமது ஞானாசாரிய மூர்த்திகளென் றுணர்ந்து சாஷ்டாங்கமாக நமஸ்கரித்து வாய் பொத்திக் கைகட்டிக்கொண்டு நின்று தமக்கு ஞானாசிரியராக வேண்டு மென்று பிரார்த்தித்து வணங்க, அதற்குத் தேசிகமூர்த்திகள், காசியாத்திரை முடித்துவந்தால் அனுக்கிரகிப்பதாகக் கூற, அதற்குச் சுவாமிகள் காசியாத்திரை செய்து திரும்புமளவும் உயிருடனிருப்பது நிச்சயமன் றாகலானும், இறந்தபின் மீண்டும் இம்மனிதயாக்கை வாய்ப்பதென்பதும் துர்லபமாக லானும் அப்படி வாய்ப்பினும் ஸ்ரீமத் தேசிகரையே ஞானா சிரியராகப் பெறுவதும் நிச்சயமில்லை யாகையாலும் காலஹரணஞ் செய்யாது அனுக்கிரகிக்க வேண்டுமென்று மன்றாட, சுவாமிகள் வார்த்தையால் மனமிரங்கிய மாசிலாமணி தேசிகர், "அங்ஙனமாயின் சிதம்பர க்ஷேத்திரத்திற்காயினும் சென்று ஒரு மண்டல காலம் அங்கு வசித்துக்கொண்டிருந்து பிறகு இவ்விடம் வருவாயாக. இங்கு வந்தவுடன் ஞானோபதேசஞ் செய்வோம்" என்று கூற, அரிதின் இசைந்த அவரது ஆக்ஞைப்படி சிதம்பரஞ் செல்லப் புறப்பட்டுச் சிதம்பரத் திற்குச் செல்லும் வழியிலே வைதீசுவரன் கோவிலென்னும் திருப்புள்ளிருக்கு வேளூரை யடைந்து திருக்கோயிலினுட் சென்று வைத்தியநாத சுவாமிகளையும் தையனாயகி யம்மை யாரையும் முத்துக்குமார சுவாமியையும் தரிசித்து வந்தனை வழிபாடுகளியற்றிப் பிறகு அந்த ஸ்தலத்தைவிட்டுப் பிரயாண மானார். அச்சமயம் முத்துக் குமாரசுவாமி குமரகுருபர ரிடம் அருச்சகர் வடிவங்கொண்டு எழுந்தருளிவந்து அவர்க்கு விபூதி யளித்து, "நம்மைக் குறித்து ஒரு பிள்ளைத்தமிழ் பாடுவாயாக" என்று கட்டளையிட்டு மறைந்தருள, தம்முன்

றேன்றி மறைந்தவர் முத்துக்குமார சுவாமியே என்று தெளிந்து, புழுத்த நாயினுங் கடையேன் எவ்வாறு பிள்ளைத் தமிழ் பாடுவேன். ஆகையால் தேவரீரே முதலடி யெடுத்துக் கொடுக்க வேண்டுமெனப் பிரார்த்திக்க, முத்துக்குமாரசுவாமி "பொன்பூத்த குடுமி" என்று முதலடி யெடுத்துக் கொடுக்க, அதனையே முதலாகக்கொண்டு ஆங்கெழுந்தருளி யிருக்கும் முத்துக்குமார சுவாமியின்மேல் பிள்ளைத்தமிழ் பாடினர். அப்பிள்ளைத்தமிழே முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் எனப்படும். அப்பிள்ளைத்தமிழை அம்முத்துக்குமாரசுவாமி சந்நிதியிலேயே அரங்கேற்றிச் சிதம்பரத்திற்குச் சென்று நடராஜப் பெருமானைத் தரிசனஞ் செய்துகொண்டு வசிக்கும் நாளில் நடராஜர்மீது சிதம்பர மும்மணிக்கோவை என்னும் நூலை இயற்றினர். அக்காலத்தில் சுவாமி தரிசனார்த்தமாகத் தினந்தோறும் தமது பரிசனங்களோடு செல்லுவார். அவர் போகும் வழியிலே ஒரு புராணிகரால் புராணப் பிரசங்கம் தினந்தோறும் நடைபெற்று வந்தது. அவ்வழியாகத் தினந் தோறும் வரும் சுவாமிகளைப் பிரசங்கம் சிரவணிப்போரனை வரும் கண்டு எழுந்து அவருக்கு மரியாதை செய்துகொண்டு வந்தார்கள். ஆனால், புராணிகர் மாத்திரம் சுவாமிகளுக்கு ஒரு நாளிலேனும் மரியாதை செய்ததே கிடையாது. இதனைக் கண்ணுற்ற சிவனடியார்கள் மிக்க மனவருத்த மெய்தினர். ஆனால், அவர்கள் அவரை அதற்குக் காரணம் கேட்க அஞ்சினர். எனினும், புராணப் பிரசங்கத்தைக் கேட்டு வருபவரான ஒருவர் மாத்திரம் அஞ்சாமல் அப்புராணிகரை நோக்கி, "புராணிகரே! தாங்கள் மாத்திரம் குமரகுருபரருக்கு என் மரியாதை செய்யாதிருக்கின்றீர்கள்? அதற்குக் காரணம் என்ன?" என்று கேட்க, அப்புராணிகர், "அவர் இலக்கணக்கவியா? வரகவிதானே" என்றனர். அதைக்கேட்டு

அச்சிவனடியார் மனம் பொறாது சுவாமிகளிடம் சொல்லினர். சுவாமிகள் அவர் சந்தேகத்தை நிவர்த்திக்க எண்ணிச் சிதம்பர செய்யுட்கோவை என்னும் ஒரு பிரபந்தத்தை இயற்றினர். புராணிகர் அப்பிரபந்தத்தில் மலிந்துள்ள அரிய இலக்கணங் களையும் சொன்னயம் பொருணயங்களையும் கண்டு தான் சுவாமிகள் விஷயமாகக்கொண்ட எண்ணம் தவறு என்று உணர்ந்து தாம் அவரிடஞ் சென்று மன்னிப்புக் கேட்க வேண்டுமென்று எண்ணி அவரிடஞ்சென்று அவர் திருவடி களில் சாஷ்டாங்கமாக விழுந்து நமஸ்கரித்து, "சுவாமிகாள்! தங்கள் பெருமை யுணராமல் அடியேன் ஏதோ தங்கள் விஷயத்தில் அபசாரப்பட்டதை மன்னிக்க வேண்டுமென்று பிரார்த்திக்க, சுவாமிகள் திருப்புன்முறுவல் செய்து, "புராணி கரே! மிக முயன்று அரிதில் பெறுவது இலக்கணக்கவி யென் பதையும் அங்ஙனமின்றி எளிதிற் பெறுவது வரகவி யென் பதையும் அறியீரோ! இஃதுணராமல் நம்மை யிகழ்ந்து உரைத்தீர்களாயினும் நீர் நம்மைத் துதித்தவரானீர்" என்றார் கள். அதுகேட்ட அப்புராணிகர் சுவாமிகளின் நற்குண நற்செய்கைகளையும் இலக்கண விற்பத்தியையும் பாவன்மை யையும் கண்டு அவர் ஒப்பாரும் மிக்காருமில்லாத புலவரேறு என்பதையும் சிவானுபூதிச் செல்வரென்பதையும் உணராமற் போனேனே என்று உள்ளூற மனவருத்தப்பட்டு அவருக்குச் சீடராயினர். அன்றுமுதல் அப்புராணிகர் சுவாமிகள் சிதம் பரத்தில் வசிக்கும் பரியந்தம் அவரிடம் நாடோறும் சென்று தரிசித்து அளவளாவிக் காலங்கழித்து வந்தார். பிறகு அப் புராணிகர் ஒருநாள் சுவாமிகளை நோக்கி, "பரமாசாரிய மூர்த்திகளே! நடராஜப் பெருமான் விஷயமாகச் சிதம்பர மும்மணிக்கோவை சிதம்பரச் செய்யுட்கோவை என்னும் இரண்டு நூல்களை இயற்றினீர்களே; அம்பிகையாகிய சிவகாமி

யம்மையார் விஷயமாக ஒரு நூலேனும் இயற்றப்படாதா!" என்று வேண்ட, அப்புராணிகர் வேண்டுகோட்கிணங்கி சிவகாமியம்மையார் இரட்டைமணிமாலை என்னும் நூலையும் பாடினார். அம்மூன்று நூல்களையும் ஒவ்வொன்றாக அங்கு அரங்கேற்றி ஒரு மண்டலகாலம் அந்த க்ஷேத்திரத்திலேயே வசித்துக்கொண்டிருந்து பிறகு தருமபுரஞ் சாரவும் மாசிலா மணி தேசிகர் அவருக்கு ஞானோபதேசஞ் செய்தனர். அக் கருணையை வியந்து தமது ஞானாசிரியர்மீது பண்டார மும் மணிக்கோவை என்னுஞ் சீரிய பிரபந்தத்தைத் திருவாய் மலர்ந்தருளி அதனை அவர் சந்நிதானத்திலே அரங்கேற்றினர். கேட்டு மகிழ்ந்த தேசிகமூர்த்திகள் அவருக்குக் காஷாயம் முதலிய துறவிக்குரிய சின்னங்களை அளித்தனர். சுவாமிகள், தமக்குமுன் ஆங்காங்கே பரிசாகக் கிடைத்த திரவியங்களை யெல்லாம் அந்த ஞானாசிரியர் திருவடிகளில் காணிக்கையாகச் சமர்ப்பித்தனர். தேசிகர் சுவாமிகளின் காணிக்கைகளை யேற்றுக்கொள்ளாமல், "இவற்றைக்கொண்டு காசியிற் சென்று தருமம் புரிக" எனக் கட்டளையிட, உடனே தருமபுரத்தி னின்றும் புறப்பட்டு இடையிலுள்ள பல சிவஸ்தலங்களிலும் சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு காசிக்ஷேத்திரமடைந்து கங்கையில் ஸ்நானஞ் செய்து விசுவநாதரையும் விசாலாட்சி யம்மையாரையும் தரிசித்து வணங்கி, காசிக் கலம்பகம் என்னும் ஒரு பிரபந்தத்தைத் திருவாய்மலர்ந்தருளினர்.

சுவாமிகள் அந்த க்ஷேத்திரத்தில் வசிக்குங்கால், காடு களால் மறைக்கப்பட்டிருந்த திருக்கேதாரத்தி லெழுந்தரு ளிய சிவபெருமான் அவர்க்குச் சொப்பனத்திலே தோன்றி, "அன்பனே! நாம் திருக்கேதாரத்தி லெழுந்தருளியிருக்குஞ் சிவபெருமான். நீ நம்மைப் பூசிப்பாயாக" என்று கட்டளை யிட, உடனே சுவாமிகள் திடுக்கிட்டெழுந்து திருவுள

மகிழ்ந்து திருவருளைப் புகழ்ந்து திருக்கேதாரத்திற்குச் சென்று காடுகளை அழிப்பித்து அதனடுவே எழுந்தருளியுள்ள திருக்கேதார நாதரைப் புகழ்ந்து பூசித்துத் துதித்தனர்.

அந்நகரத்தை அரசாண்டு வந்த முஸ்லிம் அரசனை டில்லிபாதுஷாவைக் கண்டு அவனிடம் வசனித்துக் காசியில் தருமமியற்றுதற்கு வேண்டும் இடம்பெற விரும்பினர். ஆனால் அவ்வரசனுக்குரிய இந்துஸ்தானி பாஷை தமக்குத் தெரியாததால் அப்பாஷையைத் தமக்கு உணர்த்தும்படி சரஸ்வதியின்மீது 'சகலகலாவல்லிமாலை' என்னும் புகழ்நூற் பாடிக் கலைமகள் கடாட்சத்தால் இந்துஸ்தானி பாஷையை அறிந்தவராகி டில்லிபாதுஷாவிடம் சென்றனர்.

அவன் சுவாமிகளின் பெருமையையும் தெய்விகத்தன்மையையும் உணராமல் அவருக்குத் தக்க மரியாதை செய்யாமல் சிங்காதனத்தின்மே லிருந்துகொண்டே சுவாமிகள் வந்த காரணம் கேட்டான். அதற்கு அவர் உம்மை ஆசிர்வதிக்க வந்தோம். எமக்கு மரியாதை செய்யாமலிருப்பது முறையோவென்ன, அதற்கு அரசன், "உம்மிடம் தெய்விகத் தன்மை கண்டாலன்றி உமக்கு மரியாதை கொடோம்" என்று கூற, சுவாமிகள் நாளையதினம் நமது தெய்விகத்தன்மையை உமக்குக் காட்டுவோம்" என்று சொல்லித் திரும்பிவிட்டனர். மறுநாள் சுவாமிகள் காளியை நினைக்கவும் அவள் ஓர் உயிருள்ள சிங்கத்தை யளிக்க, அதன்மேலாரோகணித்துக்கொண்டு அரசன் சபையில் செல்ல, அரசன் முதலிய அனைவரும் அவரிடம் தெய்வத்தன்மை யிருப்பதாக வுணர்ந்தனர். அரசனும் தக்க மரியாதை செய்தான். அவர் அரசசபையில் பலரும் ஆச்சரிய மெய்துமாறு பற்பல அற்புதங்களியற்றினர். அதனால் தமது மகிமையை அரசனுக்குப் புலப்படுத்திப் பல பிரசங்

கங்கள் செய்து அவனைத் தன் வசமாக்கி, அவனால் இடந்தரப் பெற்று அவன் கொடுத்த இடத்திலே குமாரசுவாமி மடம் என இப்போது வழங்குகின்ற பெரிய மடத்தையும் திருமலைநாயகர் சத்திரத்தையும் கட்டுவித்துத் தாம் காடு கெடுத்துக் கண்டு வணங்கிப் பூசித்த திருக்கேதாரநாதருக்கு ஆலயம் அமைப்பித்துக் காலந்தோறுஞ் சுவாமிதரிசனஞ் செய்துகொண்டு அத்தலத்திலேயே சிலகாலம் வசித்துக்கொண்டிருந்த பின்னர் மூன்றுமுறை தருமபுரத்திற்கு வந்து ஞானாசிரியரைத் தரிசித்து வணங்கித் துதித்துச் சிலகாலம் அவருடன் வசித்துக் கொண்டிருந்து, குருமூர்த்திகளை விட்டுப்பிரிந்து காசியிலிருக்க மனமில்லாமலிருப்பதைக் குறிப்பாலுணர்ந்த தேசிகமூர்த்திகள்,

> "காட்டிருந் தாலு மலையிருந் தாலுங் கருதரிய
> நாட்டிருந் தாலு நமக்கென்ன காணல்ல தோர்க்மலை
> வீட்டிருந் தாண்டருள் ஞானப்ர காசன் விரைமலர்த்தாள்
> கேட்டிருந் தாலும் பிறவா நெறிவந்து கிட்டிடுமே."

என்னுங் கட்டளைக் கலித்துறைச் செய்யுளைத் திருவாய்மலர்ந்தருளக்கேட்ட சுவாமிகள் ஒருவாறு மனந்தேறி நாலாவது முறை காசிக்குப்போய்ச் சிவதருமங்களும் சைவவளர்ச்சி கருதி அநேக காரியங்களும் சிவபூசையும் அடியார் பூசையும் அன்னதான முதலிய தருமங்களுஞ் செய்துகொண்டிருந்து ஒரு வைகாசித்திங்களில் கிருஷ்ணபட்சத் திருதியையில் முத்தி யெய்தினர்.

குமர குருபர சுவாமிகள் சரித்திரம்

முற்றிற்று.

உ

வேலுமயிலுந்துணை

கந்தர் கலிவெண்பா

(மூலமும் விருத்தியுரையும்)

பூமேவு செங்கமலப் புத்தேளுந் தேறரிய
பாமேவு தெய்வப் பழமறையும்-தேமேவு
நாதமு நாதாந்த முடிவு நவைதீர்ந்த
போதமுங் காணாத போதமாய்,

(பதவுரை) பூமேவு - அழகுபொருந்திய, செங்கமலப் புத்தேளும்-செந்தாமரை மலரில் வீற்றிருக்கின்ற பிரமதேவனும், தேற அரிய-தெளிதற்கருமையான, பாமேவு-சுத்தம் அமைந்த, தெய்வம்-தெய்வத்தன்மையுள்ள, பழ மறையும்-பழைய வேதமும், தேமேவும்-உயர்ந்த, நாதமும்-நாத தத்துவமும், நாதாந்த முடிவும்-நாதாந்தத்தின் ஈறும், நவை தீர்ந்த-குற்றம் ஒழிந்த, போதமும் - அறிவும், காணாத - உணர்தற்கியலாத, போதமாய்-அறிவாய்; (என்றவாறு.)

(விருத்தியுரை) இதனானே, பிரமதேவனும், வேதமும், நாததத்துவமும், நாதாந்தமுடிவும், அறிவு முணராத அறிவாம் என்றார். எனவே, பிரமதேவனுக்கும், வேதத்திற்கும், நாததத்துவத்திற்கும், நாதாந்த முடிவிற்கும், அறிவுக்கும்

அதிதப்பட்டது அவ்வறிவு எனப் பெறப்பட்டது. 'புத்தேள்' என்பதற்கு தேவன் எனப் பொருளாயினும், புத்தேள் என்பதை விசேடித்து நிற்கும் அடைமொழிகளான் எத் தேவரைக் குறித்துக் கூறுகின்றார் என்பதை உணரவேண்டும். எனவே, 'செங்கமலப் புத்தேள்' என்பதற்குப் பிரமதேவன் எனப் பொருள் உரைக்கப்பட்டது. இதனைப்போலவே,

திருவிளையாடற் புராணம்

''மின்பயில் குலிசப் புத்தேள்''

''வண்டுளறுந் தண்டுழாய் மாயோ னிறுமாப்பும்
புண்டரிகப் போதுறையும் புத்தே ளிறுமாப்பும்''

என்பவைகளிலும், 'மின்பயில் குலிசப்புத்தேள்' என்பதற்குத் தேவேந்திரன் எனவும் 'புண்டரிகப் போதுறையும் புத்தேள்' என்பதற்குப் பிரமதேவன் எனவும் பொருளுரைத்துள்ளதை யுணர்க. இவ்வாறே பலநூல்களிலும் வருதல் காண்க.

''மங்கல மொழிமுதல் வகுத்தெடுத் துக்கொண்ட
விலக்கண விலக்கிய
மிடுக்க ணின்றி யினிது முடியும்''

என்கிற சூத்திர விதிப்படி ஒரு நூல் இயற்றுங்காலத்து மங் கலச் சொல்லாற் றொடங்கிக் கூறுதல் முறையாகலின், இவ் வாசிரியரும் ஆன்றோர் மரபு வழுவாதபடி தாமும் இயற்றப் புகுந்த இந்நூலின் முதலிலேயே பூ என்னும் மங்கலச் சொல்லை வைத்துக் கூறினார். மங்கலச் சொற்கள் இருபத் திரண்டினில் பூ என்பதும் ஒன்று. மங்கலச் சொற்கள்

இருபத்திரண்டாவன: திரு, யானை, தேர், பரி, கடல், மலை, மணி, பூ, புகழ், சீர், மதி, நீர், எழுத்து, பொன், ஆரணம், சொல், புயல், நிலம், கங்கை, உலகம், பரிதி, அமிழ்தம் என்பனவாம்; இன்னும் மங்கலச் சொல்லின்வகையை,

வச்சணந்தி மாலை

"சீரெழுத்துப் பொன்பூ திருமணிநீர் திங்கள்சொற்
கார்பரிதி யானை கடலுலகம் - தேர்மலைமா
கங்கை நிலம்பிறவுங் காண்டகைய முன்மொழிக்கு
மங்கலமாஞ் சொல்லின் வகை"

என்னுஞ் செய்யுளானறிக. பூ என்பதற்கு, பூமி, புட்பம், அழகு, கூர்மை, பொலிவு, பிறப்பு, முதலிய பல பொருள்களு முளவாகலின், இது பலபொருள் குறித்த ஒரு பெயர்த் திரிசொல். பூமேவு - எழுவாய்த்தொடர். செங்கமலம்-பண்புத்தொகை. இதில் பண்புவண்ணம் குறித்து நிற்றலின் இது வண்ணப் பண்புத்தொகை. கருங்குதிரை யென்பது போல. செம்மை + கமலம் = செங்கமலம். இதற்கு விதி,

நன்னூல்

"ஈறு போத லிடையுகர மிய்யாதல்
ஆதி நீட லடியகர மையாதல்
தன்னொற் றிரட்டல் முன்னின்ற மெய்திரிதல்
இனமிக லினையவும் பண்பிற் கியல்பே"

என்னுஞ் சூத்திரத்தா னெனக். வேதம் குற்றமில்லாத தெய்வத்தன்மை பொருந்தியதும், அநாதியாக வுள்ளதுமாகலின், 'தெய்வப் பழமறை' என்றார்.

மலக்குற்றங்கள் நீங்கிய அறிவும் உணர்தற் கியலாத அறிவாம் என்பார், 'நவைதீர்ந்த போதமுங் காணாத போதமாய்' என்றார்.

அறிவு வடிவமானவரென்றும் அவ்வறிவு வடிவமானவரை, பிரமதேவனும், வேதங்களும், நாததத்துவமும், நாதாந்தத்தின் முடிவும் யாதொரு மலக்குற்றமுமின்றியொழிந்த அறிவும் அறிதற்கியலாது எனப் பரம்பொருளின் சிறப்பை உள்ளது உள்ளபடியே கூறினார்.

மறை - வேதம்; இது காரணப்பெயர். என்னை? சில குலத்தவர்க்கும் பெண்பாலார்க்கும் மறுக்கப்படுதலினால் மறையென்று பெயராயிற்றென்பர் ஒரு சாரார்; மறைந்த பொருளை உடைமையினால் மறையென்று பெயராயிற்றென்பார் மற்றொரு சாரார். எத்தன்மை யுடையவர்களும் வேதத்தைத் தெரிந்துணர்த லருமையாகலின் 'தேறரிய' என்றார். அல்லது பிரமதேவன் மேலேற்றி, அவன் மறைக்குரியவனாய் மறையவன் என்னும் பெயருடையவனாயிருந்தும் அவனாலும் அவ்வேதப்பொருளை யுணர்த லருமையென உணர்த்துவான் வேண்டி உம்மைகொடுத்துக் கூறினாரெனினுமமையும். வேதமானது, உதாத்தம், அநுதாத்தம், சுரிதம் அஃதாவது எடுத்தல், படுத்தல், நலிதல் என்னும் மூன்றும் உடையதாகலால் விளக்கம் பொருந்தியதென்பார், 'பாமேவு' என்றார். யாப்பமைந்தமையான் 'பாமேவு' எனக் கூறினாரெனினுமமையும். நாததத்துவமும் நாதாந்தத்தின்முடிவும் உயர்ந்ததாகலின், 'தேமேவு நாதமும் நாதாந்த முடிவும்' என்றார்.

மலக்குற்றத்தோடு கூடிய அறிவும் ஓரறிவன்றாகலானும், அம்மலக்குற்றத்தோடு கூடிய அறிவால் பேரறிவைக் காண முடியாதாகலானும், ஆகவே யாதொரு மலக்குற்றமுமின்றி அறவே யொழிந்த ஆன்மவறிவாலாயினும் உணரலாமோ வெனின் அவ்வறிவாலும் உணர்ந்தறிதற் கியலாத பேரறிவா மென்பார், 'நவைதீர்ந்த போதமுங் காணாத போதமாய்' என்றார். ஆன்மவறிவு மலக்குற்றம் பொருந்தியதாகலானும் அவ்வறிவு சிறிய அளவிற்றாகலானும் அதனின் வேறாய் யாதொரு குற்றமுமின்றி பேரறிவாய் விளங்குவதால் 'நவைதீர்ந்த போதமுங் காணாத போதமாய்' என்றார் எனினு மமையும். (1-4)

ஆதிநடு, அந்தங் கடந்தநித்தி யானந்த போதமா பந்தந் தணந்த பரஞ்சுடராய், [ய்

(ப-ரை) ஆதி-முதலும், நடு-இடையும், அந்தம்-கடையும், கடந்த-தாண்டிய, நித்திய ஆனந்த போதம் ஆய்-நித்தியானந்த ஞானமாகி, பந்தம்-பந்தத்தை, தணந்த-(இயல்பாகவே) நீங்கின, பரஞ்சுடராய்-பரஞ்சோதியாகி; (எ-று.)

(வி-ரை) 'ஆதிநடு அந்தம் கடந்த' என்பதற்கு, உற்பத்தி திதி நாசங்களைத் தாண்டிய எனப் பொருளுரைக்கினு மமையும். உலகத்திலுள்ளார் ஞானம் என்றும் ஒருபடித்தாயிராது. சிலநாள் அவர்களுடன் இருக்கும்; சிலநாள் அவர்களை அது விட்டு நீங்கும்; திரும்பவந்து சேரினும் சேரும். ஆனால், அத்தகைய ஞானம் போன்றதன்று இஞ்ஞானம் எனவும்

இஞ்ஞானம் எஞ்ஞான்றும் அழியாமல் ஒரேபடித்தாயிருக்கின்ற பேரின்ப அறிவாம் என வலியுறுத்துவார் 'நித்தியானந்த போதமாய்' என்றார். எனவே, முதல் இடை கடை என்பவைகளைக்கடந்த அஃதாவது ஆதிநடு அந்தத்திற்கு அதீதப்பட்டதெனவும், அஃது ஒழியாமல் என்றும் ஒரேபடித்தா யிருக்கின்ற பேரின்ப ஞானவடிவாம் என வலியுறுத்தவே 'ஆதிநடு அந்தங் கடந்த நித்தியானந்த போதமாய்' என்றார்.

தாயுமானவர் பாடல்

"தந்தைதாய் தமர்தார மகவெனு மிவையெலாஞ்
சந்தையிற் கூட்டமிதிலோ சந்தேக மில்லை"

என்றபடி இவர்களுக்கும் தனக்கும் யாதொரு சம்பந்தமுமில்லையெனவும் 'அவரவர் வினையின் அவரவர் வருவர்' என்றபடி வினைவழியே யாவும் நடைபெறுகின்றனவெனவும் எண்ணி ஞானிகள்,

பட்டினத்தார் பாடல்

"நாரியர்பால்
வீடேயிருப்பினு மெய்ஞ்ஞான வீட்டின்ப மேவுவரே"

என்றபடி இவ்வுலகத்தில் ஈடுபட்டு மனைமக்கள் உற்றார் உறவின்முறையாரோடு கூடி வாழ்ந்து வந்தாலும் புளியம் பழமும் அதன் ஓடும்போலப் பற்றற்றிருப்பர். அத்தகைய ஞானம் அவர்களுக்குக் கல்வியறிவாலும் ஞானநூலாராய்ச்சியாலும் இன்னோரன்ன பல ஏதுக்களாலும் ஏற்பட்டதே தவிர, இயற்கையாய் ஏற்பட்டதல்லவென்க. அவர்களே

தங்களுக்கு அந்த ஞானம் ஏற்படாததற்கு முந்தி அவர்கள் பந்தத்தி லீடுபட்டவர்களா யிருந்து வந்தார்கள். ஆகலின் அவர்கள்போலப் பந்தம் செயற்கை யறிவால் நீங்காமல் எவ் வகைப்பட்ட பந்தங்களையும் இயல்பாகவே நீங்கிய பரம் பொருட்டன்மை யுணர்த்தவே 'பந்தந் தணந்த' என்றார். எனவே, 'தணந்த' என்பதற்கு (இயல்பாகவே) எனப்பொருள் வருவித்து உரைக்கப்பட்டது. மேலான ஒளிமயமாகலின் 'பரஞ்சுடராய்' என்றார். சுடர்-ஒளி.

ஐங்குறுநூறு

"ஒண்சுடர்ப் பாண்டிற் செஞ்சுடர் போல"

என்புழி இப்பொருட்டாதல் காண்க. 'பரஞ்சுடராய்' என் பதற்கியைய,

தேவாரம்

"சுடரே சுடரொளி விளக்கே"

எனக் கூறியதும் காண்க. (4-6)

வந்த, குறியுங் குணமும் ஒரு கோலமு மற்றெங்கு செறியும் பரம சிவமாய், [ஞ்

(ப-ரை) வந்த-உண்டான, குறியும் குணமும்-குறியும் குணமும், ஒரு கோலமும் - ஓர் உருவமும், அற்று-இன்றி, எங்கும் செறியும்-எவ்விடத்திலும் நிறைந்திருக்கின்ற, பரம சிவமாய்-பரமசிவமாகி; (எ-று.)

(வி-ரை) எல்லாப் பொருள்களும் குறி குணம் கோலம் ஆகிய இவற்றோடு கூடியதாகவே யிருக்கின்றன; ஆனால், பரம் பொருள் ஏனைய பொருள்கள் போன்றதல்லவெனவும், ஆகையால் அறிதற்குரியதாகவுள்ள குறியும் குணமும் உருவமும் இல்லாததாகவுள்ளதெனவும், எப்போது ஒருபொருள் குறியும் குணமும் வடிவமும் இல்லாமல் இருக்கின்றதோ அது யாண்டும் நிறைந்து அகண்டாகார வியாபகமா யிருக்குமென்பார், 'வந்த குறியும் குணமுமொரு கோலமுமற் றெங்கும் செறியும்' என்றார். மேற்கூறிய தன்மையுடைமையான் அஃது உயர்ந்த மங்களப் பொருளாம் என்பது தோன்ற, 'பரமசிவமாய்' என்றார். இதனை,

தாயுமானவர் பாடல்

"குலமி லான்குணங் குறியிலான் குறைவிலான் கொடிதாம்
புலமி லான்றனக் கென்னவோர் பற்றிலான் பொருந்தும்
இலமி லான்மைந்தர் மனைவியில் லானென வனவன்சஞ்
சலமி லான்முத்தி தரும்பர சிவனெனத் தகுமே."

பதிபசுபாசவிளக்கம்

"சொல்லாலு மனனாலுந் தொடாத சூக்குமமாய்ப்
பல்லான்ற கேள்வியரு மீதென்று பகர்வதரியாய்
ஒல்லாத பாஞ்சுடரா யுயர்க்குரியா யுண்மையுமாய்
எல்லாமா யல்லவுமா யிருக்குமந்தப் பரமசிவம்."

என்பனவற்றா னறிக. (6-8)

அறிவுக், கநாதியா ரைந்தொழிற்கு மப்புறமா யன்
மநாதிகளுக் கெட்டா வடிவாய்த், [றே

(ப-ரை) அறிவுக்கு அநாதியாய் - அறிவிற்கு முற்பட்டதாய், ஐந்தொழிற்கும் அப்புறமாய் - பஞ்சகிருத்தியங்களுக்கும் அதீதப்பட்டதாய், அன்றே-அக்காலந் தொடங்கியே, மநாதிகளுக்கு - மன முதலியவற்றிற்கு, எட்டாத வடிவாய்-தெரியாத உருவமாகி; எ-று.

(வி-ரை) அநாதி - ஆதியில்லாதது. ஐந்தொழில்-பஞ்ச கிருத்தியம்; அது: சிருஷ்டி, திதி, சங்காரம், திரோபவம், அநுக்கிரகம் என்பன; இவை முறையே: ஆக்கல், அளித்தல், அழித்தல், மறைத்தல், அருளல் என்று கூறப்படும். மநாதிகள் என்றது மனம் வாக்கு காயம் என்னும் முக்கரணங்களைக் குறித்ததென்க. அநாதி யென்பது குறிக்கவே 'அன்றே' எனக் கூறினார். அன்றி அசையெனக் கொள்வாருமுளர். சேர்துமன்றே என்பதுபோல என்க. (8-10)

தனுதருளின், பஞ்சவித ரூப பரசுகமாய்,

(ப-ரை) தனது அருளின்-தன்னுடைய திருவருளினால், பஞ்சவித ரூபம் - ஐவகை உருவினையுடைய, பரசுகம் ஆய்-உயர்ந்த இன்பமாகி; (எ-று.)

(வி-ரை) 'பஞ்சவித ரூபம்' என்றது பிரம, விஷ்ணு, ருத்திர, மகேஸ்வர, சதாசிவ வடிவங்களை யென்க. கருணை மேலீட்டினால் பிரம, விஷ்ணு, ருத்திர, மகேஸ்வர, சதாசிவ வடிவங்களாகிய ஐவகையாய வடிவத்தினை யுடையதாகலின் 'தனுதருளின் பஞ்சவித ரூபம்' என்றார்.

காமம்போலச் சிறிதுநேரம் உள்ளதாய்ச் சிற்றின்பம் என்னும் பெயரோடு கூடிய சுகமல்லவென்றும், அதனின் வேறுபட்டுப் பேரின்பம் என்னும் பெயரோடு விளங்குவதாய் எல்லாச் சுகங்களிலும் உயர்ந்த-மேலாய் சுகமாகலின் 'பரசுகம்' என்றார். (10-11)

எவ்வுயிர்க்கும்,
தஞ்சமென நிற்கும் தனிப் பொருளாய்,

(ப-ரை) எவ்வுயிர்க்கும்-உயிர்கள் எல்லாவற்றினுக்கும், தஞ்சம் என - பற்றுக்கோடாய் இருக்கின்ற, தனிப்பொருள் ஆய்-ஒப்பற்ற பொருளாகி; (எ-று.)

(வி-ரை) ஓரறிவுயிர்கள் முதல் ஆறறிவுயிர்கள் வரையினு முள்ள உயிர்கள் எல்லாவற்றினுக்கும் ஆதாரம் என்பார், 'எவ்வுயிர்க்கும் தஞ்சம்' என்றார். எவ்வுயிர்க்கும் தஞ்சம் ஆக நிற்பவன் தன்னைத் தவிர வேறொருவரு மில்லையெனவும், தான் ஒருவனே அக்குறை தீர உள்ள ஒரே பொருளாகலின் 'தனிப்பொருள்' எனக் கூறினாரெனினு மமையும். (11-12)

எஞ்சாத, பூரணமாய் நித்தமாய்ப் போக்குவர வும்
காரணமு மில்லாக் கதியாகி, [புணர்வுங்

(ப-ரை) எஞ்சாத பூரணமாய் - குறையாத எங்கும் நிறைந்ததாகி, நித்தமாய் - அழியாததாகி, போக்கு வரவும் புணர்வும் - இறப்பும், பிறப்பும், கலப்பும், காரணமும் - காரணமும், இல்லா - இல்லாத, கதி ஆகி - மோட்சப் பொருளாகி; (எ-று.)

(வி-ரை) எங்கும் நீக்கமற நிறைந்ததாகலின், 'எஞ்சாத பூரணமாய்' என்றும், என்றும் உள்ளதாகலின் 'நித்தமாய்' என்றும், எல்லாப் பொருள்களுக்கும் போதலும் வருதலும் கூடுதலும் உண்டு. அன்றியும் காரணமும் உண்டு. ஆனால், இவையெல்லாம் இல்லாமையின், 'போக்குவரவும் புணர்வும் காரணமும் இல்லா' என்றார். இல்லா-ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம். (12-14)

தாரணியில்,
இந்திரசா லம்புரிவோன் யாவரையுந் தான்மயக்கு
தந்திரத்திற் சாராது சார்வதுபோல்-முந்துங் [ந்
கருவின்றி நின்ற கருவாய் அருளே
உருவின்றி நின்றவுருவாய்த்,

(ப-ரை) தாரணியில் - இவ்வுலகத்தில், இந்திரசாலம் புரிவோன்-இந்திரசாலம் செய்பவன், யாவரையும்-மற்ற யாவரையும், தான் மயக்கும் தந்திரத்தில் - தான் மயக்குகின்ற உபாயத்தில், சாராது சார்வது போல் - கலக்காது கலப்பது போல, முந்தும் - தனக்கு முற்பட்ட, கரு இன்றி - காரணம் இல்லாமல், நின்ற கருவாய் - நின்ற முற்பொருளாகி, உருவின்றி நின்ற-வடிவமில்லாமல் இருந்த, அருளே உருவு ஆய்- திருவருளே வடிவமாகி; (எ-று.)

(வி-ரை) இந்திரசாலம் - மந்திரம் மருந்து முதலியவற்றால் ஒன்றினை மற்றொன்றாகக் காட்டுதல். தனக்கு முற்பட்ட யாதொரு காரணமுமில்லாது நின்ற காரணப் பொருளாகியும் வடிவமில்லாது நின்ற திருவருளே வடிவமாகவும் திகழ்வது,

பூமியில் இந்திரசாலத்தைச் செய்பவன் மற்ற யாவரையும் மயங்கச் செய்கின்ற உபாயத்தில் தான் கலக்காது கலப்பது போல இருக்கின்றதென உவமைமுகத்தாற் கூறினர். (14-18)

திரிகரண, மாகவரு மிச்சை யறிவியற்ற லாலிலய
போகஅதி காரப் பொருளாகி,

(ப-ரை) திரிகரணம் ஆக வரும்-முக்கரணங்கள் காரணமாக வருகின்ற, இச்சை (ஆல்)-இச்சா சத்தியால், அறிவு (ஆல்) - ஞான சத்தியால், இயற்றல் ஆல் - கிரியா சத்தியால், இலயம் போகம் அதிகாரம் பொருள் ஆகி - இலயம், போகம், அதிகாரம் என்னும் இவைகளை நடத்தும் பொருளாகி;(எ-று.)

(வி-ரை) திரிகரணம் - முக்கரணங்கள்; அவை: மனம், வாக்கு, காயம் என்பன. (18-20)

யேகத், துருவு மருவு முருவருவு மாகிப்
பருவ வடிவம் பலவாய்,

(ப-ரை) ஏகத்து-ஒரு வடிவிலேயே, உருவும்-உருவமும், அருவும்-அருவமும், உரு அருவும் ஆகி - உருவமும் அருவமுமாகி, பருவ வடிவம்-பக்குவ வடிவங்கள், பல ஆய் - அநேகமாகி; (எ-று.)

(வி-ரை) ஒருவடிவிலேயே ரூபமும், அரூபமும், ரூபாரூபமுமாகித் திகழும் என்பார், 'ஏகத்துருவு மருவு முருவருவு மாகி' என்றார். பக்குவான்மாக்களின் பொருட்டு அவ்வக் காலத்தில் எடுக்கிற வடிவம் என்பதைக் குறிக்கப் 'பருவ வடிவம்' என்றார். எனவே, 'பருவம்' என்பதற்குப் பக்குவம்

எனப் பொருளுரைக்கப்பட்டது. பக்குவான்மாக்களின் பொருட்டு அவ்வக்காலங்களில் எடுக்கும் பக்குவவடிவங்கள் பல என்பார், 'பருவ வடிவம் பலவாய்' என்றார். (20-22)

இருண்மலத்துள்,மோகமுறும் பல்லுயிர்க்குமுத்தி
பாகமுற வேகடைக்கண்பாலித்து, [யளித்தற்குமல

(ப-ரை) இருள் மலத்துள் - அந்தகார உருவமாயுள்ள மலத்தில், மோக முறும்-மோகத்தையடையும், பல் உயிர்க்கும்-பல ஆன்மாக்களுக்கும், முத்தி அளித்தற்கு-மோட்சத்தைப் பாலித்தற் பொருட்டு, மல பாகம் உற-மலபரிபாகம் அடைய, கடைக்கண் பாலித்து-கடைக்கண்ணாற் பார்த்து; (எ-று.)

(வி-ரை) 'இருண் மலத்துள் மோகமுறும் பல்லுயிர்' என்றது விஞ்ஞானகலர், பிரளய கலர், சகலர் ஆகிய மூவருள் சகலரைக் குறித்ததாம். இச்சகலர் ஆணவம், கன்மம், மாயை என்னும் மும்மலங்களையும் உடையவர். மோட்சத்தைப் பாலித்தற் பொருட்டு மலபரிபாகம் அத்தியாவசியமாகலின், 'பல்உயிர்க்கு முத்தி யளித்தற்கு மலபரிபாகம்' என்றார். கருணையையுடைய திருக்கடைக்கண்ணாற் பார்த்தா லல்லாமல் மலபரிபாகத்தையடைய முடியாது என்பார்,'மலபரி பாகமுறக் கடைக்கண் பார்த்து' என்றார்.

கடைக்கண் - கடாக்ஷம். கடை + அக்ஷம் = கடாக்ஷம் எனப் புணர்ந்தது; அக்ஷம் - கண்; கடாக்ஷம் - கடைக்கண்; கடைக்கண் பார்வையைச் செலுத்தலே அன்பிற் கறிகுறியாக லின் அவ்வன்பிற்குக் கடாக்ஷமெனப் பெயராயிற்று. (22-24)

தேகமுறத், தந்த வருவுருவஞ் சார்ந்தவிந்து மோ
பெந்தமுறவே பிணிப்பித்து-மந்த்ரமுத[கினிமான்
லாறத்து வாவுமண்டத் தார்ந்தவத்து வாக்களுமுற்
கூறத்தகுஞ் சிமிழ்ப்பிற் கூட்டுவித்து,

(ப-ரை) தேகம் உற தந்த - உடல் உண்டாகும்படி கொடுத்த, அருவுருவஞ் சார்ந்த-ரூபாரூபத்துடன் பொருந்திய, விந்து மோகினிமான்-விந்து, மோகினி, மான் என்னும் தத்துவங்களோடு, பெந்தம் உற-கட்டுப்பட, பிணிப்பித்து-கட்டுவித்து, மந்த்ரமுதல் ஆறு அத்து வாவும் - மந்திரம் முதலாகவுள்ள அத்துவாக்கள் ஆறும், அண்டத்து ஆர்ந்த-உலகத்தில் பொருந்திய, அத்துவாக்களும் - வழிகளையும், முன் கூறத்தகும்-முன்னே சொல்லத்தக்க, சிமிழ்ப்பில் கூட்டுவித்து-கட்டில் சேர்ப்பித்து; (எ-று.)

(வி-ரை) சுத்த மாயை-விந்து எனவும், அசுத்தமாயை மோகினி எனவும், பிரகிருதியை-மான் எனவும் கூறுவர்.

மந்த்ரமுதல் ஆறத்துவாக்கள்:—மந்திராத்துவா, பராத்துவா, வன்னத்துவா. புவனத்துவா, தத்துவாத்துவா, கலாத்துவா என்பனவாம்.

உறப்பிணித்து எனவும் மந்த்ரமுத லாறத்துவாவும் கூட்டுவித்து எனவும் முடிக்க. (24-28)

மாறிவரும்,
ஈரிரண்டு தோற்றத் தெழுபிறப்புள் யோனியெண்பா
னூரவந்த நான்குநூ றாயிரத்துள்-தீர்வரிய

கன்மத்துக் கீடாய்க் கறங்குஞ் சகடமும்போற்
சென்மித் துழலத் திரோதித்து,

(ப-ரை) மாறி வரும்-மாறிமாறி வருகின்ற, ஈர் இரண்டு தோற்றத்து-நால்வகைத் தோற்றத்தையுடைய, எழு பிறப்புள்-எழு பிறவியால், ஆர வந்த-பொருந்தவந்த, எண்பான் நான்கு நூறாயிரத்து யோனியுள் - எண்பத்துநான்கு லட்சம் யோனிபேதங்களுள்ள உயிர்களுள், தீர்வு அரிய - நீங்குதற் கருமையான, கன்மத்துக்கு ஈடாய் - வினைக்குத் தகுந்தபடி, கறங்குஞ் சகடமும்போல் - காற்றாடியும் வண்டிச் சக்கரமும் போல, சென்மித்து உழல-பிறந்து உழலும்படி, திரோதித்து-மறைப்பைச் செய்து; (எ-று.)

(வி-ரை) 'ஈரிரண்டு தோற்றம்' என்பது நால்வகைப் பிறப்பிடம்; அவை: அண்டசம், சுவேதசம், சராயுசம், உற்பிசம் என்பன; அவை முறையே முட்டையிற் பிறப்பன, வியர்வையிற் பிறப்பன, பையிற் பிறப்பன, நிலத்திற் பிறப்பனவாம்.

'எழுபிறப்பு' - தேவர், மக்கள், விலங்கு, புள், ஊர்வன, நீர்வாழ்வன, தாவரம் என்பன. எண்பத்து நான்கு இலட்சம் யோனிபேதம் என்பதை,

"ஊர்வ பதினொன்று மொன்பது மானுட
நீர்பறவை நாற்காலோர் பப்பத்தாஞ்-சீரிய
பந்தமார் தேவர் பதினா லயன்படைத்த
அந்தமில்சீர்த் தாவரநா லைந்து"

என்பதானறிக. ஜீவராசிகளா யுள்ளவர்கள் நால்வகைத் தோற்றத்தினையுடைய எழுவகைப் பிறப்பினுள் எண்பத்து நான்கு லட்சம் யோனி பேதங்களுள் சேர்ந்தவைகளா யிருக்கவேண்டுமே தவிர இவைகளைக் கடந்து நிற்க முடியாதாகலின், 'ஈரிரண்டு தோற்றத் தெழுபிறப்புள் யோனியெண்பா னாவந்த நான்கு நூறுயிரத்துள்' என்றார்.

பிறப்பிடம் ஒன்று ஒன்றாக மாறிமாறி வந்துகொண்டேயிருக்கின்றதாகலின், 'மாறி வரும்' என்றார். கன்மங்களுக்குத் தகும்படி பிறவிவந் தெய்துமாகலின் 'கன்மத்துக் கீடாய்' என்றார். (28-32)

வெந்நிரய, [த்தால்
சொர்க்காதி போகமெல்லாம் துய்ப்பித்துப் பக்குவ
நற்காரணஞ் சிறிது நண்ணுதலும்-தர்க்கமிடுந்
தொன்னூற் பரசமயந் தோறு மதுவதுவே
நன்னூ லெனத்தெரிந்து நாட்டுவித்து,

(ப-ரை) வெம் நிரயம் - கொடிய நரகம், சொர்க்காதி போகம் எல்லாம்-சொர்க்கமுதலாகச் சொல்லப்பட்ட எல்லாப் போகங்களையும், துய்ப்பித்து - ஊட்டுவித்து, பக்குவத்தால்-பருவத்தினால், நல் காரணம் - நன்மையுண்டாகும் காரணம், சிறிது நண்ணுதலும் - கொஞ்சம் சேரவும், தர்க்கம் இடும்-தர்க்கஞ் செய்கின்ற, தொன்னூல்-பழைய நூல்களையுடைய, பரசமயந்தோறும்-பிற சமயங்களிலெல்லாம், அது அதுவே-அவ்வச் சமய நூல்களே, நன்னூல் என - சிறந்த நூல்க

ளென்று, தெரிந்து நாட்டுவித்து - அறிந்து நிலைபெறச் செய்து; (எ-று.)

(வி-ரை) நரகத்தின் கொடுமையை யுணர்த்தவே 'வெங் நிரயம்' என்றார். ஆன்மாக்கள் அடையும் பரிபக்குவ மாறுதல்களை யுணர்த்தவே 'பக்குவத்தால்' என்றார்.

ஆன்மாக்களின் பரிபக்குவ மாறுதல்களால் அவர்களை யாளவேண்டிய காரணஞ் சிறிது உண்டாகின்றது என்பார், 'பக்குவத்தால் நற்காரணஞ் சிறிது நண்ணுதலும்' என்றார்.

எனவே, பரிபக்குவ மாறுதல் கொஞ்சமும் உண்டாகாமற் போனால் அவர்களை ஆளவேண்டிய காரணமும் சிறிது உண் டாகின்றது என்பது பெறப்பட்டது. பரசமயங்களெல்லாம் தர்க்கம் பண்ணப்படுகின்ற பழமையான நூல்களையுடையன வாதலால், 'தர்க்க மிடுந் தொன்னூற் பரசமயம்' என்றார்.

அன்னிய சமயங்கள்தோறும் கையாடுகின்ற அவ்வச் சமய நூல்களே உயர்ந்த நூல்களென்று ஆராய்ந்து நிலைபெறச் செய்து சகல சமயத்தாரும் ஏற்றுக்கொள்ளும் கடவுளும் தானே யாவானென்றும் குறிக்கவே, 'பரசமயந் தோறு மது வதுவே நன்னூலெனத் தெரிந்து நாட்டுவித்து' என்றார். இவ்வாறே,

திருப்போரூர் சந்நிதிமுறை

"ஆறுசம யக்கடவுள் வேறுவே றின்றியா
　　னொருவனே யங்கங்கிருந்

தன்பர்க்கு முத்திதரும் வித்தென் றியாவர்க்கு
மறிவித்த வதனமணியே"

எனக் கூறியிருத்தல் காண்க. (32-36)

முன் னூல்,
விரதமுத லாயபல மெய்த்தவத்தி னுண்மைச்
சரியைகிரி யாயோகஞ் சார்வித்து-அருள்பெருகு
சாலோக சாமீப சாரூப மும்புசிப்பித்
தாலோகந் தன்னை அகற்றுவித்து,

(ப-ரை) முன் னூல்-ஆதிநூல்களில் கூறப்பட்ட, **விரதம் முதலாய**-விரதம் முதலிய, **பல மெய்த்தவத்தின்**-பலவகைப் பட்ட உண்மைத்தவத்தினால், **உண்மை**-உண்மையாய், **சரியை கிரியாயோகஞ் சார்வித்து**-சரியை கிரியை யோகங்களில் சேர்ப் பித்து, **அருள் பெருகு**-திருவருள் மிகும், **சாலோகம்**-சாலோக பதவியையும், **சாமீபம்**-சாமீப்யபதவியையும், **சாரூபம்**-சாரூப்ய பதவியையும், **புசிப்பித்து** - அனுபவிக்கும்படி செய்து, **ஆலோகந் தன்னை**-அவற்றின்மேலுள்ள நோக்கத்தை, **அகற்று வித்து**-நீக்கி; (எ-று.)

(வி-ரை) முன் னூல்-முதல்நூல்.

தொல்காப்பியம்

"வினையி னீங்கி விளங்கிய வறிவின்
முனைவன் கண்டது முதனூ லாகும்"

என்பதானே முதனூல் இனைத்தெனப் புலனுமன்றோ? மேலும் முதல்நூல்கள் விதிநூல்களாகலின் அவற்றுள் விரத முதலான விஷயங்கள் கூறப்பட்டிருத்தலின், 'முன் னூல் விரதம்' என்றார்.

விரதம் முதலிய பலவகைப்பட்ட உண்மைத் தவத்தினுல் சரியை கிரியை யோகம் என்னும் மூன்றையும் ஒன்றன்பின் ஒன்ருக அடையச் செய்து என்பார் 'விரதமுதலாய பல மெய்த்தவத்தின் உண்மைச் சரியை கிரியாயோகஞ் சார்வித்து' என்ருர். சரியை கிரியை யோகம் என்னும் மூன்றையும் ஒன்றன்பின் ஒன்ருகச் செய்வதனுல் திருவருள் மிகுகின்ற படியால் சரியாமார்க்கத்தா லெய்தக்கூடிய சாலோக பதவியை யும், கிரியா மார்க்கத்தா லெய்தக்கூடிய சாமீப்ய பதவியையும், யோகமார்க்கத்தா லெய்தக்கூடிய சாரூப பதவியையும் அனுப விக்கும்படிசெய்து என்பார், 'அருள்பெருகு சாலோக சாமீப சாரூபமும் புசிப்பித்து' என்ருர்.

சரியை கிரியை யோகம் என்னும் மூன்று மார்க்கங்களில் விதிமுறையிலொழுகின் சாலோக சாமீப சாரூபம் எய்தல் கூடுமாயினும் திருவருள் மிகுந்தால்மட்டுமே எய்தல்கூடும். திருவருள் மிகாவிட்டால் பதமுத்திகளாகிய சாலோக சாமீப சாரூபங்களை அனுபவிக்க முடியாதெனக் குறிக்கவே 'அருள் பெருகு' என்ருர்.

பதமுத்திகளை அனுபவிக்கும்படி செய்ததோடல்லாமல் அவற்றிலேயே அழுந்தியிருக்கின்ற சோக்கத்தை நீங்கச் செய்ய வேண்டுமாகலின், 'புசிப்பித்து ஆலோகந்தன்னை யகற்றுவித்து' என்ருர்.

எனவே, சரியை கிரியை யோகம் என்னும் அவ்வவற்றிற் குரிய தொழில்களில் வழுவாமல் நடப்பின் சாலோக சாமீப

சாரூபம் ஆகிய பதவிகளை முறையே அடையலாம். அஃதாவது சரியா மார்க்கத்தால் அடையக் கூடியது பதமுத்தியாகிய சாலோகம் என்பதும், கிரியா மார்க்கத்தால் அடையக்கூடியது பதமுத்தியாகிய சாமீப்யம் என்பதும், யோகமார்க்கத்தால் அடையக்கூடியது பதமுத்தியாகிய சாரூபம் என்பதும் பெறப் பட்டது. இவற்றை விரிக்கிற் பெருகும். (36-40)

நால்வகையாஞ், சத்திநி பாதந் தருதற் கிருவினையு
ஒத்துவருங் கால முளவாகிப்-பெத்த [ம்
மலபரி பாகம் வருமளவிற் பன்னாள்
அலமருதல் கண்ணுற் றருளி,

(ப-ரை) நால்வகையாம் - நால்வகையாயுள்ள, சத்திநி பாதம்-சத்திநி பாதத்தை, தருதற்கு - அளித்தற்பொருட்டு, இருவினையும்-இருவினைகளும், ஒத்துவரும் காலம் உளவாகி-ஒத்துவரும் காலமானது உண்டாய், பெத்த மலபரி பாகம்-பந்தமலத்தினது பரிபாககாலம், வரும் அளவில்-உண்டாகும் நாள் வரையில், பல் நாள்-பல நாட்களாக, அல மருதல்-உழலுதலை, கண்ணுற்றருளி-பார்த்தருளி; (எ-று.)

(வி-ரை) நால்வகையாம் சத்திநி பாதம்-மந்தம்,மந்ததரம், தீவிரம், தீவிரதரம், இந்நான்கும் பக்குவமெனப்படும். சத்தி-சிற்சத்தி, நிபாதம்-பதிதல். நி-உபசர்க்கம். 'இருவினையும் ஒத்து வரும் காலம்' என்பது நல்வினையால் செல்வம் முதலியன வந்த காலத்து அதற்காக மகிழாமையும் தீவினையால் வறுமை இடுக்கண் முதலியன வந்தகாலத்து அதற்காக மனம் வருந் தாமையும் உண்டாதல். இத்தகைய நிலைக்கே 'இருவினை

யொப்பு' என்பர். அஃதாவது இருவினைப்பயனையும் சமமாக அனுபவித்தலாம்.

'பெத்தமல பரிபாகம்' என்றது மலபரிபாகத்தை. அஃதாவது, மலம் கெடுதற்குரிய நிலைமையைப் பெறுதலாம்.

உலவா, தறிவுக் கறிவாகி அவ்வறிவுக் கெட்டா
நெறியிற் செறிந்தநிலை நீங்கிப்-பிறியாக்
கருணை திருவுருவாய்க் காசினிக்கே தோன்றிக்
குருபரனென் றோர்திருப்பேர் கொண்டு,

(ப-ரை) உலவாத - கொடாத, அறிவுக்கு அறிவாகி-அறிவினுக்கு அறிவாய், அவ்வறிவிற்கு-அந்த அறிவினுக்கும், எட்டா - எட்டாத, நெறியில் செறிந்த - வழியில் நிறைந்த, நிலைநீங்கி-நிலையைவிட்டு, பிரியாக் கருணை-நீங்காத கருணையே, திருவுருவாய்-திருவடிவமாய், காசினிக்கே தோன்றி-உலகத்தில் வந்துதித்து, குருபரன் என்று-குருசாமி என்று, ஓர் திருப்பேர் கொண்டு-ஒப்பற்ற திருப்பெயரைக்கொண்டு; எ-று.

(வி-ரை) சிற்றறிவிற்குப் பேரறிவாய் உள்ளாராகலின், 'உலவா தறிவுக் கறிவாகி' என்றார். காசினிக்கு-உருபுமயக்கம். சிவபெருமானுக்கே பிரணவார்த்தத்தைச்சாற்றினவராகலானும் தகப்பன் சாமி, சாமி, சாமிநாதன், குருசாமி முதலிய பல அருமைத் திருநாமங்களுடையவனாகலானும், 'குருபரன்' என்றார். சிவபிரானுக்கு முருகக்கடவுள் பிரணவார்த்தத்தை சாற்றிய விவரம், சிவபராக்கிரமம்-சிஷ்யபாவமூர்த்தியிற் காண்க. தன்னைவிட்டு நீங்காத கருணையையே திருமேனியாகக் கொண்டுள்ளது குறிக்க 'பிரியாக் கருணை திருவுருவாய்'என்றார். 'உலவாத'

என்பது உலவா எனவந்தமையின் அகரம் தொகுத்தல் விகாரம். அன்றி உலவாது எனப்பிரித்துப் பொருள்கோடலும் ஒன்று.

திருநோக்கால்,
ஊழ்வினையைப் போக்கி உடலறுபத் தெட்டுநிலம்
ஏழுமத்து வாக்க ளிருமூன்றும்-பாழாக
ஆணவ மான படலங் கிழித்தறிவிற்
காணரிய மெய்ஞ்ஞானக் கண்காட்டி,

(ப-ரை) திருநோக்கால்-திருவருட் பார்வையினால், ஊழ் வினையைப் போக்கி-பழைய வினையை ஒழித்து, உடல் அறு பத்தெட்டும்-உடல் வருதற்கேதுவான ஒன்பது குணங்களும், நிலம் ஏழும் - எழுவகை யுலகங்களும், அத்துவாக்கள் இரு மூன்றும்-அத்துவாக்கள் ஆறும், பாழாக-பாழாய்ப் போம்படி, ஆணவம் ஆன படலம்-ஆணவ மலமாகிய திரைச்சீலையை, கிழித்து-கிழித்து நீக்கி, அறிவில் - அறிவினிடத்தில், காண் அரிய - பார்த்தற் கருமையாகிய, மெய்ஞ்ஞானக்கண் காட்டி- உண்மையாகிய ஞானநேத்திரத்தைக் காட்டியருளி; (எ-று.)

(வி-ரை) அறுபத்தெட்டு என்பது (தம்முள் ஒத்த அளவாய்) அறுக்கப்பட்ட (பகுக்கப்பட்ட) பதினெட்டாம்; அவை ஒன்பதாம். உடல் அறுபத்தெட்டு - உடல் வருதற் கேதுவான ஒன்பது குணங்கள்; அவை: சத்துவத்தில் சத்துவம், சத்துவத்தில் இராசதம், சத்துவத்தில் தாமதம்; இராசதத்தில் சத்துவம், இராசதத்தில் இராசதம், இராசதத்தில் தாமதம், தாமதத்தில் சத்துவம், தாமதத்தில் இராசதம். தாமதத்தில் தாமதம் என்னும் ஒன்பது குணங்களேயாம்.

படலம்-திரை; திரைச்சீலை; மறைப்பு. இனிப் படலம் என்பதற்குக் கூட்டம் எனப் பொருளுரைக்கினுமமையும்.

சோணசைலமாலை

"இந்தியங் காரண முடலம் வேரறுக்கி
யிருண்மலப் படலமுங் கீறி"

என்னும் செய்யுளில் இப்பொருட்டாதல் காண்க.

சங்கற்பநிராகரணம்

"அறிவில னதீதச் செறிவிலென் றுரைத்த
நின்மொழி விரோதமும் பின்மொழி மலைவு
மன்வயி னிகழா மலமிரு ணிறைபொளி
யான்மா விளக்கிற் றகுமருட் கலாதிக
ளீனமி லிவனிடத் தெவ்வா றிசைந்தன" எனவும்

தணிகைப் புராணம்

"இறுதி பயக்குங் காரியங்க ளொருகா லத்துஞ் செயவொட்டா
திறுதி பயக்குங் காரியமே யெக்கா லத்து நிகழ்விக்குஞ்
செறியு முயிரி னல்லறிவை யெக்கா லத்துஞ் சிதைத்துவரு
மறிய வுயிர்க்குப் புகரறிவை யெக்கா லத்தும் வளர்ப்பிக்கும்."

"தூய நினைவைத் தூமொழியைத் தூய தொழிலைத் தோற்றுது
தீய நினைவைத் தீமொழியைத் தீய தொழிலைத் தவத்தோற்று
மாய தனியா ணவப்பகையி னிரட்டைத் தணிப்ப வுயிரடுக்கு
மாயை யிரண்டு திறனுகுஞ் சுத்த மசுத்த மெனமாதோ."

எனவும் வருவனவற்றால் ஆணவமலத்தான் வரும் துன்பத்தை யோர்ந்து அதனை யொழிக்கவேண்டுமென்பார் 'ஆணவமான படலம் கிழித்து' என்றார். (48-52)

பூணும்,
அடிஞானத் தாற்பொருளும் ஆன்மாவுங்காட்டிக்
கடியார் புவனமுற்றுங் காட்டி-முடியாது
தேக்குபர மானந்தத் தெள்ளமுத மாகிஎங்கும்
நீக்கமற நின்ற நிலைகாட்டிப்-போக்கும்
வரவு நினைப்பும் மறப்பும் பகலும்
இரவுங் கடந்துலவா இன்பம்-மருவுவித்துக்

(ப-ரை) பூணும் அடி ஞானத்தால்-பொருந்தும் திருவடி ஞானத்தால், பொருளும்-பதிப்பொருளையும், ஆன்மாவும்-ஆன்மாவையும், காட்டி-உணர்த்தி, கடி ஆர்-காவல் பொருந்திய, புவனம் முற்றும் - புவனங்களையெல்லாம், காட்டி - உணர்த்தி, முடியாது - முடிவடையாது, தேக்கு - தெகுட்டுகின்ற, தெள் அமுதம் ஆகி-தெளிந்த அமிர்தம் போல்வதாய், எங்கும் நீக்கமற நின்ற-யாண்டும் நீங்குதலில்லாமல் நிறைந்த, நிலை-பரிபூரண நிலையை, காட்டி-உணர்த்தி, போக்கும் வரவும்-இறப்பும் பிறப்பும், நினைப்பும் மறப்பும்-நினைவும் மறதியும், பகலும் இரவும் - பகலும் இராத்திரியும், கடந்து - தாண்டி, உலவாத இன்பம் - கெடாத சுகத்தை, மருவுவித்து - சேர்ப்பித்து; (எ-று.)

(வி-ரை) பொருந்திய திருவடி ஞானத்தால் மாத்திரமேயன்றிப் பிறிதொன்றினும் எய்த முடியாததான பதிப்பொருளையும் பசுப்பொருளையும் உணரலாமாகலின், 'பூணும்அடி ஞானத்தாற்பொருளு மான்மாவுங் காட்டி' என்றார்.

கடி ஆர் - காவல் பொருந்திய. கடி-பலகுணங் குறித்த ஓர் உரிச்சொல். இதனை,

நன்னூல்

"கடியென் கிளவி காப்பே கூர்மை
விரையே விளக்க மச்சம் சிறப்பே
விரைவே மிகுதி புதுமை யார்த்தல்
வரைவே மன்றல் கரிப்பி னாகும்"

என்பதானறிக. முடிவுபெறாது தெவிட்டுகின்ற உயர்ந்த ஆனந்தத்தை விளைவிக்கின்ற தெளிந்த அமிர்தம்போல்வதாய் எவ்விடத்திலும் நீங்குதலில்லாது இருந்த பரிபூரண நிலையென்பார், 'முடியாது தேக்கு பரமானந்தத் தெள்ளமுதமாகி யெங்கும் நீக்கமற நின்றநிலை' என்றார்.

இறப்பும் பிறப்பும் நினைவும் மறதியும் பகலும் இராத்திரியும் கடந்ததாய் கெடாததாய் உள்ள இன்பம் என்பார், 'போக்கும் வரவும் நினைப்பும் மறப்பும் பகலு மிரவுங் கடந்துலவா இன்பம்' என்றார். பரம + ஆனந்தம் = பரமானந்தம்; வடமொழிப் புணர்ச்சி தீர்க்கசந்தி. (52-58)

கண்மலத் தார்க்குமலர்க் கண்மூன்று தாழ்சடையும், வன்மழுவு மானுமுடன் மால்விடைமேல்-மின்னிடத்துப், பூத்த பவளப் பொருப்பொன்று வெள்ளிவெற்பில், வாய்த்தனைய தெய்வவடிவாகி-மூத்த, கருமமலக் கட்டறுத்துக் கண்ணருள் செய்து துள் நின், றொருமலர்த்தாக் கின்பம் உதவிப்,

(ப-ரை) கனம மலததாக்கு - கனம மலமுடையவர் களுக்கு, மலர்கண் மூன்றும்-தாமரைமலர்போன்ற திருநேத் திரங்களும், தாழ் சடையும் - தொங்கிய சடையும், வன் மழுவும்-வலிய மழுவாயுதமும், மானும்-மான் கன்றும் உடை யதாய், உடல் - கோபிக்கின்ற, மால் விடைமேல் - பெரிய எருதின் மேல், மின் இடத்துப் பூத்த-மின்னற்கொடியானது இடப்பக்கத்திலுண்டான, பவளப் பொருப்பு ஒன்று - ஒரு பவளமலை, வெள்ளி வெற்பில்-வெள்ளிமலையில், வாய்த்தனைய-ஆரோகணித்து வந்தாற்போல, தெய்வ வடிவாகி - தெய்வத் திருமேனிகொண்டு, மூத்த-முதிர்ந்த, கருமமலக்கட்டு-கன்ம மலக்கட்டை, அறுத்து - வெட்டி யெறிந்து, கண் அருள் செய்து - திருவருட் கண்களால் உற்று நோக்கி, உள் நின்று-உள்ளே நிலைத்து, ஒரு மலத்தார்க்கு-ஒருமலத்தை யுடையவர் களுக்கு, இன்பம் உதவி-இன்பத்தை யளித்து; (எ-று.)

(வி-ரை) கன்மமலர்த்தார்-பிரளயாகலர்; இவர் ஆணவம், கன்மம் என்னும் மலமிரண்டுடையவர்கள். ஒரு மலத்தார்-விஞ்ஞானகலர்; இவர் ஆணவமல மொன்றையே யுடையவர் கள். மலர்க்கண் - உவமைத்தொகை. கண் - சினைப்பெயர். தாழ்சடை - வினைத்தொகை. வெள்ளி வெற்பு - இரசிதகிரி என்பர் வடநூலார். இதனை ஊழிதோறுங்கு மோங்கல் என்பர். இன்பம் உதவி-இரண்டாம் வேற்றுமைத்தொகை. வன்மழு-பண்புத்தொகை. (59-64)

பெருகிஎழு,
மூன்றவத்தை யுங்கழற்றி முத்தருட னேஇருத்தி

ஆன்றபர முத்தி அடைவித்துத்-தோன்றவரும்
யானெனதென் றற்ற விடமே திருவடியா
மோனபரா னந்த முடியாக-ஞானந்
திருவுருவா இச்சை செயலறிவு கண்ணு
அருளதுவே செங்கை யலரா-இருநிலமே
சந்நிதியா நிற்குந் தனிச்சுடரே யெவ்வுயிர்க்கும்
பின்னமற நின்ற பெருமானே,

(ப-ரை) பெருகி எழும் - மிகுந்து வருகின்ற, மூன்று அவத்தையும்-மூன்று அவஸ்தைகளையும், சுழற்றி-நீக்கி, முத்தருடன் இருத்தி-சீவன்முத்தரோடுகூட்டி, ஆன்ற பரமுத்தி-உயர்ந்த மேலான மோட்சத்தை, அடைவித்து-அடையுமாறு செய்து, தோன்றவரும் - தெரியும்படி உண்டாகின்ற, யான் எனது என்ற-யான் எனது என்கிறவைகளை, அற்ற இடமே-அகன்ற இடமே, திருவடியா-திருவடியாகவும், மோன பரானந்தம் - மௌனமாகிய மேன்மையான இன்பமே, முடியா-திருமுடியாகவும், ஞானம் திருவுருவா-ஞானமே திருவுருவாகவும், இச்சை செயல் அறிவு - இச்சையும் கிரியையும் ஞானமுமே, கண்ணு-கண்களாகவும், அருள் அதுவே-திருவருளே, செங்கை அலரா-செங்கை மலராகவும், இருநிலமே-பெரிய பூவுலகமே, சந்நிதியா-திருக்கோயிலாகவும், நிற்கும்-கொண்டு இருக்கின்ற, தனிச்சுடரே-ஒப்பற்ற ஒளியே, எவ்வுயிர்க்கும் - சகலமான உயிர்களுக்கும், பின்னமற நின்ற-அபின்னமாக நின்றருளிய, பெருமானே - பெருமையுடையோனே; (எ-று.)

(வி-ரை) மூன்றவத்தை-சாக்கிரம், சொப்பனம், சுழுத்தி. முத்தர்-சீவன்முத்தர். யான் என்னும் அகங்காரமும் எனது என்னும் மமகாரமும் நீங்கின இடமே திருவடியாகக்கொண்டுள்ளான் என்பார், 'யானெனதென்றற்றவிடமே திருவடியா' என்றார். மௌனானந்த இன்பமே திருமுடியாகக் கொண்டுள்ளானென்பார், 'மோனபரானந்த முடியாக' என்றார். ஞானமே திருவடிவமாகியும் இச்சாசத்தியும் கிரியாசத்தியும் ஞான சத்தியுமே திருநேத்திரங்களாகவும், திருவருளே செங்கைமலராகவும், பெரிய பூமியே கோயிலாகவும் கொண்டு இருக்கின்ற ஒப்பற்ற ஒளிவடிவினனென்பார் 'ஞானந் திருவுருவா விச்சை செயலறிவுகண்ணா அருளதுவே செங்கையலரா-இருநிலமே, சந்நிதியா நிற்குந் தனிச்சுடரே' என்றார். இயங்குயிர், நிலையுயிர், ஆகிய இரண்டும் குறிக்கவே 'எவ்வுயிர்க்கும்' என்றார். பெருமையை யுடையோனாகலின் 'பெருமானே' என்றார் (64-72)

மின்னுருவந், [பொன்
தோய்ந்தநவ ரத்நச் சுடர்மணியாற் செய்தவைம்
வாய்ந்த கிரண மணிமுடியுந்-தேய்ந்தபிறைத்
துண்டமிரு மூன்று நிரை தோன்றப் பதித்தனைய
புண்டரம் பூத்தநுதற் பொட்டழகும்-விண்டட
பருவமலர்ப் புண்டரிகம் பன்னிரண்டு பூத்தாங்கு
அருள்பொழியுங் கண்மலரீ ராறும்,

(ப-ரை) மின்னுருவம் தோய்ந்த - மின்னலின் வடிவம் அமைந்த, நவரத்நச் சுடர்மணியால் - நவரத்தினங்களாகும்

ஒளியுள்ள மணிகளோடு, பைம்பொன் செய்த-பசும்பொன்னாற் செய்யப்பட்ட, கிரணம் வாய்ந்த-ஒளியுள்ள, மணிமுடியும்-மணிமுடியும், தேய்ந்த பிறைத்துண்டம்-தேய்ந்த சந்திரதுண்டங்கள், இருமூன்று - ஆறு, நிரைதோன்ற - வரிசையாய்த் தோன்றும்படி, பதித்தனைய - பதித்து வைத்தாற்போலுள்ள, புண்டரம் பூத்த-மூன்று வடிவினதாகிய திருநீறிட்ட, நுதல்-நெற்றியில் அணிந்த, பொட்டு அழகும்-பொட்டினது அழகும், பருவம் விண்ட - பக்குவத்தில் விகசித்த, புண்டரிகமலர்-தாமரைமலர்கள், பன்னிரண்டு பூத்தாங்கு - பன்னிரண்டு பூத்தாற்போல, அருள்பொழியும் - திருவருள் பொழிகின்ற, கண்மலர் ஈராறும்-கண்மலர்கள் பன்னிரண்டும்; (எ-று.)

(வி-ரை) மின்னலின் பிரகாசத்தையுடைய நவரத்தினங்களென்னும் ஒளியுள்ள மணிகள் வைத்துப் பசும்பொன்னாற் செய்யப்பட்ட மணிமுடியென்பார், 'மின்னுருவந் தோய்ந்த நவரத்னச் சுடர்மணியாற் செய்த பைம்பொன்வாய்ந்த கிரண மணிமுடி' என்றார். பருவகாலத்தில் விகசித்த தாமரை மலர்கள் பன்னிரண்டு பூத்தாற்போலத் திருவருள் பொழிகின்ற பன்னிரண்டு கண்மலர்களென்பார், 'விண்டபருவ மலர்ப் புண்டரிகம் பன்னிரண்டுபூத்தாங் கருள்மொழியுங் கண்மலரீராறு' என்றார். (72-78)

பரிதி, பலவு மெழுந்துசுடர் பாலித்தாற் போலக்
குலவு மகரக் குழையும்-நிலவுமிழும்
புன்முறுவல் பூத்தலர்ந்த பூங்குமுதச் செவ்வாயுஞ்
சென்மவிடாய் தீர்க்குந் திருமொழியும்,

(ப-ரை) பரிதிபலவும் - பலசூரியர்களும், எழுந்து சுடர் பாலித்தாற்போல - உதயமாய் ஒளி வீசுவதுபோல, குலவும்-விளங்குகின்ற, மகரக்குழையும்-மகரக் குண்டலங்களும், நிலவு உமிழும் - குளிர்ந்த ஒளி பரப்புகின்ற, புன்முறுவல் பூத்து-சிறு சிரிப்பு பொருந்தி, அலர்ந்த - விரிந்த, பூ குமுதச் செவ்வாயும் - குமுத மலர்போலும் சிவந்தவாயும், சென்மவிடாய்-பிறவி இளைப்பை, தீர்க்கும்-ஒழிக்கின்ற, திருமொழியும்-திருமொழியும் (எ-று.)

(வி-ரை) மகரக்குழை - மகரகுண்டலம்; இது காதணி வகையிலொன்று. நிலவு ஆண் காமுகர் தவிர ஏனையோர்க்கெல்லாம் குளிர்ந்த ஒளியாகலின், நிலவு என்பதற்கு, குளிர்ந்த ஒளி எனப் பொருளுரைக்கப்பட்டது. இவ்வரிகளானே, மகரகுண்டலச் சிறப்பும் செவ்வாயின் சிறப்பும், திருமொழியின் சிறப்பும் கூறப்பட்டது. நிலவு + உமிழும் = நிலவுமிழும். நிலவுமிழும்-இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். நிலவு என்பது நில எனவும், நிலா எனவும் வரும். எனவே, மூன்று வகையாகவரும் என்பது பெறப்பட்டது. அஃதாவது, நில, நிலவு, நிலா எனவரும்.

(1) "நில விரிகானல்"—குறியதன்கீழ் ஆ குறுகிற்று.

(2) "என் செய்புமோ நிலவு"—குறுகி உகரமேற்றது.

(3) "நிலா வணங்கு" இயல்பாயிற்று. இதனை,

நன்னூல்

"குறியதன் கீழாக் குறுகலு மதனோ
டுகர மேற்றலு மியல்புமாந் தூக்கின்"

என்பதானறிக. செய்யுளில் இம்மூன்றுமாமெனவே, வழக்கில் இரண்டும் ஒன்றும் ஆம் என்றாராயிற்று; குறுகி உகரமேற் காமல் நிற்றல், வழக்கில் வாராது.

(உ-ம்) நிலவு-நிலா, குறுகி உகர மேற்றலும், இயல்பும் கனவு-கனு என்பதுபோல. தரா, மிடா, கடா-இயல்பு மாத்திரம் (இவை விகாரப்படா) செம்மை + வாய் = செவ்வாய். செவ்வாய்-பண்புத்தொகை. ஈண்டு-பண்பு வண்ணங்குறித்து நிற்றலின் வண்ணப் பண்புத்தொகை: செந்தாமரை, கருங்குதிரை என்பனபோல. வாய்-சினைப்பெயர். (78-82)

வின்மலிதோள், [அ
வெவ்வசுரர் போற்றிசைக்கும் வெஞ்சூனைத் தடிந்
தெவ்வருயிர் சிந்துந் திருமுகமும்-எவ்வுயிர்க்கும்
ஊழ்வினையை மாற்றி யுலவாத பேரின்ப
வாழ்வுதருஞ் செய்ய மலர்முகமும்-சூழ்வோர்
வடிக்கும் பழமறைகள் ஆகமங்கள் யாவும்
முடிக்குங் கமல முகமும்-விடுத்தகலாப்
பாச விருள்துரந்து பல்கதிரிற் சோதிவிடும்
வாச மலர்வதன மண்டலமும்-நேசமுடன்
போகமுறும் வள்ளிக்கும் புத்தேளிர் பூங்கொடிக்கு
மோக மளிக்கும் முகமதியும்-தாகமுடன்

வந்தடியிற் சேர்ந்தோர் மகிழ வரம்பலவுந்
தந்தருளுந் தெய்வமுகத் தாமரையும்,

(ப-ரை) வில்-வில்லைத்தாங்கலாம், மலி - வன்மையுள்ள, தோள்-தோள்களையுடைய, வெவ்வசுரர்-கொடிய இராக்கதர், போற்று இசைக்கும்-துதித்தலைச் செய்கின்ற, வெஞ்சூரனைத் தடிந்து-கொடியசூரனைச் சங்கரித்து, தெய்வர் உயிர் சிந்தும்-பகைவருடைய ஆவியை அகற்றுகின்ற, திருமுகமும்-அழகிய முகமும், எவ்வுயிர்க்கும் - எல்லாவுயிர்க்கும், ஊழ்வினையை மாற்றி-ஊழ்வினையை நீக்கி, உலவாத பேரின்பவாழ்வு-கெடாத பெரிய இன்பத்தை யுண்டாக்குகின்ற வாழ்க்கையை, தரும்-அவ்வுயிர்களுக்குக் கொடுத்தருளுகின்ற, செய்ய மலர்முகமும்-செவ்விய தாமரை மலர்போன்ற திருமுகமும், சூழ்வோர்-ஆராய்வோர், வடிக்கும்-தெளிந் தெடுக்கின்ற, பழ மறைகள்-பழமையாகிய வேதங்கள், ஆகமங்கள் - ஆகமங்கள், யாவும்-முதலிய யாவற்றையும், முடிக்கும் - முடிந்துவைத்த, கமல முகமும்-தாமரை மலர்போன்ற திருமுகமும், விடுத்து அகலா-விட்டு நீங்காத, பாச இருள் துரந்து - பாசமாகிய இருட்டை நீக்கி, பல் கதிரின்-பல சூரியர்கள்போல, சோதிவிடும் - பிரகாசம் கொடுக்கின்ற, வாசம்-நன்மணம் பொருந்திய, மலர்-தாமரை மலர்போலும், வதன மண்டலமும்-திருமுக மண்டலமும், நேசமுடன்-உள்ளன்போடு, போகம் உறும் - போகம் அனுபவிக்கின்ற, வள்ளிக்கும்-வள்ளி நாய்ச்சியாருக்கும், புத்தேளிர் பூங்கொடிக்கும்-தெய்வ யானைக்கும், மோகம் அளிக்கும் - மோகத்தைக் கொடுக்கின்ற, முகமதியும் - சந்திரன்

போன்ற திருமுகமும், தாகமுடன்வந்து - விருப்பத்தோடு எய்தி, அடியில் சேர்ந்தோர் - திருவடிகளில் அடைந்தோர், மகிழ - சந்தோஷிக்குமாறு, வரம் பலவும் - பல வரங்களையும், தந்து அருளும் - கொடுத்தருளுகின்ற, தெய்வம் - தெய்வத் தன்மை பொருந்திய, முகம்தாமரையும்-தாமரை மலர்போலும் திருமுகமும்; (எ-று.)

(வி-ரை) திருக்குறள்

"ஊழிற் பெருவலி யாவுள மற்றொன்று
சூழினுந் தான்முந் துறும்"

என்றபடி ஊழ்வலியை மாற்றுதல் யாவராலும் சாத்தியமன்றாயினும், எல்லா உயிர்களும் தாம்தாம் செய்த ஊழ்வினையை அனுயாசமாக நீக்கி அவர்களுக்குக் கெடாத பெரிய இன்பம் உண்டாகின்ற வாழ்க்கையை அவர்களுக்கே கொடுத்தருளுகின்ற செந்தாமரை மலர்போன்ற திருமுகமென்பார், 'எவ்வுயிர்க்கும் ஊழ்வினையை மாற்றியுலவாத பேரின்ப வாழ்வு தருஞ் செய்ய மலர்முகமும்' என்றார்.

எனவே, அவர் திருமுகம் துக்கநிவர்த்தியும், பரமானந்தப் பிராப்தியும் உண்டாக்கும் பேராற்றல் படைத்தது என்பது பெறப்பட்டது. ஐயந்திரிபற ஆராய்வோர் நன்கு தேர்ந்து பொருளறுதியிட்டுத் தெளிந்தெடுக்கின்ற மறையாதிகளைத் திருவாய்மலர்ந்த திருமுகம் என்பார், 'சூழ்வோர் வடிக்கும் பழமறைக ளாகமங்கள்யாவும் முடிக்குங் கமல முகமும்' என்றார். எனவே, அறுமுகங்களின் திருத்தொழில்களைக் கூறினாரென்க. இவ்வாறே,

திருப்புகழ்

“ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியரு ணாசலம் அமர்ந்த பெருமாளே.” எனவும்,

திருமுருகாற்றுப்படை

“மனனேர் பெழுதரு வாணிற முகனே
மாயிருண் ஞால மறுவின்றி விளங்கப்
பல்கதிர் விரிந்தன் றொருமுக மொருமுக
மார்வல ரேத்த வமர்ந்தினி தொழுகிக்
காதலி னுவந்துவரங் கொடுத்தன்றே யொருமுக
மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்வியோர்க் கும்மே யொருமுக
மெஞ்சிய பொருள்களை யேமுற நாடித்
திங்கள்போலத் திசைவிளக் கும்மே யொருமுகஞ்
செறுநர்த் தேய்த்துச் செல்சம முருக்கிக்
கறுவுகொ ளெஞ்சமொடு களம்வேட் டன்றே யொருமுகங்
குறவர் மடமகள் கொடிபோ னுசுப்பின்
மடவரல் வள்ளியொடு நகையமர்ந்தன்றே யாங்கம்
மூவிரு முகனு முறைநவின் றொழுகலின்”

எனவும் ஏனையோரும் கூறியிருத்தல் காண்க. (82-94)

கொந்தவிழ்ந்த,
வேரிக் கடம்பும் விரைக்குரவும் பூத்தலர்ந்த
பாரப் புயசயிலம் பன்னிரண்டும்,

(ப-ரை) கொந்து அவிழ்ந்த-கொத்தாக மலர்ந்த, வேரிக் கடம்பும் - தேனையுடைய கடப்பமலரும், விரைக் குரவும்-மணத்தையுடைய குராமலரும், பூத்து அலர்ந்த - பூவிட்டு மலர்ந்த, பாரம் - பெரிய, புய சயிலம் - மலைபோன்ற திருத்தோள்கள், பன்னிரண்டும்-பன்னிரண்டும்; (எ-று.)

(வி-ரை) கொத்து என்பது கொந்து என நின்றது; 'தண்டையி னினக்கிளி' என்புழி தட்டை என்பது தண்டை என மெலிந்து நின்றதுபோல என்க. இது செய்யுள் விகாரம். இதனை,

நன்னூல்

"வலித்தன் மெலித்த னீட்டல் குறுக்கல்
விரித்தல் தொகுத்தலும் வரும்செய்யுள் வேண்டுழி"

என்பதானறிக. வேரி என்பதற்கு மணம் என்ற பொருளுமுளதாகலின் 'வேரிக் கடம்பு' என்பதற்கு மணமுள்ள கடப்ப மலர் எனப் பொருள்கூறினுமமையும்.

கடப்பமலரும் குராமலரும் தரிப்பவன் என்பது தோன்ற, 'வேரிக் கடம்பும் விரைக் குரவும்' என்றார். கடப்பமாலை தரித்த மார்பினன் என்பதை விளக்க,

திருமுருகாற்றுப்படை

"வாள்போழ் விசும்பின் வள்ளுறை சிதறித்
தலைப்பெய றலைஇய தண்ணறுங் கானத்

திருள்படப் பொதுளிய பராரை மராஅத்
துருள்பூந் தண்டார் புரளு மார்பினன்"

எனக்கூறியது காண்க. மலைக்குச் சமானமாகத் தோள்களைக் கூறுவது மரபாகலின் 'புயசயிலம்' என்றார். (94-96)

ஆரமுதந், தேவர்க் குதவுந் திருக்கரமுஞ் சூர்மகளி
மேவக் குழைந்தணைந்த மென்கரமும்-ஓவாது [ர்
மாரி பொழிந்த மலர்க்கரமும் பூந்தொடையல்
சேர அணிந்த திருக்கரமும்-மார்பகத்தில்
வைத்த கரதலமும் வாமமருங் கிற்கரமும்
உய்த்த குறங்கி லொருகரமும்-மொய்த்த
சிறு துடிசேர் கையுமணி சேர்ந்ததடங் கையும்
கறுவுசம ரங்குசஞ்சேர் கையுந்-தெறுபோர்
அதிர்கே டகஞ்சுழற்றும் அங்கைத் தலமும்
கதிர்வாள் விதிர்க்குங் கரமும்,

(ப-ரை) தேவர்க்கு ஆர் அமுதம் உதவும் திருக்கரமும்-தேவர்க்கு அரிய அமிர்தத்தை வழங்கிய திருக்கையும், சூர் மகளிர்-தேவமகளில், மேவ-விரும்ப, குழைந்தணைந்த மென் கரமும்-குழந்தணைந்த மெல்லிய திருக்கையும், ஓவாது-குறையாமல், மாரி பொழிந்த-மழைபெய்விக்கின்ற, மலர்க்கரமும்-தாமரை மலர்போலும் திருக்கையும், பூந்தொடையல் சேர அணிந்த திருக்கரமும் - மலர்மாலைகளை நெருங்கத் தரித்த திருக்கையும், வாம மருங்கில் கரமும்-இடப்பக்கத் திருவரையில் (இடையின் இடப்பக்கத்தில்) வைத்தருளிய திருக்கையும், குறங்கில் - திருத்தொடையின்மேல், உய்த்த - வைத்

தருளிய, ஒரு கரமும் - ஒரு திருக்கையும், மொய்த்த - நெருங்கிய, சிறு துடிசேர் கையும் - சிறிய உடுக்கை சேர்ந்த திருக்கையும், மணி சேர்ந்த தடம் கையும் - அக்கமணி வடம் பொருந்திய பெரிய திருக்கையும், கறுவு-கோபிக்கின்ற, சமர் அங்குசம் சேர் கையும் - சண்டைக்குரிய அங்குசம் என்னும் கருவி சேர்ந்திருக்கின்ற திருக்கையும், செறுபோர்-வெல்லுகின்ற யுத்தத்தில், அதிர் கேடகம் சுழற்றும் - ஒலிக்கின்ற கேடகம் என்னும் கருவியை சுழற்றுகின்ற, அம் கைத்தலமும்- அழகிய திருக்கரமும், கதிர் வாள்-பிரகாசத்தையுடைய வாட்படையை, விதிர்க்கும் கரமும்-அசைத்துக் கொண்டிருக்கின்ற திருக்கையும்; (எ-று.)

(வி-ரை) திருக்கரங்களின் செயல்கள் கூறப்படுகின்றன. இப்பன்னிரு கைகளின் தொழில்களை,

திருமுருகாற்றுப்படை

“ஆரந் தாழ்ந்த வம்பகட்டு மார்பிற்
செம்பொறி வாங்கிய மொய்ம்பிற் சுடர்விடு
வண்புகழ் நிறைந்து வசிந்துவாங்கு நிமிர்தோள்
விண்செலன் மரபி னையர்க்கேந்திய தொருகை
உக்கஞ் சேர்த்திய தொருகை
நலம்பெறு கலிங்கத்துக் குறங்கின்மிசை யசைஇய தொருகை
அங்குசங் கடாவ வொருகை யிருகை
ஐயிரு வட்டமொ டெஃகுவலந் திரிப்பவொருகை
மார்பொடு விளங்க வொருகை
தாரொடு பொலிய வொருகை

கீழ்வீழ் தொடியொடு மீமிசை கொட்ப வொருகை
பாடின் படுமணி யிரட்ட வொருகை
நீனிற விசும்பின் மலிதுளி பொழிய வொருகை
வானர மகளிர்க்கு வதுவை சூட்ட வாங்கப்
பன்னிரு கையும் பாற்பட வியற்றி"

எனக் கூறியிருத்தலும் காண்க. கரம்-மார்பு-குறங்கு-சினைப் பெயர்கள். மலர்க்கரம்-உவமைத்தொகை. அங்குசம், கேடகம் இவைகள் போர்க்கருவிகள். (96-106)

முதிராத, [ணைந்த
கும்பமுலைச் செவ்வாய்க் கொடியிடையார் வேட்ட
அம்பொன் மணிப்பூ ணகன்மார்பும்,

(ப-ரை) முதிராத-முற்றாத, கும்பமுலை-குடம்போலும் கொங்கைகளையும், செவ்வாய் - செவந்த வாயையும், கொடி இடையார்-கொடிபோலும் இடைகளையுமுடைய தெய்வநாயகி அம்மையாரும் வள்ளிநாயகி அம்மையாரும், வேட்டு அணைந்த-விரும்பிச்சேர்ந்த, அம் பொன்-அழகிய பொன்னாலும், மணி-இரத்தினங்களாலும் செய்யப்பட்ட, பூண் - திருவாபரணங் களைத் தரித்தருளிய, அகன் மார்பும்-அகலமாகிய திருமார்பும்; (எ-று.)

(வி-ரை) கொங்கைக்கு அழகு,முற்றாமலும் குடம்போலு மிருத்தலுமாகலின் 'முதிராத கும்பமுலை' என்றார். எனவே, கொங்கை முற்றிவிட்டால் அண்ணாந்து பார்க்காமல் தலை குனிந்துவிடும் என்பது குறிக்கவும் உபயநாய்ச்சிமார் இளமைச் சிறப்பைக் குறிக்கவுமே இவ்வாறு கூறினாரென்க.

திருவிளையாடற் புராணம்

"பங்கயற்க ணரியபரம் பரனுருவே தனக்குரிய
 படிவ மாகி
யிங்கயற்க ணகனுலக மெண்ணிறந்த சராசரங்க
 ளீன்றுந் தாழாக்
கொங்கயற்கண் மலர்க்கூந்தல் குமரிபாண் டியன்மகள்போற்
 கோலங் கொண்ட
அங்கயற்க ணம்மையிரு பாதப்போ தெப்போது
 மகத்துட் கொள்வாம்."

என்பது ஈண்டு நோக்கத்தக்கது. மார்பில் பல ஆபரணங்கள் அணிந்துகொள்வது வழக்கமாயிருப்பினும், மதாணி என்னும் ஆபரணமே விசேஷமாகப் புருஷர்களால் அணியப்படுதலினாலும் வீரர்களுக்கும் தெய்வீகம் பொருந்தியவர்களுக்கும் மார்பு அகலமாக இருக்குமாகலின், 'பூண் அகன் மார்பு' என்றார். கும்பமுலை, கொடியிடை-உவமத்தொகைகள். செவ்வாய் - பண்புத்தொகை. முலை, வாய், இடை - சினைப் பெயர்கள். (106-108)

பைம்பொற்,
புரிநூலுங் கண்டிகையும் பூம்பட் டுடையும்
அரைஞா ணுங் கச்சை யழகும்-திருவரையும்
நாதக் கழலும் நகுமணிப்பொற் கிண்கிணியும்
பாதத் தணிந்த பரிபுரமும்-சோதி
இளம்பரிதி நூறு யிரங்கோடி போல
வளந்தருதெய் வீக வடிவும்-உளந்தனிற்கண்

டாதரிப்போர்க் காருயிரா யன்பரகத் தாமரையின்
மீதிருக்குந் தெய்வ விளக்கொளியே,

(ப-ரை) பைம் பொன் புரிநூலும் - பசிய பொன்னாற் செய்த பூணூலும், கண்டிகையும் - உருத்திராக்க மாலையும்' பூம்பட்டு உடையும் - பூத்தொழி லமைந்த பட்டாடையும், அரைஞாணும்-திருவரை நாணும், கச்சை அழகும் - அரைக் கச்சையின் அழகும், திரு அரையும்-திருவிடையும், பாதத் தணிந்த - திருவடிகளில் தரித்த, நாதக் கழலும் - ஒலியைச் செய்யும் வீரகண்டையும், நகுமணிப்பொன் கிண்கிணியும் - விளங்குகின்ற இரத்தினங்களிழைத்த பொற் கிண்கிணியும், பரிபுரமும் - நூபுரமும், சோதி - ஒளியுள்ள, இளம்பரிதி நூறுயிரங்கோடி போல - நூறுயிரங்கோடி பால சூரியர் போல விளங்கும், வளம் தரு - வண்மையைத் தருகின்ற, தெய்வீக வடிவும்-தெய்வீகமான திருவுருவமும், உளந்தனிற் கண்டு-மனத்தி லுணர்ந்து, ஆதரிப்போர்க்கு - அன்பு செய் வோர்க்கு, ஆர் உயிராய்-அரிய உயிராய், அன்பர்-மெய்யன் பர்களுடைய, அகத்தாமரையின் மீது - இதய கமலங்களில், இருக்குந் தெய்வ விளக்கொளியே-எழுந்தருளி யிருக்கின்ற கடவுள விளக்காகிய ஒளியே; (எ-று.)

(வி-ரை) உடற்சுமையாயுள்ள ஏனைய ஆபரணங்கள் போ லல்லாது புனைந்தோர்களுடைய வினையைப் போக்குவதாயும் சிவபதமளிப்பதாயும் சிவபக்தி மிகுதியை உண்டாக்குவதாயு முள்ளது உருத்திராக்கமாலையாகலின் தாமும் அதனை யணிந் துள்ளாராகலின் 'கண்டிகையும்' என்றார்.

சோணசைலமாலை

"கண்டிகைக் கலனே கலனெனவிழைந்து
காயமே லணிந்து" எனவும்,

சீகாளத்திப் புராணம்

"ஆயிரங் கலனுடம் பணைத்துத் தாங்கினும்
மாயிரும் பொறையலால் வருவ துண்டுகொல்
நாயகன் விழிமணி யென்றோர் நாளுடல்
மீயணிந் திடில்வினை யாவும் வீயுமே." எனவும்,

உருத்திராக்க விசிட்டம்

"பூணுமற் கண்டியினைப் பூசைபுரி வார்பலத்தைக்
காணு ரெனவே கழறுமறை-நாணுதே
பூண்டுசிவ பூசைபுரி வார்புகுந்து மேற்புரத்துக்
காண்டிருப்ப ரீசன் கழல்."

எனவும் வருமாற்றானறிக. 'பூம்பட்டு' என்பதற்கு பொலிவமைந்த பட்டு என்றாயினும் அழகியபட்டு என்றாயினும் கூறலாம. பூ + பட்டு = பூம்பட்டு என்றாயது.

நன்னூல்

"பூப்பெயர் முன்னின மென்மையுந் தோன்றும்"

என்னுஞ் சூத்திர விதியானென்க. கச்சை - அரைக்கச்சை; "கச்சைத் திருவரையும்" என்பர் பின்; 114-5-கண்ணிகளில். வீரகண்டையும் கிண்கிணியும் பரிபுரமும் ஆகிய மூன்று ஆபரணங்களும் திருத்தாள்களில் தரிக்கப்படுவனவாகலின் 'பாதத் தணிந்த நாதக்கழலும் கிண்கிணியும் பரிபுரமும்' என அன்

வயப்படுத்தப்பட்டது. கழல்-ஆடவர் காலணியினொன்று. இது வீரத்தின் பொருட்டுத் தரிப்பது. கிண்கிணி-கிண்கிண் எனச் சப்தம் செய்தலின் இப்பெயர்த்தாயிற்று எனச் சிலர் கூறுவர். இதுவே கிங்கிணி எனவும் படும் என்பர் ஒரு சிலர். அது இதனின் வேறு என்பர் வேறு சிலர். பரிபுரம்-நூபுரம். இது காலணிவகையினொன்று சிலம்பு எனவும் கூறுவர். உதய சூரியன் என்பது குறிக்கவே 'இளம்பரிதி' என்றார். சதகோடி சூரியர்போலப் பிரகாசமுடையானெனவே 'இளம்பரிதி நூறு யிரங்கோடி' என்றார். இதனை,

திருவகுப்பு

"சதகோடி சூரியர்களுதய வுதயமென
ஒரு சோதி வீசுவதும்"

என்பதானறிக. தெய்வீகத் திருவுருவமுடையானாகலின் 'தெய்வீகவடிவும்' என்றார். இதனை,

திருமுருகாற்றுப்படை

"தெய்வஞ் சான்ற திறல்விளங் குருவின்"

என்பதானறிக. மெய்யன்பருடைய உள்ளத்தாமரையிலிருக்கும் கடவுள் விளக்கொளியாகலின் 'அன்பரகத் தாமரையின் மீதிருக்குந் தெய்வக விளக்கொளியே' என்றார். இதனை,

மீனாட்சியம்மன் பிள்ளைத்தமிழ்

"தொழும்பருளக் கோயிற்கேற்றும் விளக்கே"

(வருகைப்பருவம், 9) என்பதானறிக. (108-116)

ஓதியவைந், [தொழிற்கும்
தோங்காரத் துள்ளொளிக்கு முள்ளொளியா யைந்
நீங்காத பேருருவாய் நின்றோனே,

(ப-ரை) ஓதிய-சொல்லப்பட்ட, ஐந்து ஓங்காரத்து-ஐந்தெழுத்தான ஓங்காரத்தின், உள் ஒளிக்கும்-உள் ஒளிக்கும், உள் ஒளியாய்-உள் ஒளியாகி, ஐந்தொழிற்கும் நீங்காத - ஐந்தொழிற்கும் வேறுகாத, பேர் உருவாய் நின்றோனே-பெரிய உருவத்துடன் இருந்தவனே; (எ-று.)

(வி-ரை) ஐந்து ஓங்காரம் - அகாரம், உகாரம், மகாரம், நாதம், விந்து. 'ஓங்காரத்துள் ளொளிக்கு முள்ளொளியாய' என்பதற் கியைய,

கந்தரலங்காரம்

"ஓங்காரத் துள்ளொளிக் குள்ளே முருக னுருவங்கண்டு"

எனக்கூறியது ஈண்டு நோக்கத்தக்கது. (116-118)

தாங்கரிய,
மந்திரமே சோரியா வான்பதமே மாமுடியாத்
தொந்தமுறும் வன்னமே தொக்காகப்-பந்தனையால்
ஒத்த புவனத் துருவே உரோமமாத்
தத்துவங்க ளேசத்த தாதுவா-வைத்த
கலையே யவயவமாக் காட்டுமத்து வாவின்
நிலையே வடிவமா நின்றோய்,

(ப - ரை) தாங்கரிய - பொறுத்தற்கரிய, மந்திரமே சோரியா - மந்திராத்துவாவே உதிரமாகவும், வான்பதமே

மாமுடியா-பெருமையுடைய பதாத்துவாவே பெரிய முடியா கவும், தொந்தம் உறும் - கட்டுப் பொருந்திய, வன்னமே தொக்குஆக - வர்ணத்துவாவே தோலாகவும், பந்தனையால்-பாசத்தால், ஒத்த புவனத்து உருவே உரோமமா - ஒத்த புவனத்துவாவின் உருவமே மயிர்களாகவும், தத்துவங்களே சத்த தாதுஆக - தத்துவாத்துவாவே எழுவகைத் தாதுக்களாவும், வைத்தகலையே - அமைத்த கலாத்துவாவே, அவயவமா-உறுப்புக்களாகவும், காட்டும் அத்துவாவின் நிலையே - காட்டுகின்ற அத்துவாக்களின் நிலையே, வடிவம்ஆக நின்றோய் - திருவடிவமாகவுங் கொண்டு இருந்தவனே; (எ-று.)

(வி-ரை) "மந்த்ரமுதல் ஆறு அத்துவாவும் என 26-27-ஆம் கண்ணிகளிற் கூறியிருத்தல் காண்க. அத்துவா - வழி தொக்கு உடல் எனினுமாம். துவக்கு எனவும்படும். அன்றி, துவக்ரு-தோல்; அது கருவியாகுபெயராய் உடலை யுணர்த்திற்று எனக் கூறினுமமையும்.

'பதமே முடியா' என்பதில் பாதம் முடியென்னும் பொருள்பட்டு ஒருநயம் தோற்றுகின்றது. சத்ததாது - எழுவகைத் தாதுக்கள். அவைகள்: இரதம் (மச்சை), உதிரம், எலும்பு, தோல், தசை, மூளை, சுக்கிலம் என்பன். இவற்றை,

சூடாமணி நிகண்டு

"இரதமே யுதிர மென்பு
பரவுதோ லிறைச்சி மூளை பற்றுசுக் கிலந்தா தேழே"

என்பதானறிக. இவ்வெழுவகைத் தாதுக்களா லாக்கப்பட்ட உடலை, புறத்துடல் எனவும், தூலதேகம் எனவுங் கூறுவர். ()

பலகோடி,
அண்டம் உருவாகி அங்கஞ் சராசரமாய்க்
கண்டசத்தி மூன்றுட் காரணமாய்த்-தொண்டுபடும்
ஆவிப் புலனுக் கறிவளிப்ப வைந்தொழிலும்
ஏவித் தனிநடத்து மெங்கோவே-மேவ
வருமட்ட மூர்த்தமாம் வாழ்வேமெய்ஞ் ஞானந்
தருமட்ட யோகத் தவமே,

(ப-ரை) பலகோடி அண்டம் உருவாகி - எண்ணிறந்த அண்டங்களே வடிவமாகி, சராசரம் அங்கம் ஆய் - சராசரங்களே உறுப்பாகி, கண்டசத்தி மூன்றும் - தொழில்கள் கண்டருளிய சத்தி மூன்றும், உள் கரணமாய் - அகக்கரணமாய், தொண்டு படும் - அடிமைப் படுகின்ற, ஆவிப் புலனுக்கு - உயிராகிய புலனுக்கு, அறிவு அளிப்ப - அறிவைப் புகட்ட, ஐந்தொழிலும் ஏவி-பஞ்சகிருத்தியத்தையும் ஏவி, தனி நடத்தும் - தனித்து நடத்துகின்ற, எம் கோவே - எம்முடைய தலைவனே!, மேவ வரும்-பொருந்த வருகின்ற, அட்ட மூர்த்தமாம் வாழ்வே-அட்டமூர்த்தமாயுள்ள வாழ்க்கையே, மெய்ஞ் ஞானந் தரும்-உண்மையறிவைக் கொடுக்கின்ற, அட்டயோகத் தவமே-அட்டாங்க யோகத்தவனே; (எ-று.)

(வி-ரை) 'கண்ட சத்தி மூன்றுட் காரணமாய்' என்றதற் கியைய 'திரிகரணம் ஆகவரும் இச்சை அறிவு இயற்றல்' என (9-10) கண்ணிகளில் கூறியுள்ளது காண்க. அட்ட மூர்த்தம்-பிருதிவி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம், சூரியன், சந்திரன், ஆன்மாவென்பன. இதனை,

திருவாசகம்

"நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன் [வும்
புலனாய மைந்தனோ டெண்வகையாய்ப் புணர்ந்துநின்றான்" என

திருவிளையாடற் புராணம்

"இயமான னிந்திரவி யெரிவா னிலஞ்சலில மெறிகா லெனும்
பகுதி யிருநான்
மயமான சுந்தரனை மனவாய்மெய் யன்பினிறை வழிபா
டடைந்தவா குணனுய்ச்
சயவேளை வென்றவடி வினனீறில் வெற்றிபெறு சதவேள்வி
யிந்திரனை நிகர்வோன்
இயன்மேனி கொண்டவொளி யினிலேழ் பசும்புரவி யினதேசு
வென்ற வரகுணனே." எனவும்,

சோணசைலமாலை

"திங்களுங் கதிரு மிலங்கிய மானுந்
திகழ்பெரும் பூதமோ ரைந்தும்"

எனவும் வருவனவற்றானறிக. உண்மையறிவைக் கொடுக்கின்ற எண்வகை யோகத் தவவடிவினன் என்பார், 'மெய்ஞ் ஞானந் தருமட்ட யோகத் தவமே' என்றார்.

அட்டயோகம் - இயமம் முதலிய எட்டு அங்கங்களை யுடைய யோகங்கள். 'மேவ வரும்' என்பதை மேவ + அரும் எனப் பிரித்து, எடுப்பதற்கு அரிய எனப் பொருளுரைக்கினு மமையும். (124-130)

பருவத், தகலாத பேரன் படைந்தோ ரகத்துட்
புகலாகு மின்பப் பொருப்புஞ்-சுகலளிதப்

பேரின்ப வெள்ளப் பெருக்காறு மீதானந்
தேரின்ப நல்குந் திருநாடும்-பாரின்பம்
எல்லாங் கடந்த இருநிலத்துட் போக்குவர
வல்லா துயர்ந்த அணிநகரும்-தொல்லுலகில்
ஈறு முதலுமகன் றெங்குநிறைந் தைந்தெழுத்தைக்
கூறி நடாத்துங் குரகதமும்-ஏறுமதந்
தோய்ந்து களித்தோர் துதிக்கையினாற் பஞ்சமலங்
காய்ந்தசிவ ஞானக் கடாக்களிறும்-வாய்ந்தசிவ
பூரணத்துட் பூரணமாம் போதம் புதுமலரா
நாரகத்துட் கட்டு நறுந்தொடையுங்-காரணத்துள்
ஐந்தொழிலும்ஓவா தளித்துயர்ந்த வான்கொடியும்
வந்தநவ நாத மணிமுரசுஞ்-சந்ததமும்
நீக்கமின்றி ஆடி நிழலசைப்பான் போற்புவனம்
ஆக்கி அசைத்தருளு மாணையுந்-தேக்கமழ்ந்து
வீசும் பனுவல் விபுதர் தனித்தனியே
பேசுந் தசாங்கமெனப் பெற்றோனே,

(ப-ரை) பருவத்து-பக்குவத்தில், அகலாத பேர் அன்பு அடைந்தோர்-நீங்காத பேரன்பை யெய்தியவர்களுடையமனத்தில், புகல் ஆகும் - புகுவதற் கேற்ற, இன்பப் பொருப்பும்-ஆனந்த மலையும், சுகலளித-சுகவழகு பொருந்திய, பேரின்ப வெள்ளப் பெருக்கு ஆறும்-பேரின்பமான வெள்ளப் பெருக்காகிய ஆற்றையும், மீதானம் - மேலிடத்தார், தேர் இன்பம் நல்கும் திருநாடும் - ஆராய்கின்ற இன்பம் கொடுக்கின்ற திருநாடும், பார் இன்பம் எல்லாம் கடந்த - உலக இன்பம் எல்லா

வற்றினையும் தாண்டிய, இருநிலத்துள் - பெரிய பூமியில், போக்கு வரவு அல்லாது - இறப்பும் பிறப்பும் அல்லாது, உயர்ந்த அணிநகரும்-மேம்பட்ட அழகிய நகரமும், தொல் உலகில் - பழமையான உலகத்தில், ஈறும் முதலும் அகன்று - அந்தமும் ஆதியும் தாண்டி, எங்கும் நிறைந்து-எல்லாவிடத்திலும் நீக்கமற நிறைந்து, ஐந்து எழுத்தைக்கூறி நடாத்தும் குரகதமும்-ஐந்தெழுத்தைச் சொல்லிச் செலுத்துகின்ற குதிரையும், ஏறுமதம் தோய்ந்து-அதிகரிக்கின்ற மதத்தில் படிந்து, களித்து-களிப்பினை யடைந்து, ஓர் துதிக்கையினால் - ஒப்பற்ற துதிக்கையினால், பஞ்சமலம் காய்ந்த சிவ ஞானக்கடாக்களிறும் - பஞ்சமலத்தை அருவருத்த சிவஞானமாகிய ஆண்யானையும், வாய்ந்த சிவ பூரணத்துள்-கிடைத்த சிவ நிறைவில், பூரணம் ஆம்-நிறைவாகிய, போதம்-மெய்யறிவை, புதுமலர் ஆக - அன்றலர்ந்த புஷ்பமாகக்கொண்டு, நார் அகத்தில்-மனமாகிய நாரில், கட்டும் நறுந்தொடையும்-கட்டப்படும் நல்ல மாலையும், காரணத்துள் ஐந்தொழிலும்-முதற்பொருளில் பஞ்ச கிருத்தியத்தையும், ஓவாது அளித்து - இடையறாமல் இயற்றி, உயர்ந்த ஆன்கொடியும் - மேம்பட்ட இடபக் கொடியும், வந்த நவநாத மணிமுரசும் - உண்டான ஒன்பதுவகை நாதமான அழகிய முரசமும், சந்ததமும் நீக்கம் இன்றி-எக்காலத்திலும் இணைவிடாமல், ஆடி நிழல் அசைப்பான் போல்-கண்ணாடியில் தன்னிழலை ஆட்டிப் பார்ப்பவனைப்போல, புவனம் ஆக்கி-உலகத்தைச் சிருஷ்டித்து, அசைத்து அருளும் ஆணையும்-இயக்கி யருளுகின்ற திருவாணையும், தேகமழ்ந்து

வீசும் - தேனின் வாசனை வீசுகின்ற, பனுவல் விபுதர் - நூல் இயற்றும் அறிஞர், தனித்தனியே பேசும் - வெவ்வேருகப் பேசுகின்ற, தசாங்கமெனப் பெற்ருனே - தசாங்கங்களாக வைத்துள்ளவனே; (எ-று.)

(வி-ரை) தசாங்கம் - மலை, ஆறு, நாடு, நகர், குதிரை, யானை, மாலை, கொடி, முரசு, ஆணை என்பன. லளிதம்- அழகு. மீதானம் - மேலான இடம்; இஃது இடவாகு பெயராய்த் தேவர்களைக் குறிக்கின்றது.

பரானந்த முத்தியைக் குறிக்கவே, 'போக்குவர வல்லா துய்ந்த வணிகர்' என்ருர். 'போக்கும் வரவும் நினைப்பும் மறப்பும் பகலும் இரவும் கடந்துலவா இன்பம்' என்ருர் முன்னும் (கண்ணி - 29). பஞ்சமலம் - ஆணவம், மாயை, கன்மம், திரோதாயி, மாயேயம் என்பன.

உயர்ந்த ஆன்கொடி எனப் பிரிக்காமல், உயர்ந்த 'வான் கொடி' எனப் பிரித்து மேம்பட்ட பெருமையையுடைய கொடி எனப் பொருள்கூறினும் ஒருவாறு பொருந்தும். ஆடி- கண்ணுடி. புவனங்களையெல்லாம் படைத்து அவைகளை இயக்குகின்ற திருவாணை என்பார், 'புவனம் ஆக்கி அசைத் தருளு மாணையும்' என்ருர்.

திருவிளையாடற் புராணம்

"தன்வலி யாணை தாங்கி
மூவண்ணறன் சந்நிதி முத்தொழில் செய்ய"

என்பதானறிக. தேக்கமழ்ந்து என்பதற்கு, இனிமை பொருந்தி; தெய்வத்தன்மை பொருந்தி எனினுமமையும். ()

தேசுதிகழ்,
பூங்கயிலை வெற்பிற் புனைமலர்ப்பூங் கோதையிடப்
பாங்குறையு முக்கட் பரஞ்சோதி-ஆங்கொருநாள்
வெந்தகுவர்க் காற்றாத விண்ணோர் முறைக்கிரங்கி
ஐந்து முகத்தோ டதோமுகமுந்-தந்து
திருமுகங்க ளாறாகிச் செந்தழற்க ணாறும்
ஒருமுகமாய்த் தீப்பொறியா றுய்ப்ப,

(ப-ரை) தேசுதிகழ்-பிரகாசம் பொருந்திய, பூங்கயிலை வெற்பில்-அழகிய கயிலாயகிரியில், புனை மலர்ப்பூம் கோதை-அணிந்த மலர்களையுடைய அழகிய உமாதேவியாரை, இடப் பாங்கு உறையும் முக்கட் பரஞ்சோதி-தம்முடைய வாமபாகத்தில் வீற்றிருக்கப்பெற்ற திரிநேத்திரங்களையுடைய உயர்ந்த ஒளிவடிவமான சிவபெருமான், ஆங்கு ஒருநாள்-அப்பொழுது ஒரு தினத்தில், வெந்தகுவர்க்காற்றாத - கொடிய அசுரர்கள் செயல்களுக்குத் தாங்காத, விண்ணோர் முறைக்கிரங்கி - வானோர்கள் முறையீட்டிற்கு இரக்கமுற்று, ஐந்துமுகத்தோடு அதோ முகமுந்தந்து-ஐந்துதிருமுகத்துடனே அதோமுகத்தையும் கொண்டு, திருமுகங்கள் ஆறாகி-ஆறு திருமுகங்கள் உடையவராய், செந்தழற்கண் ஆறும் - சிவந்த தீக்கண்கள் ஆறும், ஒருமுகமாய்-ஒருமட்டாய், தீப்பொறி ஆறுஉய்ப்ப - ஆறு நெருப்புப் பொறிகளை உண்டாக்கி; (எ-று.)

(வி-ரை) முக்கண்-சோமன், சூரியன், அக்கினி. ஐந்து முகம் - ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம். இவை மேல்நோக்கிய முகங்கள். அதோமுகம்

என்பது கீழ்நோக்கிய முகம். இக்கண்ணிகளிற் கூறப்பட்ட செய்தியை,

கந்தபுராணச் சுருக்கம்

"சற்றுந் தகவில் கொடுஞ்சூரன் றன்னு லிந்நா ளின்னன்மிக
உற்று வருந்தித் திரிந்திலைத்தோ முன்னைப் போல வொருசுதனை
வெற்றி பொருந்த வளித்தெமது விழுமந் துரப்ப வேண்டுமென [ன்."
அற்றுன் றியசீர்க் களப்பெருமா னறுமா முகங்கொண் டாங்கிருந்தா

கந்தபுராணம்

"வந்திக்கு மலரோ னாதி வானவ ருரைத்தல் கேளாப்
புந்திக்கு ளிடர்செய் யற்க புதல்வனைத் தருது மென்னு
வந்திக்கு நிகர்மெய் யண்ண லருள்புரிந் தறிஞ ராயோர்
சிந்திக்குந் தனது தொல்லைத் திருமுக மாறுங் கொண்டான்."

"சிற்பரன் முன்கொண் டுள்ள திருமுக மாறு தம்மிற்
பொற்புறு நுதற்கண் டோறும் புலிங்கமொன் றொன்று தந்தான்."

என்னும் செய்யுட்களால் அறியலாகும். (148-154)

விரிபுவனம்,
எங்கும் பரக்க இமையோர்கண் டஞ்சுதலும்
பொங்கு தழற்பிழம்பைப் பொற்கரத்தால்-அங்கண்
எடுத்தமைத்து
வாயுவைக்கொண் டேகுதியென் றெம்மான்
கொடுத்தளிப்ப
மெல்லக் கொடுபோய்-அடுத்ததொரு
பூதத் தலைவகொடு போதியெனத் தீக்கடவுள்
சீதப் பகீரதிக்கே சென்றுய்ப்பப்

போமொருசற் [திற்
றன்னவளுநங் கொண்டமைதற் காற்றுள் சரவணத்
சென்னியிற்கொண் டுய்ப்பத்
திருஉருவாய்-முன்னர்
அறுமீன் முலையுண் டழுதுவிளை யாடி
நறுநீர் முடிக்கணிந்த நாதன்-குறுமுறுவற் [லும்
கன்னியொடுஞ் சென்றவட்குக் காதலுருக் காட்டுத
அன்னவள்கண் டவ்வுருவம் ஆறினையுந்-தன்னிரண்டு
கையா லெடுத்தணைத்துக் கந்தனெனப் பேர்புனைந்
மெய்ஆறு மொன்றாக மேவுவித்துச்-செய்ய [று
முகத்தி லணைத்துச்சி மோந்து முலைப்பால்
அகத்துள் மகிழ்பூத் தளித்துச்-சகத்தளந்த
வெள்ளை விடைமேல் விமலன் கரத்திலளித்து
உள்ள முவப்ப உயர்ந்தோனே,

(ப-ரை) விரிபுவனம் எங்கும் பரக்க - விரிந்த புவனங்களெல்லாம் பரவ, இமையோர் கண்டு அஞ்சுதலும்-தேவர்கள் பார்த்து பயப்படவும், பொங்குதழற் பிழம்பை - மிகுந்த நெருப்புத் திரட்சியை, பொன் கரத்தால் அங்கண் எடுத்து அமைத்து - அழகிய கையால் அவ்விடத்திலிருந்து எடுத்து வைத்து, வாயுவைக்கொண்டு ஏகுதி என்று - வாயுதேவனைப் பார்த்து இப்பொறிகளை எடுத்துக்கொண்டு போவாயாக என்று, எம்மான் கொடுத்து அளிப்ப-எம் இறைவன் கொடுத்து அவற்றை எடுத்துக்கொண்டுபோகும் ஆற்றலையும் கொடுத்தருள, மெல்லக் கொடுபோய்-மெல்லக் கொண்டுபோய், அடுத்

தது ஒரு-அடுத்து நிற்பவனாகிய ஒப்பற்ற, பூதத்தலைவ கொடு போதி என-தீத்தலைவனே இப்பொறிகளைக் கொண்டுபோகக் கடவாய் என்று வாயுதேவன்கூற, தீக்கடவுள்-அக்கினிதேவன், சீத பகீரதிக்குச் சென்று உய்ப்ப-குளிர்ச்சி பொருந்திய கங்கா நதியில் கொண்டுபோய்விட, அன்னவளும் - அக்கங்கையும், போது ஒருசற்று - சிறிதுநேரம், கொண்டு - தன்னிடத்தில் வைத்துக்கொண்டு, அமைதற்கு ஆற்றாள் - அதற்குமேல் தாங்கமுடியாதவளாய், சென்னியில் கொண்டு-தலைமேல் தாங்கிக்கொண்டுபோய், சரவணத்து உய்ப்ப-சரவணப்பொய்கையில் விட, திரு உருவாய்-திருவுருவங்களை யுடையனவாய், முன்னர் அறுமீன் முலையுண்டு - முன்னே கார்த்திகையின் முலைப்பாலுண்டு, அழுது விளையாடி - அழுதும் திருவிளையாடல்களைச் செய்தும், நறுநீர் முடிக்கு அணிந்த நாதன்-கங்காதேவியைத் தமது சடாமுடியில் தரித்தருளிய இறைவன், குறுமுறுவல் கன்னியொடுஞ் சென்று-புன் சிரிப்பையுடைய உமாதேவியாரோடும் சரவணப் பொய்கைக்குப்போய், அவட்குக் காதல் உருக்காட்டுதலும் - அவ்வுமாதேவியாருக்கு பிரியத்தை யுண்டாக்குகின்ற வடிவத்தைக் காட்டவும், அன்னவள் கண்டு-அவ்விறைவு அவ்வடிவத்தைப் பார்த்தருளி, அ உருவம் ஆறினையும் - அந்த ஆறு உருவங்களையும், தன் இரண்டு கையால் எடுத்து அணைத்து-தன்னுடைய உபயத்திருக்கரங்களாலும் எடுத்து அணைத்து, மெய் ஆறும் ஒன்றாக மேவுவித்து-ஆறு திருமேனியும் ஒன்றாகும்படி சேர்த்து, கந்தன் எனப் பெயர் புனைந்து-(அதனால்) கந்தன் என்று பெயரிட்டு, செய்ய

முகத்தில் புணைத்து-செழிய முகத்தில் சேர்த்து அணைத்து, உச்சி மோந்து-தலையை முகர்ந்து, அகத்துள் மகிழ்பூத்து-உளமகிழ்ந்து, முலைப்பால் அளித்து - திருமுலைப்பால் உண்பித்து, சகத்தளந்த வெள்ளை விடைமேல்-உலகத்தையளந்த வெண்மையாகிற ஆனேற்றின்மேல் ஆரோகணித்துள்ள, விமலன் கரத்தில் அளித்து - மலரகிதனை சிவபெருமான் திருக்கரத்தில் கொடுத்தருளி, உள்ளம் உவப்ப உயர்ந்தோனே-அவர்கள் மனங்களிகூர உயர்வாங் குணமுள்ளோனே; (எ-று.)

(வி-ரை) கங்காநதி பகீரதனுல் கொண்டுவரப்பட்டதாகலின் 'பகீரதி' என்றார். போது ஒருசற்று-சிறிதுநேரம். முன்னர்-முதலில். அறுமீன் - கார்த்திகைமாதர் அறுவர். முன்னர் கார்த்திகை மாதர் முலைப்பாலையும் பிறகு உமாதேவியார் திருமுலைப்பாலையும் உண்டமையால் 'முன்னர் அறுமீன் முலையுண்டு' என்றார். அன்றி, முன்னர் என்பதற்கு, முன்னே, முற்காலத்தில் எனப்பொருள் கூறினும் அமையும். அப்பொருள் அத்துணைச் சிறப்புடைத்தன்று. 'அறுமீன் முலையுண்டழுது' என்பதற் கியைய,

கந்தாலங்காரம்

"அறுவர் கொங்கை விரும்பிக் கடலழக் குன்றழச்
சூரழ விம்மியழும் குருந்தை"

எனக் கூறியிருத்தலுங் காண்க. 'காதல் உரு' என்பதற்கு திருக்குமாரனுடைய திருவுருவம் எனினும் அமையும். கந்தன்-சேர்க்கப்பட்டவன். இதனை,

கந்தபுராணம்

"அந்த மில்லதோர் மூவிரு வடிவமொன் றாகிக்
கந்த னென்றுபேர் பெற்றனன் கவுரிதன் மைந்தன்"

"சேயவன் வடிவ மாறுந் திரட்டிநீ யொன்றாய்ச் செய்தாய்
ஆயத னாலே கந்த னெனு நாமம் பெற்றான்"

தணிகைப் புராணம்

"ஆறுமோ ருருவ தாக வாக்கலிற் கந்தனானன்"

என்பனவற்றானறிக. சிவபெருமானவர் உலகத்தை அளந்த திருமாலாகிய வெண்மையையுடைய இடபவாகன முடையவராகலின், 'சகத்தளந்த வெள்ளை விடைமேல் விமலன்' என்றார். தேவர்கள் மனிதர்களைப்போலக் கண் இமைத்தலில்லாதவர்களாகலின், 'இமையவர்' இமையோர் எனப்பட்டனர்.

முருகக்கடவுள் சரவணப் பொய்கையில் மாயையால் விரைந்து செய்த வித்தகத் திருவிளையாடலைக் குறிக்கவே 'விளையாடி' என்றார். இதனை,

கந்தபுராணம்

"துயிலவோ ருருவந் துஞ்சித் துண்ணென வெழுந்து மென்சொற்
பயிலவோ ருருவம் யாய்தன் பயோதரம் பவள வாய்வைத்
தயிலவோ ருருவ நக்காங் கமரவோ ருருவ மாடல்
இயலவோ ருருவம் வாளா விரங்கவோ ருருவஞ் செய்தான்.

ஓருருத் தவழ மெல்ல வோருருத் தளர்ந்து செல்ல
வோருரு நிழற்றல் செல்லா தொய்யென வெழுந்து வீழ
வோருரு விருக்கப் பொய்கை யோருரு வுழக்கிச் சூழ
வோருருத் தாய்கண் வைக வொருவனே புரித லுற்றான்.

ஆடவோ ருருவஞ் செங்கை யறையவோ ருருவ நின்ற
பாடவோ ருருவ நாடிப் பார்க்கவோ ருருவ மாங்கண்
ஓடவோ ருருவ மோர்பா லொளிக்கவோ ருருவம் யாண்டுந்
தேடவோ ருருவ மாகச் சிவன்மகன் புரித லுற்றான்"

என்பனவற்றானறிக. உமாதேவியார் செய்ய திருமுகத்தின் கண் சேர்த்து உச்சிமோந்து மனத்தின்கண் களிகூர்ந்து திருமுலைப்பா லளித்தாராகலின் 'செய்ய முகத்தில் அணைத்து உச்சி மோந்து முலைப்பா லகத்துண்மகிழ் முத்தளித்து' என்றார்.

சங்கரநாராயணர் கோயிற்புராணம்

"ஒருமுலை சுரந்த தீம்பா லுண்புழி மழலைத் தீஞ்சொன்
முருகனுக் கென்றே யீன்ற முதல்வியைத் திருந்த மற்றைத்
திருமுலை வருடுவான் போற் றிரள்புழைக் கரத்தா லுண்ணும்
வரிநுதற் களிற்றின் செந்தா மரையடி வணங்கு வாமே."

சீகாளத்திப் புராணம்

"பன்னிரு கமலக் கையும் பற்பல தொழில்வி ளைப்பத்
தன்னமர் தாய்மு லைப்பா லான்கவா னிருந்துண் ணுங்கால்"

என்னுஞ் செய்யுள்கள் ஈண்டு நோக்கத்தக்கன. (154-172)

கிள்ளைமொழி,
மங்கை சிலம்பின் மணிஒன் பதிற்றோன்றுந்
துங்க மடவார் துயர்தீர்ந்து-தங்கள்
விருப்பா லளித்தநவ வீரருக்குள் முன்னோன்
மருப்பாயுந் தார்வீர வாகு-நெருப்பிலுதித்து
அங்கட் புவன மனைத்தும் அழித்துலவுஞ் [ன்
செங்கட் கடாவதனைச் சென்றுகொணர்ந் தெங்கோ

விடுக்குதியென் றுய்ப்பஅதன் மீதிவர்ந்தெண் திக்
நடத்தி விளையாடு நாதா, [கும்

(ப-ரை) கிள்ளை மொழிமங்கை-கிளிப்பேச்சைப்போலும் சொல்லையுடைய உமாதேவியாரின், சிலம்பின்மணி ஒன்பதில் தோன்றும் - சிலம்பிலிருந்து சிந்தின ஒன்பது மணிகளிலிருந்து உண்டான, துங்க மடவார் துயர் தீர்ந்து - பரிசுத்தமான பெண்கள் துன்பம் அகன்று, தங்கள் விருப்பால் அளித்த - தங்களுடைய களிப்பினால் ஈன்ற, நவ வீரருக்குள் முன்னோன் - ஒன்பது வீரர்களில் தலைவனான, மருபாயும் தார் வீரவாகு-வாசனையானது வீசுகின்ற பூமாலையை யணிந்த வீரவாகுதேவர், நெருப்பில் உதித்து - (நாரதர் செய்த) யாகாக்கினியில் பிறந்து, அம் கண் புவனம் அனைத்தும் அழித்து - அழகிய இடமகன்ற உலகம் யாவற்றையும் நாசஞ் செய்து, உலவும் - திரிந்துகொண்டிருக்கின்ற, செங்கண் கடா அதனை- சிவந்த கண்களையுடைய ஆட்டுக் கடாவை, சென்று கொணர்ந்து விடுக்குதி என்று - போய்க் கொண்டுவந்து விடுவாய் என்று திருவாய் மலர்ந்து, எம் கோன் உய்ப்ப - எமது தலைவனாகிய முருகக்கடவுள் அனுப்ப, (வீரவாகுதேவர் அவ்விதமே அவ்வாட்டை பிடித்துக்கொண்டு வந்து விடுப்ப) அதன் மீது இவர்ந்து - அதன்மேல் ஆரோகணித்து, எண் திக்கும்-எட்டுத்திசையிலும், நடத்தி விளையாடு நாதா-அதை ஓட்டி விளையாடின தலைவனே; (எ-று)

(வி-ரை) மணி ஒன்பது-நவரத்தினங்கள். மணி ஒன்பதிற் றோன்றுந் துங்கமடவார் - நவசக்திகள். அவர்களாவர்: (1)

மாணிக்கவல்லி, (2) மௌத்திகவல்லி, (3) புட்பராகவல்லி, (4) கோமேதகவல்லி, (5) வைடூரியவல்லி, (6) வைரவல்லி, (7) மாகதவல்லி, (8) பவளவல்லி, (9) இந்திர நீலவல்லி யென்பார். நவசக்திகள் நவவீரர்களைப் பெற்றார்கள். உமாதேவி அவ்வொன்பான் மங்கையரையும் கருவுயிர்க்காதிருக்கக் கடவீர்களென்று சொல்ல அம் மாதர்கள் ஏக்கங் கொண்டார்கள். அப்போது அவர்களுடைய வடிவத்திலுண்டான வேர்வையினிடமாக லக்ஷம் வீரர்கள் தோன்றினார்கள். பின்னர் அவர்கள் வேண்டிக்கொள்ளக் கருவுயிர்க்குமாறு கட்டளையிட்டனர். பரமேஸ்வரியின் கட்டளையினால் அம்மாதர்கள் ஒன்பது புத்திரர்களைப் பெற்றார்கள். (அவர்களே நவவீரர்கள் எனப்படுவோர்) இதனைக் குறிக்கவே 'துங்கமடவார் துயர்தீர்ந்து தங்கள் விருப்பாலளித்த நவவீரர்' என்றார். இதனை,

கந்தபுராணம்

"ஏல வார்குழற் கௌரியின் செய்யதா ளிடையிற்
சாலு நூபுரத் துதித்தவ ருனதுசா பத்தாற்
சூலி னின்மிக மெலிந்தனர் பற்பகல் சுமந்தார்
பால ரைப்பெற வினியருள் புரிகெனப் பணித்தான்.

இறைவ னிங்கிது பணித்தலு நன்றென விசையா
முறுவல் செய்துமை மாதரை நோக்கிமொய்ம் பினரைப்
பெறுதி ராலினி யென்றலு மவர்வயிற் பெயரா
துறையும் யோகுடை வீரர்க ளித்திற முணர்ந்தார்.

பரிபு ரந்தனின் முன்வரு மங்கையர் பரைதன்
கருணை கொண்டசொற் கேட்டலுங் கவற்சியை யகன்று

விரைவின் மேலவர் பதம்பணிந் தேத்தியே விடைகொண்
டொருவி மைந்தரை யளித்தனர் யாவரு மொருசார்."

கந்தபுராணச் சுருக்கம்

"ஆரியை சொல்லா லுத்தம மாதர்கள் பின்பொரு
நாளி லொன்பது மைந்தரை யன்பொடு தந்தார்"

எனபவைகளா னறிக. உமாதேவியார் சிலம்பினின்றும் தோன்றிய நவசத்திகளாகிய மாணிக்கவல்லியினிடம் வீரவாகு தேவரும், முத்துவல்லியினிடம் வீரகேசரியும், புஷ்பராக வல்லியிடம் வீரமகேந்திரரும், கோமேதகவல்லியினிடம் வீரமகேச்சுரரும், | வயிடூரியவல்லியினிடம் வீரராக்கதரும், மாகதவல்லியினிடம் வீரமார்த்தாண்டரும், பவளவல்லியி னிடம் வீரராந்தகரும், இந்திரநீலவல்லியினிடம் வீரதீரரும் அவதரித்தார்கள். இதனை,

கந்தபுராணச் சுருக்கம்

"மாசறு மன்னவர்தம் பெயர்வீர வாகுவெனுந்
திரு வள்ளல் வளைக்கைக்
கேசவ னும்பர் புகழ்ந்திடு வீர கேசரிவீர
மகேந்திர னென்போன்
வீசு புகழ்ப்பெறு வீர மகேசன் வீரபுரந்தரன்
வீர வாக்கன்
ஆசறு வீர திவாகரன் வீராந்தகன்
வீரமடைந்திடுதீரன்."

இந் நவவீரர்களும் தத்தம் தாய்மார்களது நிறத்துடன் நான் முகனைப்போல நாபியின் வழியாக அவதரித்தவர்கள். இதனை,

கந்தபுராணம்

"இந்த வீரரொன் பதின்மரு மீசன தருளால்
தந்த மன்னையர் திறங்கொடே பொலந்துகி ருங்கி
வந்து பற்பகல் வளர்தரு முறுப்பொடு மடலார்
உந்தி யின்வழி நான்முகத் தண்ணல்போ லுதித்தார்."

என்பதா னறிக. இவ்வரிகளில் சொல்லியுள்ள சரித்திர விவ ரத்தை

கந்தபுராணச் சுருக்கம்

'நாடுபுகழ் நாடுதனி ஞாரதன்செய் வேள்வியின்மாட்
டாடுபிறந் துயிர்கடமை யழித்திடலு மம்மகத்திற்
கூடுமுனி வருஞ்சுரருங் கோதிலரு ணாரதனும்
பீடுடைய கயிலையெனும் பிறங்கன்மிசை யுற்றனரால்.

உற்றபொழு திலக்கமுட னொன்பதுவீ ரருஞ்சூழ
வெற்றிபுனை யருட்குமர வேளிருந்த படிநோக்கி
மற்றிவனங் குறைமுடிக்க வல்லவனென் றெல்லோரு
நற்றிருத்தா ளிணைவணங்க நம்பெருமா னவின்றருள்வான்.

நொந்தணைந்தீர் புகுந்தபடி நுவன்றிடுதி ரென்றருளச்
சிந்தைமகிழ்ந் தொருவேள்வி செய்யவொரு செச்சையதில்
வந்தெமையிக் கடநினைய மகந்தணந்து வந்தனமவ்
வெந்தகர்மண் ணுயிர்களொடு விண்ணுயிர்கொன் றுலவியதே.

வெய்யவத னடலடக்கி வேள்விமுடித் தடியேங்கள்
உய்யவளித் தருளெனவே யுயர்வீர வாகுவைப்பார்த்
தையவது தனைப்பிடித்திங் கணைதியென வவனேகிக்
கையில்விறற் றகர்பிடித்துக் கந்தனிடை வந்தனனே."

"அத்தகரைப் பரியாக்கொண் டவர்வேள்வி செயவிடுத்து"

என்னுஞ் செய்யுள்களாலும் கந்தபுராணம் தகரேறு படலத்திலுங் காண்க. (172-180)

படைப்போன்,
அகந்தை உரைப்பமறை யாதி எழுத்தொன்
றுகந்த பிரணவத்தி னுண்மை-புகன்றிலையாற்
சிட்டித் தொழிலதனைச் செய்வதெங்ங னென்றுமுன
குட்டிச் சிறையிருத்துங் கோமானே, [னங்

(ப-ரை) படைப்போன் அகந்தை உரைப்ப-பிரமதேவன் செருக்கு உரை செப்ப, மறைஆதி எழுத்து ஒன்று உகந்த-வேதத்தின் முதலில் ஓர் எழுத்தை விரும்பின, பிரணவத்தின் உண்மை புகன்றிலை ஆல்-பிரணவத்தின் உண்மையை உரைத்தாயில்லை ஆகையால், சிட்டித் தொழிலதனைச்செய்து எங்ஙன் என்று - ஆக்கற்றொழிலை நீ இயற்றுவது எப்படி என்று இயம்பி, முன்னங்குட்டி-முற்காலத்தில் அவன் தலையில்குட்டி, சிறை இருத்துங் கோமானே - சிறையிடுவித்த தலைவனே; (எ-று.)

(வி-ரை) பிரணவமானது சிவபெருமானுக்கு வாசஸ்தானமாயும், பிரமேந்திராதியர்களுக்கு உற்பத்தி ஸ்தானமாயும் வேதங்களுக்கு ஆதியாயும், காசி க்ஷேத்திரத்தி விறப்பவர்களுக்குப் பெருமான் உபதேசிக்கும் தாரகப் பிரமமாயும், முருகக்கடவுள் திருமுகங்களி லொன்றாகியும் விளங்குவதாலும், பிரணவார்த்தமே சிவபெருமானும் சுப்பிரமணி

யப் பெருமானும் ஆகலானும் 'மறையாதி யெழுத்தொன்றுகந்த பிரணவத்தினுண்மை' என்றார். இதனை,

கந்தபுராணம்

"ஈசன் மேவரு பீடமா யேனையோர் தோற்றும்
வாச மாயெலா வெழுத்திற்கு மறைகட்கு முதலாய்க்
காசி தன்னிடை முடிபவர்க் கெம்பிரான் கழற
மாசி றாரகப் பிரமமா மதன்பய னுய்ந்தான்.

தாம ரைக்கணன் முதலிய பண்ணவர் தமக்கும்
ஏமு றப்படு மறைக்கெலா மாதிபெற் றியலும்
ஓமெ னப்படுங் குடிலையே யொப்பிலா முருகன்
மாமு கத்துளொன் றாமவன் றன்மையார் வகுப்பார்."

காஞ்சிப்புராணம்

"புக்கிறைவன் றனைவணங்கி நிகழ்ந்தவெலாம் விண்ணப்பஞ்
செய்யப் பூந்தே
னக்கநறுந் தொடையிதழிக் கடவுளவர் தமைநோக்கி
நவில்வா னென்னே
யக்கமலன் விளம்பியவா நம்மையுநம் புதல்வனையு
மன்றே மான
மிக்கபுகழ்ச் சுருதியெலாம் பிரணவத்தின் பொருளாக
விளம்பு மாறே.

எக்கலைக்கும் பூதங்க ளெவற்றினுக்கும் பிரமனுக்கு
மீச னென்னத்
தக்கமுதல் பரப்பிரமஞ் சதாசிவனே யெனவேதஞ்
சாற்று மல்லான்

முக்கனல்சூழ் வேள்வியிற் சுப்பிரமணிய னேமெனவு
முக்காற் கூறும்
இக்கருத்தை யறியானை யெவ்வாறு விடுவிப்ப
தியம்பு மின்னே."

என வருவனவற்று னறிக. முருகப்பெருமான் பிரமதேவ னைச் சிறையிடுவித்தமையை,

கந்தபுராணம்

"எட்டொ ணாதவக் குடிலையின் பயனினைத் தென்றே
கட்டு ரைத்திலன் மயங்கலு மிதன்பொருள் கருதாய்
சிட்டி செய்வதித் தன்மைய தோவெனுச் செவ்வேள்
குட்டி னனய * னான்குமா முடிகளுங் குலுங்க.

மறைபு ரிந்திடுஞ் சிவனருண் மதலையா மலர்மே
லுறைபு ரிந்தவன் வீழ்தரப் பதத்தினு லுதைத்து
நிறைபு ரிந்திடு பரிசன ராக்கொடே நிகளச்
சிறைபு ரிந்திடு வித்தனன் கந்தமாஞ் சிலம்பில்."

எனவும்,

கந்தபுராணச் சுருக்கம்

"தத்தைமொழிக் கலைமாது தலைவனுயர் கயிலையடைந்
தத்தனடி பணிந்துபுறத் தணிவாயி னிடையடைந்தான்.
ஆலயத்தின் முன்பிருந்த வணிமணிக்கோ புரத்தலத்திற்
கோலமுட னிருந்தருளுங் குமரவேள் கண்டருளி
ஞாலமளித் திடுவோனை நம்முன்வரு கெனவேகிச்
சீலமுறப் பணிந்திடுதல் செய்யாமற் பரவுதலும்.
ஏதுபுரி வாயென்ன யான்படைப்பே னெனவருமோ
வேதமென வருமென்ன வியனிருக்கு விளம்பென்ன

* ஐந்துமா-என்றும் பாடம்.

ஆதியினிற் குடிலையெடுத் தறைகுதலு மதன்பொருளை
யோதியபின் னேதெனவே யோதினு னுமைபாலன்.

மன்னுகுடி லைப்பொருளை யறியாமன் மயங்குதலுங்
கொன்னுடைய நரசிங்கக் குட்டிதலைக் குடியுதைத்
தின்னலுறக் கந்தவெற்பிற் சிறையிடுவித் ததிலேகி
யன்னநடை யுமைபால னவிகள்பன் னுட்படைத்தான்."

எனவும் வருவனவற்று னறிக. (180-184)

மட்டவிழும்,
பொன்னங் கடுக்கைப் புரிசடையோன் போற்றிசை
முன்னம் பிரம மொழிந்தோனே, [ப்ப

(ப-ரை) மட்டு அவிழும்-தேனுடன் விகசித்த, பொன் அம் கடுக்கை - பொன்போன்ற நிறத்தையும் அழகையும் உடைய கொன்றைமலர் மாலையணிந்த, புரிசடையோன்-புரிந்த சடையையுடைய சிவபெருமான், போற்று இசைப்ப-துதிகூற, முன்னம் - பூர்வத்தில், பிரமம் மொழிந்தோனே - பிரணவப் பொருளைத் திருவாய்மலர்ந்தருளியவனே; (எ-று.)

(வி-ரை) மட்டவிழும் பொன்னங் கடுக்கைப் புரிசடை யோன் என்பதற்கிணங்க,

திருவிளையாடற் புராணம்

"மட்டவிழுங் கொன்றைச் சடையான்"

எனக் கூறியிருத்தல் காண்க. கொன்றை பொன்போன்ற நிறத்தையுடைய மலர்களைத் தூவலாலும், பார்வைக்கு அழகாகக் காணப்படுவதாலும் 'பொன்னங்கடுக்கை' என்றார்.

கொன்றையேயன்றி வேங்கையும் பொன்னிறம் போன்ற மலர்களையுடையது. இதனை,

சோணசைலமாலை

"வெண்மணிக் கழைமுன் கரிய நெற்றிகழி
வேங்கைபொன் சொரிய" எனவும்,

திருவேங்கடமாலை

"காந்த ளிரவலர்போற் கையேற்பக் கொன்றைகொடை
வேந்தனெனப் பொன் சொரியும் வேங்கடமே" எனவும்,

"கொன்றைகள் செம்பொ னுந்த"

எனவும் கூறியுள்ளார்கள். சிவபெருமான் வேண்ட அவருக்குப் பிரணவப்பொருளை உபதேசித்ததனால் 'கடுக்கைப்புரி சடையோன் போற்றிசைப்ப முன்னம் பிரமமொழிந்தோனே' என்றார். அஃதாவது, சிவபெருமான் முருகக்கடவுளைத் தமது திருத்தொடையின்மேல் வைத்துக்கொண்டு நான்முகனறியாப் பிரணவப்பொருளை நீ சொல்லென்று வினவினபோது, அவர், எந்தையே! எமது அம்மையாருக்கு அயலறியாவண்ணம் அருளியதைப் பகிரங்கமாக யாவருக்கும் செவியிற் கேட்கும்படி இயம்பலாகுமோ எனச் சிவபெருமான் நகைத்து மறைவாகவே உரைக்கும்படி சொல்லியதுடன் திருச்செவி சாய்க்கப் பிரணவப் பொருளைச் சொன்னதைக்கேட்டு மகிழ்ந்து சிவபெருமான் திருக்கயிலைக்கு எழுந்தருளினர். அதன் பிறகு சிலகாலங்கழித்து அகஸ்திய முனிவருக்குக் குடிலையின் உண்மைப் பொருளை உபதேசித்தருளினர். இதனை,

கந்தபுராணம்

"முற்றொருங் குணரு மாதி முதல்வகே ளுலக மெல்லாம்
பெற்றிடு மவட்கு நீமுன் பிறருண ராத வாற்றாற்
சொற்றதோ ரினைய மூலத் தொல்பொருள் யாருங் கேட்ப
விற்றென வியம்ப லாமோ மறையினு லிசைப்ப தல்லால்.

என்றலு நகைத்து மைந்த வெமக்கருண் மறையி னென்னுத்
தன்றிருச் செவியை நல்கச் சண்முகன் குடிலை யென்னும்
ஒன்றொரு பதத்தி னுண்மை யுரைத்தன னுரைத்தல் கேளா
நன்றருள் புரிந்தா னென்ப ஞானநா யகனு மண்ணல்"

கந்தபுராணச் சுருக்கம்

"அந்தணனுக் கருள்புரிந்தே யறுமுகனைக் கவானிடைவைத்
தந்தகுடி லைப்பொருணீ யுரைத்தியென வுரைத்ததுகேட்
டெந்தைமகிழ்ந் தருங்கயிலை யெய்தினன் குறுமுனிக்குச்
சுந்தரமூ லப்பொருளைச் சொல்லினன் குமரேசன்."

என்பனவற்றானறிக. (184-186)

கொல்நெடுவேல்,
தாரகனு மாயத் தடங்கிரியுந் தூளாக
வீர வடிவேல் விடுத்தோனே,

(ப-ரை) கொல் நெடுவேல்-கொல்லுந் தன்மை வாய்ந்த நெடிய வேலையுடைய, தாரகனும்-தாரகாசுரனும், மாயம் தடம் கிரியும்-மாயஞ் செய்தலையுடைய (மாயையோடு பொருந்திய) பெரிய கிரௌஞ்சமலையும், தூளாக-தூளாய் விடுமாறு, வீரம் வடிவேல் - வெற்றியையுடைய கூரிய வேலாயுதத்தை, விடுத் தோனே-விட்டவனே; (எ-று.)

(வி-ரை) 'கொல் நெடுவேல்' என்பதில் 'கொல்' என்பதற்குக் கொல்லுந் தொழிலமைந்த என்ருகிலும், கொல்லுதற்குக் காரணமாகிய என்ருகிலும் பொருள் கூறலாம். கொல்-கொற்ருெழிலுமாம்.

திருக்கோவையார்

"கொன்னுனை வேலம்பலவன்"

என்பதானறிக. 'தாரகனும் மாய' என்பதில் 'மாய' என்பதை வினையெச்சமாகக் கொண்டு அழிய என்று பொருளுரைக்கினுமமையும். தாரகாசுரன்-சூரபன்மனது தம்பி. மகா மாயாவி. கிரௌஞ்சகிரியின் ஒரு புறத்தில் மாயாபுரி என்னும் நகரில் அவுணர் சேனைகளுடன் வசித்து வந்தான். முருகக் கடவுளுடன் அமரியற்ற இயலாது பாசுபதாஸ்திரத்தை விடுக்க அதை அவர் கையினுற் பிடித்துக்கொண்டார். அதைப் பார்த்துத் தாரகனும் கிரௌஞ்சகிரியும் பல மாயை செய்யக் கண்டு வேலாயுதத்தை விட்டருளினர். அது மாயை செய்யும் கிரௌஞ்ச கிரியையும் தாரகனையும் விரைவாக அழித்தது. இக் காரணங்களால் 'வீரவடிவேல் விடுத்தோனே' என்ருர். இதனை,

கந்தபுராணச் சுருக்கம்

"பாருலக மீதிலுமை பாலன்வரு போதில்
தாரக னெனும்பெயர் தரித்ததொரு வெய்யோன்
ஓரண மானகிர வுஞ்சகிரி கண்டார்
வீரமுறு வேலயன் மேவிவரு விண்ணோர்.

உற்றகிரி யீதுகிர வுஞ்சமிதி ஞேர்சார்
மற்றுமிக ரற்றதொரு மாயநக ரூடே
சுற்றவுணர் சேனையொடு சூரிளவ லாகும்
வெற்றிபுனை தாரகன் விருப்புட னிருப்பான்.

மையல தொழிந்திட வெழுந்தவுணர் மன்னன்
செய்யமுரு கன்புடை சிவன்படை செலுத்தக்
கையொடு பிடிப்பவது கண்டுபல மாயை
வெய்யமலை யோடுசெய வேலினை விடுத்தான்.

வென்றிபுனை யெஃகமது விஞ்சைதரு குன்றை
வன்றிறல்கொ டாரகனை வல்லையி லழித்தே
பொன்றுதிறல் வீரரை யெழுப்பியுயர் கங்கை
சென்றதனி லாடுபு திரும்பியதை யன்றே."

என வருவனவற்று னறிக. வீரம் பொருந்திய வேலாகலின் 'வீர வடிவேல்' என்றார். இதனை,

திருமுருகாற்றுப்படை - தனிப்பாடல்
"வீரவேல் தாரைவேல்"

என்பதானறிக. (186-188)

சீரலைவாய்த், [ணை
தெள்ளு திரைகொழிக்குஞ் செந்தூரிற் போய்க்கரு
வெள்ள மெனத்தவிசின் வீற்றிருந்து-வெள்ளைக்
கயேந்திரனுக் கஞ்ச லளித்துக் கடல்சூழ் [ஞ்
மயேந்திரத்திற் புக்கிமையோர் வாழச்-சயேந்திர
சூரனைச்சோ தித்துவருகென் றுதடந் தோள்விசய
வீரனைத்தூ தாக விடுத்தோனே,

(ப-ரை) சீரலைவாய்-சிறந்த கடலிடத்தே, தெள்ளுதிரை கொழிக்கும் செந்தூரிற்போய் - தெளிந்த அலைகள் கொழிக்கின்ற திருச்செந்தூரில்போய், கருணை வெள்ளம் என-திருக் கருணைப் பிரவாகம்போல, தவிசின் வீற்றிருந்து - பீடத்தில் எழுந்தருளியிருந்து, வெள்ளைக் கயேந்திரனுக்கு - வெள்ளை யானையையுடைய தேவேந்திரனுக்கு, அஞ்சல் அளித்து-அபயம் கொடுத்தருளி, கடல்சூழ் மயேந்திரத்திற் புக்கு-கடலாற் சூழப்பட்ட மகேந்திரத்தில் போய், இமையோர் வாழ-தேவர்கள் வாழும்படி, சயேந்திரனும் சூரனை-வெற்றியை யுடைய அசுரத் தலைவனாகிய சூரபதுமனை, சோதித்து வருக என்று-வினவி வருவாயாக என்று, தடந்தோள் விசய வீரனை-வீரவாகுதேவரை, தூதாக விடுதந்தோனே - தூதாளனாக அனுப்பினவனே; (எ-று.)

(வி-ரை) தேவர்கள் இமையா நாட்டமுடையவர்களாக லின் 'இமையோர்' எனப்பட்டனர். வெற்றியில் உயர்ந்தவன் என்று குறிக்க, 'சயேந்திரன்' என்றார். 'சீரலைவாய்த் தெள்ளுதிரை கொழிக்கும் செந்தூர்' என்பதற் கியைய,

அகநானூறு

"அலைவாய்ச் செருமிகு சேய்" எனவும்,

புறநானூறு

"வெண்டலைப் புணரி யலைக்குஞ்
செந்தில் நெடுவேள்" எனவும்,

தேவாரம்

"நஞ்செந்தின் மேய வள்ளிம ணாளன்"

எனவும், கூறப்பட்டிருத்தல் காண்க. கடலருகே வெள்ள மென இருந்தோ மென்பதன் நயம் அறியத்தக்கது. 'சீரலை வாய்' என்பதற்கு திருச்சீரலைவாய் என்றும் பொருள் கூறலாம்.

மகேந்திரம் - வீர மகேந்திரம் என்னும் சூரபன்மன் இராஜதானி. மயேந்திரம் - மஹேந்திரம். நன்னூல் முதலிய இலக்கணங்களில், வடமொழி முப்பத்து மூன்றும் மெய்யாகிய ஹகாரம் தமிழில் விகாரப்படும்போது முதலில் ஏறிநின்ற உயிராகவும், இடையில் ககரமாகவும் வருமென, அரி, ஆரம், இமம், ஏமம் முதலியன மொழி முதலுக்கும், மோகம் மொழி இடைக்கும் உதாரணம் காட்டி,

நன்னூல்

அவற்றுள்,

> ஏழாமுயி ரிய்யும் இருவும் ஐவருக்கத்
> திடையின் மூன்று மவ்வம் முதலும்
> எட்டே யவ்வும் முப்பது சயவும்
> மேலொன்று சடவும் இரண்டு சதவும்
> மூன்றே யகவும் ஐந்திரு கவ்வும்
> ஆவீ றையு மீயீ றிகாரமும்

என சூத்திரம் இயற்றியுள்ளது. இச் சூத்திரப்படி 'மஹேந் திரம்' என்பது மகேந்திரம் என வரவேண்டுமே தவிர மயேந்

திரம் என வருதற்கு விதி இல்லை. ஆனால், ஹகாரத்திற்குத் தமிழில் யகரம் வருமென்பதற்கு இலக்கணவிதி.

வீரசோழியம்

"மூப்பா னுறமூன், றதனுக்கு லோபமும்
யவ்வோடு கவ்வு மறையவர்களே"

என்பதாம். சோதித்து-வினவி, சோதித்தல்-வினவுதல்; இது மலைநாட்டு வழக்கு. வருக+என்று=வருகென்று. அகரம் தொகுத்தல் விகாரம். 'சயேந்திரன்' என்பதில் இந்திரன் என்பது தலைமை குறித்து நின்றது; நரேந்திரன், மிருகேந்திரன் என்புழிப்போல. (188-194)

காரவுணன்,
வானவரை விட்டு வணங்காமை யாற்கொடிய
தானவர்கள் நாற்படையுஞ் சங்கரித்துப்-பானு
பகைவன் முதலாய பாலருடன் சிங்க
முகனைவென்று வாகை முடித்தோய்,

(ப-ரை) கார் அவுணன் - கரிய நிறமுள்ள அசுரனாகிய சூரபதுமன், வானவரைவிட்டு வணங்காமையால்-தேவர்களைச் சிறையினின்று விடுதலை செய்து வணங்காதிருந்தமையால், கொடிய தானவர்கள் நாற்படையும் சங்கரித்து - கொடுமையுடைய அசுரர்களுடைய நால்வகைப் படையையும் கொன்று, பானுகோபன் முதலாய பாலருடன் - பானுகோபன் முதலாகவுள்ள புதல்வர்களோடு, சிங்கமுகனை வென்று - சிங்கமுகாசுரனைக்கொன்று, வாகை முடித்தோய்-வாகைசூடியவனே;(எ-று.)

(வி-ரை) பானு பகைவன்-பானுகோபன். இவன் சூரபதுமன் ஜேஷ்ட குமாரன். சூரபன்மனுக்கும் அவன் பட்டத்துக்கு மகிஷியும் விசுவகர்மாவின் மகளுமாகிய பதுமகோமளைக்கும் பிறந்தவன். இவன் குழந்தைப் பருவத்தில் தொட்டிலில் நித்திரை செய்துகொண்டிருக்கும்போது சூரியனுடைய கிரணங்கள் நுழைவாயிலின் வழியாக வந்து மேனி மேற்பட்டவுடனே சூரியனைப் பிடித்துவந்து தொட்டிற் காலில் கட்டிவைத்தனன். பிரமதேவன் முதலானோர் வேண்டுகோட்கிணங்கிச் சூரியனைக் கட்டவிழ்த்து விடுத்தனன். அதனால் பானுகோபன் என்று பெயர் வந்தது. திருமாலுடன் போர் செய்து அவரை வென்ற போராற்றலின் மிக்கவன். இதனை,

கந்தபுராணச் சுருக்கம்

"வான கத்தெழு மிரவிதன் கதிரவன்
வடிவினிற் படப்பாய்ந்து
தான வன்றனை பிடித்துவந் தணிமணித்
தொட்டிலிற் றளைசெய்தே
யீன மற்றவா னவரொடு விதியடைந்
திரப்பவிட் டதனாலே
பானு கோபனாய் வளர்ந்தொரு பகலினைம்
படைகொண்மா லையும்வென்றான்."

என்பதானறிக. நால்படை-யானை, குதிரை, தேர், காலாள் என்பனவாம். இவற்றை ரதகஜதுரகபதாதிகள் என்பர். அக்கினிமுகாசுரன், மூவாயிரம் பிள்ளைகள் முதலிய சூர

பதுமன் புதல்வர்களைக் குறிக்கவே 'பானு பகைவன் முதலாய பாலருடன்' என்றார். வாகை-வெற்றிமாலை. (194-198)

சகமுடுத்த,
வாரி தனிற்புதிய மாவாய்க் கிடந்தநெடுஞ்
சூருடலங் கீண்ட சுடர்வேலோய்,

(ப-ரை) சகமுடுத்த வாரிதனில்-உலகத்தைச் சுற்றியுள்ள சமுத்திரத்தில், புதிய மாவாய்க்கிடந்த-புதுமையாகிய மாமரமாயிருந்த, நெடுஞ்சூர் உடலம் கீண்ட - நெடிய சூரபதுமனுடைய தேகத்தைக் கிழித்த, சுடர் வேலோய் - ஒளியுள்ள வேலாயுதத்தை யுள்ளவனே; (எ-று)

(வி-ரை) சமுத்திரத்தில் மாமரம் முளைத்திருக்க யாரும் இதுகாறும் கண்டதில்லை யாகலானும் நூதனமாய் அபூர்வமாய் மாமரம் முளைத்து இருந்ததால் 'புதியமாவாய்' என்றார். அன்றியும், வேர்மேலும் ஏனைய பகுதிகள் கீழுமாய் நின்றுனென்ப ராகையாலே அச்செயல் புதுமையாகக் கொள்ளப்பட்டது. ஆகையினால் 'புதியமாவாய்' என்றார் எனினும் சாலப் பொருத்தமுடைத்தே. இதனை,

கல்லாடம்

"அகறிரைப் பரப்பிற் சடையசைந் தலையாது
கீழ்ணர் நின்ற மேற்பகை மாவின்
ஒருட லிரண்டு கூறுபட விடுத்த
அரத்த வேலோய்."

"மணிதிரைக் கடலுண் மாவெனக் கவிழ்ந்த
களவுடல் பிளந்த வொளிகெழு திருவேல்."

"பெருங்கள விணர்தந் தலைகீழ்க் தூலவிய
விடமாக் கொன்ற நெடுவேற் குளவன்."

என்னும் செய்யுட்களா னறிக. சுடர்-ஒளி;

பெருமாள் திருமொழி

"இருளிரியச் சுடர்மணிக ளிமைக்கும்"

ஐங்குறுநூறு

"ஒண் சுடர்ப் பாண்டிற் செஞ்சுடர்போல"

என்பனவற்றுள் இப்பொருட்டாதல் காண்க. 'சுடர்வேல்' எனக் கூறினாரேனும், சுடரிலே 'நெடுவேல்' என்பது ஆசிரியர் கருத்து. (198-200)

போரவுணன்,
அங்கமிரு கூறு யடல்மயிலுஞ் சேவலுமாய்த்
துங்கமுட ஞர்த்தெழுந்து தோன்றுதலும்-அங்கவ
சீறுமர வைப்பொருத சித்ரமயில் வாகனமா[ற்றுள்
வறி நடாத்தும் இளையோனே,

(ப-ரை) போரவுணன் அங்கம் - போர்த்தொழிலின்கண் வல்ல அசுரனை சூரபதுமன் உடல், இரு கூறு ஆய்-இரண்டு பங்காகி, அடன் மயிலுஞ் சேவலுமாய்-வெற்றியுள்ள மயிலும் சேவலுமாய், துங்கமுடன் ஆர்த்து எழுந்து தோன்றுதலும்-

உயர்வாய் ஆரவாரித்துக் கிளம்பி வரவும், அங்கு அவற்றுள்- அவ்விடத்தில் அவ்விரண்டில், சீறும் அரவைப் பொருத- சீறுகின்ற பாம்பைக் கொல்லுகின்ற, சித்ரமயில் - அழகை யுடைய மயிலை, வாகனம் ஆக ஏறி நடாத்தும் இளையோனே- வாகனமாகக்கொண்டு ஏறிச் செலுத்துகின்ற இளமையை யுடையவனே; (எ-று.)

(வி-ரை) 'பேரவுணன்' எனப் பாடங் கொள்வாருமுளர். அங்ஙனமாயின் பெரிய அசுரன் என்பது பொருள். சூரபன்மன் உடல் இரண்டுகூறுயிற்றெனவும் அவற்றுள் ஒன்று மயில் எனவும் மற்றொன்று சேவல் எனவும் குறிக்கவே, 'அங்க மிருகூறு யடன்மயிலுஞ் சேவலுமாய்' என்றார். என்றும் அழியாத இளமையுடையவனாகலின், 'இளையோனே' என்றார்.

திருமுருகாற்றுப்படை - தனிப்பாடல்

"என்று மிளையாய்"

என்றார். (200-204)

மாறிவரு,
சேவற் பகையைத் திறல்சேர் பதாகையென
மேவத் தனித்துயர்த்த மேலோனே,

(ப-ரை) மாறிவரு சேவல் பகையை-மாறுபாடு கொண்டு வந்த சேவலாகிய பகைவனை, திறல்சேர் பதாகை என-வெற்றி பொருந்திய கொடியாக, மேவ - இருக்கும்படி, தனித்து

உயர்த்த-ஒப்பற்று உயர்த்தின, மேலோனே-மேன்மையுடையவனே; (எ-று.)

(வி-ரை) சூரபதுமன் போர் செய்து தோற்றுப்போன தன்மையினால் அவன்மேலேறுந் தன்மைபோல மயிலின் மேல் ஆரோகணித்துக்கொண்டு சேவற்கொடியைக் கொடியாகப் பிடித்தருளினார். தங்கள் துயரம் நீங்கப்பெற்ற தேவர்கள் ஆறுமுகக்கடவுளைத் துதி செய்தார்கள். இங்கிப்படியிருக்க கணவனிறந்த செய்தி கேட்ட பதுமகோமளை உயிர் துறந்தாள். கடலில் மீனுருவங் கொண்டிருந்த இரணியன் அறிந்து வந்து அழுது துயரமுற்றுத் தங்கள் குருவான சுக்கிரனிடம் போனான். அக்குரு இறந்துபோன எல்லாருக்கும் இரணியனைக்கொண்டு உத்திரகிரியை செய்வித்தார். சூரபதுமன் மகா ஸ்திரீலோலனாக இருந்தபோதிலும் அவன் மனைவி பதுமகோமளைமட்டும் கற்பிற் சிறந்தவளாயிருந்தாளென்பதும் தன்னுயகன் இறந்ததைக் கேட்டதும் தன்னுயிர் நீத்தாளென்பதும் ரஸமான விஷயம். ஏனெனில் கற்புடையவர்களாய்த் தன்னுயகனிறந்ததைக் கேட்ட மாத்திரத்தி லுயிர் துறக்கும் பெண்கள் எண்ணிலாக்காலம் சுவர்க்க லோகத்தில் தம் கணவருடன் இன்புற்றிருப்பார்கள்.

கந்தபுராணச் சுருக்கம்

"ஆறுந்திய முடிகொண்டவ னதுகண்டசு ரேச
னமராடி யிளைக்குஞ்செய லாலங்கவன் மீதே
யேறுஞ்செயல் போலப்பொலி நீலச்சிகி மேலே
யேறிக்கொடி தானுக விருஞ்சேவ லுயர்த்தான்

வீறண்டர்கள் கண்டேயறு முகனைப்பா வுற்றூர்
வெஞ்சூர்முதல் பட்டானென விட்டாலுயர் தேவி
யீறின்றிய வேலைப்புடை மீனுமிர ணியனங்
கிதுகண்டு புலம்பிப்புக ரென்பானை யடைந்தான்."

காசி காண்டம்

"நீடு காதல னோடுயிர் நீத்திடும்
வீடில் கற்பினண் மெய்ம்மயி ரொன்றினுக்
காட கப்பசும் பொன்னிலத் தாயிரங்
கோடி காலங் கொழுநனோ டின்புறும்"

என்பனவற்றானறிக.

'திறல்சேர் பதாகை யெனத்தனித் துயர்த்த'

என்பதற்கியைய,

தக்கயாகப்பரணி

"புலியேறு **தனியேற**"

எனக்கூறியுள்ளதும் அதன் விசேட உரையும் ஈண்டு நோக்கத் தக்கது. ஏனைய கொடிகளெல்லாம் தனக்குத் தாழ்ந்து நிற்ப அவற்றிற்கெல்லாம் மேலாக உயர்த்திய கொடியாகலின், 'தனித் துயர்ந்த' என்றார். (204-206)

மூவர், குறைமுடித்து விண்ணங் குடியேற்றித் தே
சிறைவிடுத்தாட் கொண்டளித்த தேவே, [வர்

(ப-ரை) மூவர் குறை முடித்து - மூவருடைய குறையை முடித்து, விண்ணம் குடி ஏற்றி-தேவலோகத்தில் குடியிருக்கப்

பண்ணி, தேவர் சிறை விடுத்து - தேவர்கள் சிறையை நீக்கி, ஆட்கொண்டு-அடிமைகொண்டு, அளித்த-காப்பாற்றியருளின, தேவே-கடவுளே; (எ-று.)

(வி-ரை) திரிமூர்த்திகள் குறையை முடித்தருளினாராக லின், 'மூவர் குறை முடித்து' என்றும், விண்ணவர்களை விண் ணுலகத்திற் குடியேற்றினாராகலின், 'விண்ணம் குடியேற்றி' யென்றும், தேவர்களுக்கு இட்டிருந்த சிறையை நீக்கி விடுவித் தாராகலின், 'சிறை விடுவித்து' என்றும் கூறினர். (206-208)

மறைமுடிவாம்,
சைவக் கொழுந்தே தவக்கடலே வானுதவுந்
தெய்வக் களிற்றைமணஞ் செய்தோனே,

(ப-ரை) மறை முடிவு ஆம் - வேதத்தின் முடிந்த பொருளாயுள்ள, சைவக் கொழுந்தே-சிவக்கொழுந்தே, தவக் கடலே-தவமாகிய சமுத்திரமே, வான் உதவும் - விண்ணுலகம் பெற்ற, தெய்வக்களிற்றை - தெய்வயானை அம்மையாரை, மணம் செய்தோனே - திருமணஞ் செய்து கொண்டவனே; (எ-று.)

(வி-ரை) வேதத்தின் முடிபொருளாக விளங்குபவராக லின், 'மறை முடிவாம்' என்றார். சிவமணங்கமழும் இளைஞ ராகலின், 'சைவக் கொழுந்தே' என்றார். வான் உதவும் தெய் வக்களிறு - தெய்வயானை. இங்கே களிறென்பது யானை என்னும் பொருட்டாய் நின்றது. (208-210)

பொய்விரவு,
காம முனிந்த கலைமுனிவன் கண்ணருளால்
வாமமட மானின் வயிற்றுதித்துப்-பூமருவு
கானக் குறவர் களிகூரப் பூங்குயில்போல்
ஏனற் புனங்காத் தினிதிருந்து-மேன்மைபெறத்
தெள்ளித் தினைமாவுந் தேனும் பரிந்தளித்த
வள்ளிக் கொடியை மணந்தோனே,

(ப-ரை) பொய்விரவு-பொய் கலந்த, காமம் முனிந்த-காமத்தைச் சினந்த, கலை முனிவன் - கலாவல்லுநரான சிவமுனிவரின், கண் அருளால் - பார்வையால் துய்த்த கருணையினால், வாமம் மடமானின் - அழகிய இளமையான பெண் மானின், வயிறு உதித்து-வயிற்றில் ஜெனித்து, பூ மருவு கானக்குறவர் - பூ பொருந்திய காட்டில் வசிக்கும் குறவர், களிகூர-மகிழ்ச்சி மிக்கடையும்படி, பூ குயில்போல்-அழகிய குயிலைப்போல், ஏனல் புனம் காத்து - தினைப்புனத்தைக்காத்து, இனிது இருந்து-சுகமாயிருந்து, மேன்மைபெற-உயர்வடைய, தெள்ளி தினைமாவும் தேனும் - தெள்ளிய தினைமாவையும் தேனையும், பரிந்து அளித்த-விரும்பிக் கொடுத்த, வள்ளிக்கொடியை-கொடிபோலும் வள்ளிநாயகியாரை, மணந்தோனே-திருமணஞ்செய்து கொண்டவனே; (எ-று.)

(வி-ரை) 'மடமான்' எனப் பின்னர்க் கூறியதற்கியைய 'கலை முனிவன்' என முன்னர்க் கூறியுள்ளார். எனவே, கலை (ஆண்மான்) ஆகிய முனிவன் என ஒருபொருளும் தொனித்தல் காண்க. கண்ணால் துய்த்தல் தேவர்கட்கு இயல்பாகலின்

தேவரை நிகர்த்த சிவமுனிவருக்கும் இவ்வாறு இயற்றினு ரென்றும் அவ்வாறு பார்வையினுல் துய்த்த கருணையினுல் மடமானின் வயிற்றில் வள்ளி நாயகியார் உதித்தா ரென்பார், 'கலை முனிவன் கண்ணருளால் வாம மடமானின் வயிற் றுதித்து' என்ருர். 'கண்ணருளால்' என்பதற்கியைய,

சீவக சிந்தாமணி

"தேவர் நோக்கத்தால் நுகர்ந்தாற் போல"

எனக் கூறியுள்ளதும், அதற்கு உச்சிமேற் புலவர்கொள் நச்சி ஞர்க்கினியர் உரையும் ஈண்டு நோக்கத்தக்கது. 'பூ மருவு' என் பதற்கு பூவுலகத்திலுள்ள என்ருகிலும், அழகு பொருந்திய என்ருகிலும் பொருளுரைக்கலாம். அங்ஙனமாயின் அவற்றை முறையே ஏழாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடராகவும் எழுவாய்த் தொடராகவும் கொள்ளப்படும்.

காக்கையானது முட்டையிட்டு அடைகாக்குங் காலத்தில் குயிலும் அதில் வந்து முட்டையிட்டுவிடும்; காகம் அதன் முட்டைகளையும் தன் முட்டைகளென்றே நினைத்து அடை காத்துக் குஞ்சுகள் வெளிப்பட்டவுடன் அக்குயிற் குஞ்சு களையும் தன்னுடைய குஞ்சுகளென்றே காப்பாற்றிவரும்; குயில் காகத்துக்குத் தெரியாமல் வந்து தன்னுடைய குஞ்சு களுக்கு மாத்திரம் இரை கொடுத்து வளர்த்துப் பறக்கும் பருவம் வந்தவுடன் அவற்றை அழைத்துக்கொண்டு போய் விடும். இது குயிலின் இயற்கைக்குணம்; எனவே, காக்கையால் வளர்க்கப்பெற்ற குயிலானது பிறகு தன் இனத்தோடு சேர்

தலைப்போல குறவர்களால் வளர்க்கப்பெற்றுப் பின்பு தமக்குரிய இடத்தை யெய்தினாராகலின் 'பூங்குயில்போல்' என்றார்.

வில்லிபாரதம்

"கானமென் குயில்போன் மீளவுந் தனதுகாவலர்
குலத்திடைக் கலந்தாள்"

என்பது ஈண்டு நோக்கத்தக்கது. தினைக்கொல்லையில் தேனும் தினைமாவும் விரும்பியளித்த வள்ளி நாயகியாரை மணஞ்செய்தவராகலின், 'தெள்ளித் தினைமாவும் தேனும் பரிந்தளித்த வள்ளிக்கொடியை மணந்தோனே' என்றார். (210-216)

உள்ளமுவந்,
தாறு திருப்பதிகண் டாறெழுத்து மன்பினுடன்
கூறுமவர் சிந்தைகுடி கொண்டோனே,

(ப-ரை) உள்ளம் உவந்து - மனம் விரும்பி, ஆறு திருப்பதிகண்டு-ஆறு க்ஷேத்திரங்களையும் கண்ணால் தரிசித்து, ஆறு எழுத்தும் - ஆறு எழுத்தையும், அன்பினுடன் கூறுமவர்-உள்ளன்போடு உச்சரிப்பவர்களுடைய, சிந்தை-மனத்தில், குடிகொண்டோனே-குடியிருப்பவனே; (எ-று.)

(வி-ரை) ஆறு திருப்பதி - திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம், குன்றுதோறாடல், பழமுதிர்சோலை என்பனவாம். இவ்வாறு திருப்பதிகளையும் குறித்தும் அத்திருப்பதிகளில் எழுந்தருளியிருக்கும் பெருமான் புகழ்ச்சியுமே கொண்டது திருமுருகாற்றுப்படை. ஆறெழுத்து-ஷடாட்சரம். ஆறெழுத்தையும் உள்ளன்போடு

உச்சரிக்க வேண்டுமாகலின், 'ஆறெழுத்து மன்பினுடன் கூறுமவர்' என்றார். இதனை,

திருமுருகாற்றுப்படை

"ஆறெழுத் தடக்கிய வருமறைக் கேள்வி
நாவியன் மருங்கி னவிலப் பாடி"

என்பதானறிக. (216-218)

நாறுமலர்க்,
கந்திப் பொதும்பரெழு காரலைக்குஞ் சீரலைவாய்ச்
செந்திற் பதிபுரக்குஞ் செவ்வேளே,

(ப-ரை) நாறுமலர்க்கந்திப் பொதும்பர் - வாசனை வீசுகின்ற புஷ்பங்களையுடைய கமுகஞ் சோலையானது, எழுகார் அலைக்கும் - சத்தமேகங்களையும் அலையச் செய்கின்ற, சீரலைவாய்ச் செந்திற்பதி - திருச்சீரலைவாயென்னும் திருச்செந்துரை, புரக்கும் செவ்வேளே - காக்கின்ற முருகப்பெருமானே; (எ-று.)

(வி-ரை) மேகமண்டலம் வரையும் கமுகஞ் சோலைகள் உயர்ந்திருந்தனவாகலின், 'கந்திப் பொதும்ப ரெழுகார் அலைக்கும்' என்றார். 'சீரலைவாய்ச் செந்திற்பதி' சிறப்புடைய கடற்கரை யிடத்தேயுள்ள திருச்செந்தூர் எனினும் அமையும். 'செந்திப்பதி' என்றும் பாடம். (218-220)

சந்ததமும்,
பல்கோடி சன்மப் பகையும் அவமிருத்தும்
பல்கோடி விக்கினமும் பல்பிணியும்-பல்கோடி

பாதகமுஞ் செய்வினையும் பாம்பும் பிசாசுமடற்
பூதமுந்தீ நீரும் பொருபடையுந்-தீதகலா
வெவ்விடமுந் துட்ட மிருகமுதலாமெவையும் [திற்
எவ்விடம்வந் தெம்மையெதிர்ந்தாலும்- அவ்விடத்
பச்சைமயில்வாகனமும் பன்னிரண்டுதிண்டோளும்
அச்ச மகற்றும் அயில்வேலுங்-கச்சைத்
திருவரையுஞ் சீரடியுஞ் செங்கையும் ஈரா
றருள்விழியு மாமுகங்க ளாறும்-விரிகிரணஞ்
சிந்தப் புனைந்த திருமுடிக ளோராறும்
எந்தத் திசையு மெதிர்தோன்ற-வந்திடுக்கண்
எல்லாம் பொடிபடுத்தி எவ்வாமுந் தந்துபுகுந்
துல்லாச மாக உளத்திருந்து,

(ப-ரை) சந்ததமும் - சதாகாலமும், பல்கோடி சன்மப் பகையும்-பலகோடி பிறவிகளாகிய பகையும், அவமிருத்தும்- அகாலத்தில் சாதலும், பல்கோடி விக்கினமும் - பலகோடி இடையூறுகளும், பல் பிணியும்-பல வியாதிகளும், பல்கோடி பாதகமும்-பலகோடி பாதகங்களும், செய் வினையும் - செய்யும் தீச்செய்கைகளும், பாம்பும் பிசாசும்-பாம்பும் பிசாசும், அடல் பூதமும் - வலிமையுள்ள பூதமும், தீ நீரும் - அக்கினியும் ஜலமும், பொரு படையும்-யுத்தம்புரிகின்ற படைகளும், தீது அகலா வெவ்விடமும் - கொடுமை நீங்காத கொடிய விஷமும், துட்டமிருகம் முதலாம் எவையும் - துஷ்டமிருகம் முதலாக வுள்ள யாவும், எவ்விடம் வந்து எம்மை எதிர்ந்தாலும் - எவ் விடத்தில் வந்து எம்மை எதிர்த்தாலும், அவ்விடத்தில்-அந்த

இடத்தில், பச்சைமயில் வாகனமும் - பச்சைநிறமுள்ள மயில் வாகனமும், பன்னிரண்டு திண் தோளும் - திண்ணிய பன்னிரண்டு தோள்களும், அச்சம் அகற்றும் - பயத்தை நீக்குகின்ற, அயில் வேலும்-கூர்மையான வேலாயுதமும், கச்சைத் திரு அரையும் - கச்சைப்பட்டை கட்டிய அழகிய அரையும், சிறு அடியும்-சிறிய திருவடியும், செம் கையும்-சிவந்த திருக்கரங்கள் பன்னிரண்டும், ஈராறு அருள் விழியும்-பன்னிரண்டு திருவருளையுடைய திருக்கண்களும், மாமுகங்கள் ஆறும்-ஆறு திருமுகங்களும், விரி கிரணம் சிந்தப் புனைந்த - பரந்த ஒளி வீசும்படி தரித்த, திருமுடிகள் ஓராறு - ஆறு திருமுடிகளும், எந்தத் திசையும் எதிர் தோன்ற வந்து - எந்தத் திக்கிலும் எதிரிலே தோன்றும்படி எழுந்தருளி வந்து, இடுக்கண் எல்லாம் பொடி படுத்தி - துன்பங்களையெல்லாம் தூளாக்கி, எவ்வரமும் தந்து - சகல வரங்களையும் வழங்கி, உளத்துப் புகுந்து உல்லாசமாக இருந்து - மனத்திற் புகுந்து சம்பிரமமாக இருந்து; (எ-று.)

(வி-ரை) 'பல்கோடி சன்மப் பகையும்', 'பல்கோடி விக்கினமும்', 'பல்கோடி பாதகமும்' என்பவைகளில் பல்கோடி என்பன எண்ணிறந்த என்னும் பொருள்மேனின்றன வென்க. அவமிருத்து - அகால மரணம். சூனியம் முதலியன குறிக்கவே 'செய்வினை' என்றார்.

சூனியத்தை ஏவல் எனவும் கூறுவர், வினைத்தொகை. பசாசு-பைசாசம் என்பதன் சிதைவு. எவ்வகையிலுண்டான

அச்சமாயினும் அதைப் போக்குகின்ற கூர்மையான வேற்படையாகலின் 'அச்சம் அகற்றும் அயில்வேலும்' என்றார். ()

பல்விதமாம்,
ஆசுமுதல் நாற்கவியும் அட்டாவ தானமுஞ்சீர்ப்
பேசுமியல் பல்காப்பியத் தொகையும்-ஓசை
எழுத்துமுத லாம்ஐந் திலக்கணமுந் தோய்ந்து
பழுத்த தமிழ்ப்புலமை பாலித்து,

(ப-ரை) பல்விதம் ஆம் - பலவகை யுட்பிரிவுகளையுடைய, ஆசு முதல் நால்கவியும் - ஆசு முதலாகச் சொல்லப்படும் நால் வகைக் கவிகளையும், அட்டாவதானமும்-அஷ்டாவதானமும், சீர் பேசும் இயல் - சிறப்புக்களைச் சொல்லும் இலக்ஷணங்களை யுடைய, பல் காப்பியத் தொகையும் - பல காவியக் கூட்டங் களையும், ஓசை - ஒலிவடிவமாகிய, எழுத்து முதலாம் ஐந்து இலக்கணமும் தோய்ந்து-எழுத்து முதலாகச் சொல்லப்பட்ட ஐந்திலக்கணங்களிலும் படிந்து, பழுத்த - முதிர்ந்த, தமிழ்ப் புலமை பாலித்து-தமிழ்ப்புலமையைக் கொடுத்தருளி; (எ-று.)

(வி-ரை) 'ஆசுமுதல் நாற்கவி' என்பன-ஆசுகவி, மதுர கவி, சித்திரகவி, வித்தாரகவி என்பனவாம். அட்டாவதானம்- அஷ்டாவதானம். ஒரே சமயத்தில் எட்டுவகை வினுக்களுக்கு விடையிறுத்தல். அவதானம் என்பதற்கு கவனம், கிரகித்தல், மறப்பின்மை என்பன பொருள்களாம். 'எழுத்து முதலாம் ஐந்து இலக்கணம்'-எழுத்து, சொல், பொருள், யாப்பு, அணி யென்பன. பஞ்சவிலக்கணம் எனவும் படும்.

சகலகலாவல்லிமாலே

"நாற்கவியும் பாடும் பணியிற் பணித்தருள்வாய்" எனவும்,

"சொல் விற்பனமு மவதான முங்கவி சொல்லவல்ல
நல்வித்தையுந் தந்தடிமை கொள்வாய்"

என இவ்வாசிரியரே கலைமகள் மாட்டும் நாற்கவி, அஷ்டாவ தானம் முதலியவற்றை விரும்பித் துதித்துள்ளதும் ஈண்டு நோக்கத்தக்கது. புலமை - குணப் பண்புப்பெயர். புலம்- அறிவு, புலமை-அறிவாந்தன்மை. இப்பொருட்டாதல்,

குமரேச சதகம்

"கொங்கையில் லாதவட் கெத்தனை பணியுடைமை
கூடினும் பெண்மை யில்லை
கூறநிறை கல்வியில் லாமலெத் தனைகவிதை
கூறினும் புலமை யில்லை"

என்பதா னறிக. (234-238)

ஒழுக்கமுடன்,
இம்மைப் பிறப்பி லிருவா தனையகற்றி
மும்மைப் பெருமலங்கள் மோகித்துத்,

(ப-ரை) ஒழுக்கமுடன்-ஒழுக்கத்துடன், இம்மைப் பிறப் பில்-இப்பிறவியில், இருவாதனை அகற்றி - இரண்டு வாதனை களையும் போக்கி, மும்மைப் பெருமலங்கள் மோகித்து-மூன்று வகையான பெரிய மலங்களை அடக்கி; (எ-று.)

(வி-ரை) இருவாதனை - யான் எனதென்னும் செருக்கு. இவை, அகங்கார மமகாரம் எனவும் படும். அகங்காரம்-

நானென்கை; கொர்வம். அகம்-நான், காரம்-செயல்-மமகாரம்-மமதை எனவும் படும். மமதை-எனதென்கை. 'மும்மைப் பெருமலங்கள்'-ஆணவம், கன்மம், மாயை என்பனவாம். ()

தம்மைவிடுத்து,
தாயும் பழைய அடியா ருடன்கூட்டித்
தோயும் பரபோகந் துய்ப்பித்துச்-சேய
கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி ஆட்கொண்டு
அடியேற்கு முன்னின் றருள்.

(ப-ரை) தம்மை விடுத்து-தாம் என்பதை விட்டு, ஆயும்-தலைவனை ஆராய்கின்ற, பழைய அடியாருடன் கூட்டி-பழைய அடியவர்களுடன் சேர்த்து, தோயும் பரபோகம் துய்ப்பித்து-பக்குவர்களுக்குப் படிகின்ற பேரின்பத்தை உண்பித்து, சேய-சிவந்த, கடி ஏற்கும்-மணம் பொருந்திய, பூங்கமலக்கால்காட்டி-அழகிய தாமரை மலர்போலும் திருவடிகளைக்காட்டி, ஆட்கொண்டு-அடிமையாக ஆக்கிக்கொண்டு, அடியேற்கு - அடியவனை எனக்கு, முன் நின்று அருள் - எதிரிலே தோன்றித் திருக்கருணை செய்வாயாக; (எ-று.)

(வி-ரை) திருக்குறள்

"யானென தென்னுஞ் செருக்கறுப்பான் வானோர்க்
குயர்ந்த வுலகம் புகும்."

எனக் கூறியுள்ளபடி அகங்கார மமகாரங்களை விடுதலோடு நில்லாமல் தலைவனையும் ஆராய்வது பழைய அடியார்களின் செய்கையாதலால், 'தம்மை விடுத்தாயும் பழைய அடியார்'

என்றார். எனவே, இதனானே பசுபோதம் நீங்கவேண்டுமென்பதும் பதிபோதம் எய்தவேண்டுமென்பதும் பெறப்பட்டது. தொன்று தொட்ட அடியார்களுடன் சேர்க்கவேண்டும் என்பார், 'அடியாருடன் கூட்டி' என்றார். பக்குவர்க்குப் படிகின்ற பேரின்பத்தைத் தானும் நுகரும்படி செய்யவேண்டுமென்பார், 'தோயும் பரபோகந் துய்ப்பித்து' என்றார். தொன்று தொட்ட அடிமைத்திறம் பூண்டவர்களாகலின், 'பழைய அடியார்' என்றார்.

செம்மையையுடைய மணம் பொருந்திய அழகிய தாமரைமலர்போலும் திருவடிகளைக்காட்டவேண்டும் என்பார், 'சேய கடியேற்கும் பூங்கமலக் கால்காட்டி' என்றார். 'சேய' என்பதற்கு நண்ணற்கரிய எனப் பொருள் கூறினு மமையும். திருவடிகளைக் காட்டுவதோடுநில்லாமல் அடிமையாக்கிக்கொள்ள வேண்டுமென்பார், 'ஆட்கொண்டு' என்றார். அடிமையாக்கிக் கொண்டதோ டல்லாமல் அடியவனான எனக்கு எதிரே வந்து திருவருள் செய்யவேண்டு மென்பார், 'அடியேற்கு முன்னின்றருள்' என்றார்.

கந்தர் கலிவெண்பா மூலமும் விருத்தியுரையும்

முற்றிற்று

பூமகள்விலாசம் பிரஸ், சென்னை:—1937.